வியாழக்கிழமை 21 ஜூலை 2022

# தமிழருவி

அருவி: 02 | சாரல்: 27

தமிழின் தலைநிமிர்வு



## முள்கிரீடம் பூப்பூக்குமா?

காகத்தின் கூட்டில் குயில்முட்டை... கூவுமா? கரையுமா?

வாழ்வின் வழித்தடங்களில் என்னோடு வாழ்வீர்கள் ஆசானே...

ஜனநாயகம் ஜனனமாவது எப்போது?

புலிட்சர் விருதுக்கு குழந்தையிடமிருந்து ஒரு மடல்...

மனச்சோர்வு போக்கும் மாங்கனி

# தினேஷ் நாளை பிரதமராக பதவியேற்பு



இலங்கையின் புதிய பிரதமராக தினேஷ் குணவர்த்தன நாளை பதவியேற்கவுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நாளை வெள்ளிக்கிழமை தினேஷ் குணவர்த்தன பதவியேற்கவுள்ளார்.

இதேவேளையில் நாளை காலை 9 மணிக்கு புதிய அமைச்சரவையும் பதவியேற்க உள்ளது.

இந்த பதவியேற்பு நிகழ்வு பிரதமரின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக கொழும்பு செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

# பாதுகாப்பு அமைச்சின் தலைமையகத்துக்கு சென்ற ரணில்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று வியாழக்கிழமை பாதுகாப்பு அமைச்சின் தலைமையகத்துக்கு சென்றார்.

பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்த ரணிலை, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ன வரவேற்றார். அங்கு முப்படைத் தளபதிகளையும் ரணில் சந்தித்து பேச்சு நடத்தினார்.

ஜனாதிபதியாக ரணில் பதவியேற்ற பின்னர் முதன் முறையாக அரசு சார்ந்த இடமொன்றுக்கு சென்ற சந்தர்ப்பம் இது வென்று கொழும்பு செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.



# ஜனாதிபதியாக ரணில் பதவிப்பிரமாணம்!

## 29 வருடங்களுக்கு பின் ஐ. தே. க. நிறைவேற்று அதிகாரத்தை தனதாக்கியது





இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். பதவிப்பிரமான நிகழ்வு பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது.

இதனையடுத்து, காலை 10.10 அளவில் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில், இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இந்த நிகழ்வு மிகவும் எழிமையாக நடைபெற்றது. முப்படைகளின்தளபதிகளும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் மட்டுமே இதற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று பாராளுமன்றத்தில் நடந்த ஜனாதிபதி தேர்தல் வாக்கெடுப்பில் அதிகபட்சமாக 134 வாக்குகளை பெற்று ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றிருந்தார். ஆறு தடவைகள் பிரதமராக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க, நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக முதன் முறையாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். கோட்டாபய ராஜபக்ச பதவி விலகியதால், நாடாளுமன்றம் ஊடாக 8 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவு செய்யப்பட்டார்.

சுமார் 29 ஆண்டுகளுக்கு பிறகு ஐ.தே.க. உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார். பதவியேற்பு வைபவத்தில் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். ஜனாதிபதியின் செயலாளராக சமன் எக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

# ஜனாதிபதி பதவியேற்பு நிகழ்வில் மின்தடை!

## இரகசியப் பொலிஸார் விசாரணை

ஜனாதிபதி சத்தியப்பிரமாணம் செய்யும் போது நாடாளுமன்ற வளாகத்தில் ஏற்பட்ட மின் தடை தொடர்பில் விசாரணை நடத்த இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

8ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பதவியேற்பு விழாவை சுயாதீன தொலைக்காட்சி நேரடியாக ஒளிபரப்பவும், ஏனைய தொலைக்காட்சிகள் மூலம் ஒரே நேரத்தில் ஒளிபரப்பவும் திட்டமிடப்பட்டிருந்தது. ஜனாதிபதி சிவப்புக் கம்பளத்தில் நாடாளுமன்ற வளாகத்திற்குள் நுழைந்ததும் நேரடி ஒளிபரப்பு நிறுத்தப்பட்டது.

நாடாளுமன்ற வளாகத்தில் ஏற்பட்ட திடீர் மின்தடை காரணமாக நேரடி ஒளிபரப்பு நிறுத்தப்பட்டதாக பின்னர் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற வளாகத்தில் மின் தடை ஏற்பட்டால் இரண்டு நிமிடங்களுக்குள் ஜெனரேட்டர்கள் தானாக இயங்குவது வழக்கம் எனவும், ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்து கொள்ளும் போது சுமார் பத்து நிமிடங்களுக்கு மின்சாரம் தடைப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக, தொலைக்காட்சி சேவைகளில் நேரடி ஒளிபரப்பு வழங்க முடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

# தனி வழி சென்ற ஜி.எல்.பீரிஸ் மற்றும் டலஸ் பேரமுனவில் இருந்து நீக்கம்?

ஜனாதிபதி தெரிவின் போது, தனி வழி சென்ற ஜி.எல்.பீரிஸ் மற்றும் அழகப்பெரும ஆகியோர் பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து நீக்கப்படவுள்ளதாக சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த இணையத்தளத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்கும் கட்சியின் தீர்மானத்தை மீறியதற்காக பொதுஜன பெரமுனவின் முக்கியமான இருவருக்கு எதிராக ஒழுங்காற்று விசாரணையை தொடங்கவுள்ளதாகவும் அவர்களை அப்பதவிகளில் இருந்து நீக்குவதற்கும் அக்கட்சி தீர்மானித்துள்ளது.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் பொருளாளர் டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொதுஜன பெரமுனவின் பேச்சாளர் இணையத்தளத்துக்கு தெரிவித்துள்ளார்.

அரசதலைவர் தேர்தலில் போட்டியிட்டமை மற்றும் கட்சி விதிகளை மீறி விமர்சித்தமை தொடர்பாக டலஸ் அழகப்பெரும மீது குற்றம் சாட்டப்படவுள்ளது. டலஸ் அழகப்பெருமவுக்கு தனது ஆதரவினை வெளியிட்ட குற்றச்சாட்டையும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் எதிர்கொள்வார்.

இரு முக்கிய பிரமுகர்களான ஜி.எல்.பீரிஸ் மற்றும் அழகப்பெரும ஆகியோர் கட்சியில் இருந்தும் நீக்கப்படலாம் என்றும் அந்த பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தம்மிக்க பேரேரா இராஜினாமா

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளதாக அக்கட்சியின் வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

# அறிவில்லாத போராட்டத்தால்தான் ரணில் ஜனாதிபதியாகியிருக்கிறார்

## போராட்டக்காரர்களை தாக்கும் விமல் வீரவன்ச

வழிமுறை திட்டமோ, அறிவோ இல்லாத போராட்டம் காரணமாக இறுதியில் ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதியாக பதவிக்கு வந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளதுடன் போராட்டக்காரர்கள் தொடர்பில் கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டு மக்கள் போராட்டம் நடத்திய நேரத்தை தவிர, அதற்கு முன்னர் ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்று நாங்கள் கூறவில்லை.

அப்படி நடந்தால், ஜனாதிபதி பதவி தொடர்பில் அராஜக நிலைமையேற்படும் என்பதே இதற்கு காரணம். ஏன் இந்த விடயம் இளம் போராட்டக்காரர்களுக்கு புரியவில்லை.

அவர்களுக்கு அதனை புரிந்து கொள்ளும் அளவுக்கு அறிவோ, தெளிவோ புத்தியோ இருந்ததாக எமக்கு தெரியவில்லை. போராட்டக்காரர்கள் தமது மாளிகையை முற்றுகையிட்ட போது துப்பாக்கி சூடு நடத்துமாறு உத்தரவிடாத ஜனாதிபதி வீட்டுக்கு சென்றுள்ளார்.

ஞானமில்லாத, நோக்கமில்லாத, அறிவில்லாத போராட்டக்காரர்களின் செயற்பாடுகளின் பிரதிபலனாக ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவிக்கு வந்துள்ளார். ரணில் விக்ரமசிங்கவுக்கு ஏன் வாக்களிக்கப்பட்டது. அதற்கு பொதுவான காரணம் இருக்கின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கும் தமது பாதுகாப்பு தொடர்பான மனநிலை. எல்லாவற்றுக்கும் முதல் இந்த நிலைமையை இல்லாமல் செய்ய வேண்டும்.

இந்த மனநிலையை ஏற்படுத்தியது யார். போராட்டக்காரர்கள். இரவு வீடுகளுக்கு சென்று தீயிட்ட குழுவினர். நாடாளுமன்றத்தை முற்றுகையிட சுனில் ஹந்துன்நெத்தி, லால் காந்த போன்ற சென்றிருந்தனர். நாடாளுமன்றத்தை மற்றுமொரு ஜனாதிபதி செயலகமாகவும் ஜனாதிபதி மாளிகையாகவும் மாற்ற அவர்கள் முயற்சித்த நேரத்தில் அதற்கு இடமளிக்காது, அவசரகாலச் சட்டம், ஊரடங்குச்சட்டத்தை நடைமுறைப்படுத்தி, பாதுகாப்பு பிரிவினருக்கு உத்தரவுகளை பிறப்பித்தது, ரணில் என்று அவர்கள் நினைக்கின்றனர்.

அரசியல் நிகழ்ச்சி நிரல், எதிர்கால நோக்கம், விமர்சன ரீதியிலான வாசிப்பு என்று எதுவுமில்லாத காதில் தோடுகளை அணிந்த தாடிகாரர்கள் வீரர்களாக மாறி, அழகான கதைகளை கூறி, சமூக செயற்பட்டாளர்கள், நடிகர், நடிகைகள் வந்து தூண்டி விட்டு, இறுதியில் ரணிலை ஜனாதிபதி பதவிக்கு கொண்டு வர வழியை ஏற்படுத்தினர் எனவும் விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்.

# மயந்த திசாநாயக்க இராஜினாமா!

ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் அணியின் தலைவர் பதவியில் இருந்து மயந்த திசாநாயக்க இராஜினாமா செய்துள்ளார்.

இந்த இராஜினாமா கடிதம் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மயந்த திஸநாயக்க தெரிவித்தார்.

கட்சியுடன் எதிர்கால வேலைகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் உட்பட மற்றுமொருவருக்கு பிடியாணை

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே மற்றும் ரத்கரவே ஜினரத்ன ஆகியோருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இவர்களை கைது செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு சட்டவிரோதமாக ஒன்றுகூடல் ஏற்பாடு செய்தமை மற்றும் தேவையற்ற இடையூறுகளை ஏற்படுத்தியமை தொடர்பில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்றுக்காக மாவட்ட நீதிமன்றங்களில் ஆஜராகாதமைக்காக அவர்களுக்கு இன்று பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



# இலங்கைக்கு உதவிபுரிவதற்கு ஏனைய நாடுகள் முன்வர வேண்டும்

## வலியுறுத்துகிறது ஐ.நா.சபை




சர்வதேச நாணய நிதியம், தனியார் கடன் வழங்குநர்கள் மற்றும் ஏனைய நாடுகள், இலங்கைக்கு உதவி புரிய முன்வர வேண்டும் என வெளிநாட்டு கடன் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் சுயாதீன விசேட நிபுணர் பேராசிரியர் அட்டியா வரிஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலே இந்த வலியுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தற்போது பாரிய நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்து வருகிறது. இந்நிலை முழு நாட்டு மக்களின் உரிமைகளுக்கும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கடன் நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் நாடுகள் மனித உரிமைகளை நிறைவேற்றும் விடயங்களில் பாதிப்பை ஏற்படுத்துவதாக வெளிநாட்டு கடன் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் சுயாதீன விசேட நிபுணர் பேராசிரியர் அட்டியா வரிஸ் தெரிவித்துள்ளார்.




செய்தி:-

ரணில் கோ ஹோம் போராட்டக்காரர்கள் போராடுவதற்காக விகாரமகாதேவி பூங்கா ஒதுக்கப்பட்டுள்ளது. அவர்கள் தமது போராட்டத்தை அங்கே தொடரலாம் என ஜனாதிபதி கட்சி தலைவர்களினுடனான சந்திப்பின்போது தெரிவித்ததாக மனோகணேசன் தெரிவிப்பு.

**ரணகளமா இருக்க வேண்டிய போராட்டத்தை கிளுகிளுப்பாக்கும் முயற்சியா இருக்குமோ?**

## ஐ.தே.கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினராக யார்?



ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டதையடுத்து, வெற்றிடமாகியுள்ள ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு, சாகல ரத்னாயக்க, அகிலவிராஜ் காரியவசம், ருவன் விஜேவர்தன ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.

எனினும் இந்த மூவரில் சாகல ரத்னாயக்க அல்லது ருவன் விஜேவர்தன ஆகிய இருவருள் ஒருவருக்கு தேசிய பட்டியல் உறுப்பினர் வாய்ப்பு கிடைக்கவுள்ளதெனஅரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஜனாதிபதி மற்றும் அலரி மாளிகை உட்பட பிரதமரின் அலுவலகத்தை சேதப்படுத்திய 70 பேர் அடையாளம்!

ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை மற்றும் பிரதமர் அலுவலகம் ஆகியவற்றுக்கு சேதம் ஏற்படுத்தி, அங்கிருந்த பொருட்களை கொள்ளையிட்டமை தொடர்பில் இதுவரையில் சுமார் 70 பேரை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளதாக கூறப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு தீவைத்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களும் அதில் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேரடி காணொளி காட்சிகளை சமூக வலைத்தளங்கள் வழியாக காண்பித்து மக்களை தூண்டிய நபர்கள் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இவர்களில் பெரும்பாலானவர்கள் அரசியல் கட்சிகளுடன் தொடர்புடையவர்களென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசாங்கத்துக்குச் சொந்தமான ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை மற்றும் பிரதமரின் அலுவலகம் என்பன சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன் அங்கிருந்த பெறுமதியான பொருட்கள் மற்றும் ஆவணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஊடகங்களில் வெளியிடப்பட்ட காணொளிகள், சிசிடிவி காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு இவர்களுக்கு எதிரான ஆதாரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும், விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்தின் மீது தாக்குதலை மேற்கொண்ட நபர் ஒருவர் நாட்டை விட்டு தப்பியோடியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

எனவே ஏனையவர்களும் நாட்டை விட்டு வெளியேறாமல் இருப்பதற்காக இந்நபர்களுக்கு எதிராக நீதிமன்றத்தினூடாகப் பயணத்தடையை பெற்றுக்கொள்ள பொலிஸார் தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## சிபெட்கோ எரிபொருள் விநியோகம் இன்று முதல் ஆரம்பம்

வாகனத்தின் பதிவு எண்ணின் கடைசி இலக்கத்தின்படி, சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து இன்று (21) முதல் எரிபொருள் விநியோகிக்கப்படும் என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

வாகனப் பதிவு எண்ணின் இறுதி இலக்கம் 0, 1, 2 ஆக இருந்தால், செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளில் எரிபொருள் வழங்கப்படுகிறது.

இறுதி இலக்கம் 3, 4, 5 எனில், வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில், இறுதி இலக்கம் 6, 7, 8, 9 ஆக இருந்தால், திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் எரிபொருள் விநியோகிக்கப்படும் என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. .

இந்த எரிபொருள் விநியோக திட்டம் இன்று முதல் எதிர்வரும் 25ஆம் திகதி வரை அமுலில் இருக்கும்.

இதன்படி, மோட்டார் சைக்கிள்களுக்கு அதிகபட்சமாக 1,500 ரூபாவும், முச்சக்கர வண்டிகளுக்கு 2,000 ரூபாவும், ஏனைய வாகனங்களுக்கு 7,000 ரூபாவும் எரிபொருள் வழங்கப்படும்.

இதேவேளை, இன்று முதல் கொழும்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முன்னோடித் திட்டமாக தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் எரிபொருள் விநியோகிக்கப்படும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டம் இன்று 6 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அமுல்படுத்தப்படவுள்ளதுடன், எதிர்வரும் நாட்களில் ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் முறையாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் நாடு முழுவதும் எரிபொருள் விநியோகிக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை 30 இலட்சம் வாகனங்கள் தேசிய எரிபொருள் அனுமதிப் பத்திரத்தை பெற்றுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

# நாம் டளஸை போட்டியிடச் செய்தோம், நாமும் வாக்களித்தோம், ஆனால் தோல்வியடைந்துவிட்டார்

நாம் டலஸை போட்டியிடச் செய்தோம். நாமும் வாக்களித்தோம் ஆனால் தோல்வியடைந்துவிட்டார் என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

அதிக வாக்குகள் கிடைத்தமையால் ரணில் விக்கிரமசிங்க வெற்றிப் பெற்றார். எதிர்காலத்தில் என்ன நடக்குமென்று நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என தெரிவித்த அவர், எந்த அரசாங்கம் வந்தாலும் நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்றார்.

இது மக்கள் ஆணை இல்லை என பலரும் கூறினாலும் எம்மை பொறுத்தவரை இதுதான் மக்கள் ஆணை என்றார்.

எனவே ஆர்ப்பாட்டக்காரர்களின் போராட்டங்கள் போதுமென்று தான் நினைப்பதால் காலி முகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் தற்போது இதனை புரிந்துகொண்டு அங்கிருந்து வெளியேறி உங்கள் தொழில்களை செய்யுங்கள் என்றார்.



## வவுனியாவில் கமநல சேவை திணைக்களத்தினரால் விவசாயிகளுக்கு யூரியா உரம் விநியோகம்

வவுனியா மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையினை மேற்கொண்ட விவசாயிகளுக்கு யூரியா உரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து கமநல சேவை திணைக்களத்தினருக்கு கிடைக்க பெற்ற 49.5 மெட்ரிக் தொன் உரத்தினை விவசாயிகளுக்கு பங்கீட்டு வழங்கும் நடவடிக்கை கமநல சேவை திணைக்கள அலுவலக உதவியாளர் எம். கிருஸ்குமார் தலைமையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

50 நாட்களுக்கு குறைந்த பயிர்களுக்கு ஏக்கருக்கு 40 கிலாே யூரியாவும் 50 நாட்களுக்கு மேற்பட்ட பயிர்களுக்கு ஏக்கருக்கு 20 கிலோ யூரியாவும் ஒரு கிலோ யூரியா 200 ரூபாய் வீதம் 20 கிலோ என்ற விகித்தின் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றது.

அரசாங்கத்தினால் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட யூரியா உரமே விவசாயிகளுக்கு இவ்வாறு வழங்கப்பட்டு வருகின்றது. இந்த உரம் வழங்கும் முதற்கட்ட நடவடிக்கை செட்டிக்குளம், அருவித்தோட்டம் , நேரியகுளம் , பெரியநொச்சிக்குளம் ஆகிய இடங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளன

இந்த நிலையில் தனியார் கடைகளில் 50 கிலோ யூரியா 38 ஆயிரம் தொடக்கம் 40 ஆயிரம் வரையில் விற்பனையாகி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது



# தமிழ் ஓலை

மின்னஞ்சல்: aruvitamil812@gmail.com
வாட்ஸ் ஆப் இலக்கம்: 0094 768 320 733


## அரசியல் அநாதைகளான மக்களும் அடுத்தடுத்து அரங்கேறும் நாடகங்களும்

நேற்றைய விடியலில் அத்தியாவசிய பொருட்களுக்கு மட்டுமே மக்களை வரிசையில் காணமுடிந்தது. வாக்குப்பெட்டிகளை பாதுகாப்போடு கொண்டு செல்லும் பேருந்துகளையோ பரபரப்பாக இயங்கும் தெரிவத்தாட்சி அலுவலகர்களையோ காணமுடியவில்லை. விடிய விடிய தேர்தல் முடிவுகளுக்காக விழித்திருக்கும் சுவாரஷ்யம் எதுவும் இல்லாமல் மக்களின் பங்குபற்றல் இல்லாமல் மக்கள் பிரதிநிதிகளின் உள்வீட்டு புகைச்சல்களுடன் இலங்கையின் அதி உச்ச அதிகாரத் தலைவன் நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளான்.

இரகசிய வாக்கெடுப்பில் பங்குகொண்ட கணிசமான மக்கள் தமக்கு வாக்களித்த மக்களிடம் இருந்து அந்நியப்பட்டமை மாத்திரமல்ல கட்சித்லைமைகளுக்குக்கூட கட்டுப்படாத யதார்த்தத்தை வாக்களிப்பு முடிவுகள் தெளிவாக காட்டி நிற்கின்றன. மக்கள் தீர்ப்புக்கப்பால் அரசியல் யாப்பு என்பதே இங்கு பலம் வாய்ந்ததென்பதை முழுநாடும் வேறு வழியின்றி ஏற்றுக்கொண்ட தருணம் இது. நாட்டின் புதிய தலைவருக்கு அமெரிக்கா தனது முதல் வாழ்த்தினை பதிவு செய்துள்ள அதே வேளை ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு உதவிபுரிய ஏனைய நாடுகள் முன்வரவேண்டுமென வலியுறுத்தியுள்ளது. இது புதிய ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கவுக்கு மேற்குலகின் ஆசீர்வாதம் கிடைத்திருப்பதை கோடிட்டுக்காட்டுகிறது. இதேவேளை பொருளாதார நெருக்கடியின் மத்தியில் பதவியேற்றிருக்கும் புதிய ஜனாதிபதி முன்னுள்ள சவால்கள் குறைத்து மதிப்பிடக்கூடியதல்ல.

இன்று போராட்டங்களில் பங்குபெற்ற பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் உட்பட மேலும் ஒருவருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. போராட்டத்தை தொடர விகாரமாதேவி பூங்காவிற்கு செல்லுமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இது புதிய ஜனாதிபதியை வலுவாக எதிர்க்கும் போராட்டக்காரர்களுக்கு வலுவாக விடுக்கப்படும் மறைமுக எச்சரிக்கையாகும்.

கட்சிகளிடையே கட்டுக்கோப்பின்மையையும் இளம்துடிப்பான உறுப்பினர்கள் கட்சித்தலைமை மேல் அதிருப்தியில் இருப்பதற்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் அணித்தலைவர் மயந்த திசாநாயக்கவின் இராஜினாமா நல்ல உதாரணமாகும். இது தமிழருக்கான அரசியல் தலைமையை முன்னெடுக்கின்ற தமிழ்த்தலைமைகளுக்கான படிப்பினையும் வலுவான எச்சரிக்கையுமாகும். மாறிவரும் உலக ஒழுங்கில் இளைய சமூகத்தின் அரசியல் பற்றிய புரிதல் அபாரமானது. தன்னிச்சையாக முடிவுகளை எடுக்கும் பிளவுண்ட தமிழ்த்தரப்புகளை நாளை இவர்கள் கேள்விக்குட்படுத்தக்கூடும்.




# முள்கிரீடம் பூப்பூக்குமா?

**பவித்திரா**



**இலங்கையின்** 8 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று வியாழக்கிழமை பதவியேற்றுள்ளார். 2020 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் படுதோல்வியடைந்து – ஐ.தே.கவுக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் எம்.பி. பதவி மூலம் பாராளுமன்றத்துக்கு வந்து, பிரதமர் பதவியைப் பெற்று இப்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியையும் கைப்பற்றியிருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

தொடர்ச்சியான தோல்விகளால் கட்சியின் தலைமைப் பதவியில் தொடர்ந்தும் இருப்பதில் கடுமையான எதிர்ப்புக்களைச் சந்தித்தவர் ரணில். தலைமைப் பதவி காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து சஜித் பிரேமதாச தலைமையிலான அணி பிரிந்து சென்று ஐக்கிய மக்கள் சக்தி என்ற கட்சியையும் அமைத்தது. இன்று பிரதான எதிர்க்கட்சியாகவும் இருக்கிறது. சஜித்தின் பிளவுதான் கடந்த பொதுத் தேர்தலில் ரணிலுக்கு கிடைத்த பெரும் தோல்விக்கு பிரதான காரணம்.

கட்சிக்கு எந்தவொரு ஆசனமும் கிடைக்காத நிலையில் – தேசியப்பட்டியல் மூலமாக கிடைத்த ஒரேயொரு ஆசனத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றம் வந்த ரணில் இன்று ஜனாதிபதியாகியிருக்கின்றார்.'அரசியல் என்பது வாய்ப்புக்களை சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதுதான்.' இனிமேல் ரணிலுக்கு அரசியலில் இடமிருக்கப்போவதில்லை என அனைவருமே நம்பியிருந்த ஒரு நிலையில், சந்தர்ப்பங்களை மதிநுட்பத்துடன் பயன்படுத்தி அரசியலின் உச்ச பதவிக்கு வந்திருக்கின்றார் ரணில்.

ரணிலின் வீழ்ச்சிக்கு சஜித் பிரேமதாச எந்தளவுக்கு காரணமாக இருந்தாரோ அதேபோல அவரது தற்போதைய எழுச்சிக்கும் சஜித்தான் காரணம். மகிந்த ராஜபக்ச மே 9 ஆம் திகதி பிரதமர் பதவியைத் துறந்த போது, அந்தப் பதவியைப் பொறுப்பேற்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் சஜித் பிரேமதாசவைத்தான் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய முதலில் அழைத்தார். ஆனால், நாடு என்றுமில்லாத பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் நிலையில் பிரதமர் பதவியைப் பொறுப்பெடுப்பது தனது அரசியல் எதிர்காலத்துக்கு சவாலாகிவிடலாம் என்பதால் அவர் அதனை மறுத்தார். கிடைத்த சந்தர்ப்பத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் உபாயம் சஜித்துக்கு தெரிந்திருக்கவில்லை.

அதனையடுத்தே ரணிலின் பக்கம் கோட்டாபயவின் கவனம் திரும்பியது. அதனைவிட, தற்போது ரணில் ஜனாதிபதியாக வந்திருப்பதற்கும் சஜித்தின் தயக்கமே காரணம். தான் போட்டியிடுவதை இறுதி நேரத்தில் தவிர்த்து டல்லஸ் அழகப்பெருமவை களமிறக்கியதன் மூலம் – அவரது கட்சியினரே இறுதி வேளையில் அவரை ஆதரிக்க தயங்கினார்கள். சஜித்தின் ஆதரவாளர்கள் சுமார் 14 பேர் ரணிலுக்கு வாக்களித்ததாகச் சொல்லப்படுகின்றது.

> "ரணில் விக்ரமசிங்க வெற்றிபெறுவார் என்பது ஓரளவுக்கு எதிர்பார்க்கப்பட்டது என்ற போதிலும், இந்தளவு பெரும்பான்மை அவருக்கு கிடைக்கும் என்பது எதிர்பார்க்கப்படாத ஒன்றுதான். பெரும்பாலான சிறுபான்மையினக் கட்சிகளும், ஐக்கிய மக்கள் சக்தி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பன டல்லஸ் அழகப்பெருமவை ஆதரிப்பதென முடிவெடுத்திருந்த போதிலும் அந்தக் கட்சிகளின் பல உறுப்பினர்கள், கட்சித் தலைமையின் முடிவை மீறி ரணிலுக்கு வாக்களித்தமையால்தான் இந்தளவு அதிகளவு வாக்குகளை அவரால் பெறமுடிந்தது."

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஜனாதிபதிப் பதவிக்கான இரகசிய வாக்கெடுப்பில் ரணில்



விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக 134 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்திருந்தனர். டலஸ் அழகப்பெருமவுக்கு 82 வாக்குகளும், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு 3 வாக்குகளும் அளிக்கப்பட்டன. நான்கு வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரு எம்.பிக்கள் வாக்களிப்பை புறக்கணித்தனர்.

மிகுதி 21 ஆம் பக்கத்தில்...

## வரலாறு காணாத வெப்ப அலை:

# போர்த்துக்கல், ஸ்பெயினில் 1000 ஐ தாண்டிய உயிரிழப்பு





போர்த்துகல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் கடந்த ஒரு வாரத்தில் கடும் வெப்ப அலை காரணமாக பலியானவர்கள் எண்ணிக்கை 1000-ஐ தாண்டியுள்ளது.

ஐரோப்பிய நாடுகள் வரலாறு காணாத கடும் வெப்ப அலையை எதிர்கொண்டுள்ளன. இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகளில் ஜூலை தொடக்கம் முதலே வெப்பத்தின் அளவு அதிகரித்து வருகிறது. திங்கட்கிழமை மட்டும் லண்டனில் 43 செல்சியஸ் வெப்ப நிலை பதிவாகியுள்ளது.

இந்த நிலையில் போர்த்துகல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் மட்டும் கடந்த ஒரே வாரத்தில் கடும் வெப்பம் காரணமாக பலியானவர்கள் எண்ணிக்கை 1000-ஐ தாண்டியுள்ளது.

இதுகுறித்து ‘தி கார்டியன்’ வெளியிட்ட செய்தியில், போர்த்துகலில் கடந்த வாரத்தில் மட்டும் 659 பேர் வெப்ப அலைக்கு பலியாகினர். போர்த்துகல்லின் அண்டை நாடான ஸ்பெயினில் 368 பேர் பலியாகினர்.

ஜூலை 10-ஆம் தேதி முதல் கடும் வெப்பம் நிலவுவதால் இரு நாடுகளிலும் தொடர்ந்து பலி எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அங்கு 38 டிகிரி செல்சியஸ் முதல் 43 டிகிரி செல்சியஸ் வரை வெப்ப நிலை பதிவாகிறது என்று கூறப்பட்டுள்ளது.

## நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரித்தானிய அரசதரப்பு வெற்றி!



பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சனின் அரசாங்கம் ஜூலை 18ஆம் திகதி தனக்குத்தானே அழைப்பு விடுத்திருந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றது.

ஆளும் கன்சர்வேடிவ் கட்சியின் உறுப்பினர்கள், தேசியத் தேர்தலைத் தூண்டுவதைத் தவிர்ப்பதற்காக அமைச்சர்களுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

கடந்த 7ஆம் திகதி பிரதமர் பொரிஸ் ஜோன்சன் பதவி விலகியிருந்தாலும், எதிர்க் கட்சியான தொழிலாளர் கட்சி வலுக்கட்டாயமாக விரைவில் வெளியேற்ற வேண்டுமென வழிமொழிந்தது. ஆனால், பிரதமர் அவர் செல்வதாக ஏற்கனவே கூறியிருப்பதால் இது தேவையற்றது என்று அரசாங்கம் எதிர்த்தது. அதற்குப் பதிலாக பழமைவாதிகள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கைப் பிரேரணையை முன்மொழிந்தனர்.

எனினும், ஜோன்சன் அவராக முன்வந்து, நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த அழைப்பு விடுத்து அதற்கான பணிகள் நடைபெற்றன. இதில், நேற்றிரவு நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பு பற்றிய விவாதம் அந்நாட்டின் நாடாளுமன்ற வலைதளத்தில் ஒலிபரப்பப்பட்டது.

இதில் அரசாங்கம் 349க்கு 238 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இதனால், பிரித்தானியாவில் பொது தேர்தல் நடைபெறுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் தொடக்கத்தில் கன்சர்வேட்டிவ் கட்சியால் புதிய பிரதமர் தேர்ந்தெடுக்கப்படும் வரை பிரதமர் பொரிஸ் ஜோன்சன் பிரதமராக செயற்படுவார்.

## மத்திய கிழக்கில் பதற்றத்தை உருவாக்க அமெரிக்கா மீண்டும் முயற்சி: ஈரான்

மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றத்தை உருவாக்க அமெரிக்கா மீண்டும் முயற்சிப்பதாக ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கடந்த வாரம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பயணம் செய்தார். பாலஸ்தீனம், அமீரகம், சவுதி உள்ளிட்ட நாடுகளுக்கு அரசியல் ரீதியாக அவர் பயணம் மேற்கொண்டார். இந்தப் பயணத்தில் அமெரிக்கா - மத்திய கிழக்கு நாடுகள் இடையே உள்ள உறவுக் குறித்து பைடன் ஆலோசனை நடத்தினார்.

இந்த நிலையில், பைடனின் இந்தப் பயணத்தை ஈரான் கடுமையாக விமர்சித்துள்ளது.

இதுகுறித்து அந்நாட்டு வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் நஸர் கனானி வெளியிட்ட அறிக்



கையில் , ஈரானோபோபியா (ஈரான் குறித்து அச்சம்) மூலம் பிராந்தியம் முழுவதும் பதற்றங்களையும் நெருக்கடிகளையும் உருவாக்க அமெரிக்கா மீண்டும் முயற்சிக்கிறது.

அணுகுண்டை முதலில் பயன்படுத்திய நாடு அமெரிக்கா. ஆனால், அமெரிக்காவோ மற்ற நாடுகளின் அணுசக்தி விவகாரங்களில் தொடர்ந்து தலையிடுகிறது; ஆயுத மோதல்களைத் தொடங்கியுள்ளது. பிராந்தியத்தில் ஆயுதங்களை விற்பனை செய்து வருகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா விதிக்கும் கட்டுப்பாடுகளுக்கும் ஈரான் ஒப்புக்கொண்டால், அணு ஆயுத ஒப்பந்தத்தில் இணைவதில் அமெரிக்கா தயாராக இருப்பதாகவும், அந்நாட்டின் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை சிலவற்றை நீக்குவதாகவும் ஜோ பைடன் முன்னரே தெரிவித்தார்.

எனினும், அணு ஆயுத ஒப்பந்தத்தில் இதுவரை எந்த முடிவும் இரு நாடுகளிடையே எட்டப்படாமல் உள்ளது. இந்த நிலையில், அமெரிக்காவை ஈரான் விமர்சித்துள்ளது கவனத்துக்குரியது.

## உலகில் ஆழமான கப்பல் விபத்து

### அமெரிக்க கடற்படைக்கப்பல் கண்டுபிடிப்பு

உலகில் நடைபெற்ற மிக ஆழமான கப்பல் விபத்து என்ற கின்னஸ் உலக சாதனையை இந்த விபத்து முறியடித்துள்ளது.

இரண்டாம் உலகப் போரின் போது மூழ்கடிக்கப்பட்ட அமெரிக்க கடற்படையின் கப்பல் பிலிப்பைன்ஸில் கடல் மட்டத்திலிருந்து கிட்டத்தட்ட 7,000 மீட்டர் (23,000 அடி) கீழே கண்டுபிடிக்கப்பட்டது.

பிலிப்பைன்ஸின் மூன்றாவது பெரிய தீவுப்பகுதியான சமர் தீவில், கடலின் மேற்பரப்பிலிருந்து 6,865 மீட்டர் (அதாவது 21,521 அடி) ஆழத்தில் இந்த கப்பல் கடந்த மாதம் கண்டுபிடிக்கப்பட்டது. அக்டோபர் 25, 1944 அன்று மத்திய சமர் தீவில் நடந்த போரின் போது அமெரிக்க கடற்படையின் கப்பல் சேதமடைந்தது. இந்த நிலையில், இந்தக் கப்பல் மூழ்கிய இடம் குறித்த துப்புகளை அடிப்படையாக கொண்டு, கடலுக்கடியில் நீர்மூழ்கிக் கப்பலில் தேடும் பணியில் ஈடுபட்ட குழு ஒன்று இந்த மூழ்கிய கப்பலின் பாகங்களை கண்டுபிடித்துள்ளது. இந்நிலையில், உலகில் நடைபெற்ற மிக ஆழமான கப்பல் விபத்து என்ற கின்னஸ் உலக சாதனையை இந்த விபத்து முறியடித்துள்ளது. இதனை கின்னஸ் நிர்வாகம் அறிவித்துள்ளது.



அமெரிக்க கடற்படை பதிவுகளின்படி, ‘ஜான் சி பட்லர்- யு.எஸ்.எஸ் சாமுவேல் பி ராபர்ட்ஸ்’ என்பதே இரண்டாம் உலகப் போரின் போது விபத்துக்குள்ளான இந்தக் கப்பலின் பெயராகும்.

இதற்கு முன்னர் கிட்டத்தட்ட 6,500 மீட்டர் கடல் ஆழத்தில், 2021இல் கண்டுபிடிக்கப்பட்ட யுஎஸ் எஸ் ஜான்ஸ்டன் என்ற கப்பல் விபத்து தான் உலகின் மிக ஆழமான கப்பல் விபத்து என அடையாளம் காணப்பட்டது. அந்தக் கப்பலில், இரண்டாம் உலகப்போரின் போது பயன்படுத்த கொண்டு செல்லப்பட்ட வெடிமருந்துகள் இன்னும் வெடிக்கும் நிலையில் இருப்பதும் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

## எலான் மஸ்க் மீது டுவிட்டர் நிறுவனம் தொடர்ந்த வழக்கு

### அக்டோபர் மாதம் விசாரணை

உலகின் பெரும் பணக்காரரான எலான் மஸ்க் சமூகவலைதளமான டுவிட்டரை வாங்க முடிவு செய்தார். இதையடுத்து, 44 பில்லியன் டாலர்களுக்கு டுவிட்டரை எலான் மஸ்கிடம் விற்க டுவிட்டர் நிர்வாகம் கடந்த ஏப்ரல் மாதம் ஒப்பந்தம் செய்தது.

இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு டுவிட்டர் நிறுவன பங்குகளை எலான் மஸ்கிற்கு மாற்றும் பணிகள் நடைபெற்று வந்தது. இதற்கிடையே, டுவிட்டரில் உள்ள போலி கணக்குகள், பயன்படுத்தப்படாத நிலையில் உள்ள கணக்குகள் உள்பட சில விவரங்களை தரும்படி டுவிட்டர் நிர்வாக குழுவிடம் எலான் மஸ்க் கோரிக்கை விடுத்தார்.

ஆனால், இரண்டு மாதங்களாகியும் எலான் மஸ்க் கேட்ட விவரங்களை தர டுவிட்டர் நிறுவனம் மறுத்து வந்தது. இதனை தொடர்ந்து, டுவிட்டர் நிறுவனத்தை வாங்கும் ஒப்பந்தத்தை கைவிடுவதாக எலான் மஸ்க் கடந்த 9-ம் தேதி அதிரடியாக அறிவித்தார். போலி கணக்குகள் தொடர்பாக கேட்ட தகவல்களை டுவிட்டர் நிறுவனம் தரதாலும், ஒப்பந்தப்படி செயல்படாததாலும் டுவிட்டரை வாங்கும் ஒப்பந்தத்தை கைவிடுவதாக எலான் மஸ்க் அறிவித்தார்.

44 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பில் ஒப்பந்தம் செய்யப்பட்ட டுவிட்டரை வாங்கும் திட்டத்தை எலான் மஸ்க் கைவிட்ட சம்பவம் உலக அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதனை தொடர்ந்து டுவிட்டரை வாங்கும் திட்டத்தை எலான் மஸ்க் கைவிட்ட நிலையில் அவர் மீது டுவிட்டர் நிறுவனம் வழக்குத்தொடர்ந்தது. டுவிட்டரை வாங்கும் ஒப்பந்தத்தை எலான் மஸ்க் கட்டாயம் நிறைவு செய்யவேண்டுமென டுவிட்டர் நிறுவனம் வழக்குத்தொடர்ந்துள்ளது.

இந்நிலையில், இந்த வழக்கு டெல்லவிர் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் விசாரிக்குமாறு எலான் மஸ்க் தரப்பில் வாதிடப்பட்டது. ஆனால், இந்த வழக்கு விசாரணை வரும் அக்டோபர் மாதம் முதல் தொடங்கும் என நீதிபதி அறிவித்துள்ளார்.



# மனச்சோர்வு போக்கும் மாங்கனி




இயற்கை அன்னையின் படைப்பில் எத்தனையோ அற்புதங்கள் இருக்கின்றது. ஏரி குளங்கள், மலைகள், மரங்கள் என இவற்றுக்கும் உயிருண்டு. அவைகளில் மரங்கள் கற்பனைக்கு எட்டா முறையில் கருவாகி, உருவாகி மலர்ந்து, பூவும் பிஞ்சாகி கனியாகி, புயல், காற்றை தாங்கி வளர அவற்றை அன்னை போல காத்து சீராட்டி, நெஞ்சம் மகிழத் தாலாட்டி கனிகளை கொஞ்சி வளர்த்தே மகிழுமாம் மரங்கள்.

**அதில் இவை பச்சை நிறத்தில் தொங்குமாம்,**
**பார்ப்பவர் கண்ணும் கெஞ்சுமாம்.**
**பக்கம் செல்லப் பார்த்தாலே**
**பயந்து சிலிர்த்தே ஆடுமாம்.**
**பின்பு மஞ்சள் நிறமாய் மாறுமாம்,**
**மனதை கொள்ளை யாக்குமாம்.**
**அதனை சூடு என்று ஒதுக்காதே**
**அதன் பலனை, சுவையை**
**அறிய மறக்காதே.**

**புரிந்ததா..? தெரிந்ததா..? இனித்ததா..?**

மா,பலா, வாழை ஆகியன முக்கனிகள். முக்கனிகளில் சிறந்தது எக்கனி எனில்? அக்கினி சாட்சியாக சொல்வேன் அது மாங்கனியே.

கோடை காலம் வரும் முன்னே, மாம்பழம் வரும் பின்னே என்பார்கள். வெயில் தகிக்கும் வேளையில் மாம்பழ வாசனையும் வீசத்



தொடங்கி விடும். வெயிலின் உக்கிரம் அதிகரிக்க, அதிகரிக்க மாம்பழத்தின் இனிப்பும் அதிகரிக்கும். மாம்பழ சீசன் என்றாலே கடை வீதிகளை கடந்து செல்லும் போது அடுக்கி வைக்கப் பட்டிருக்கும் மாம்பழத்தின் வாசனை வா...வா... என்றழைக்கும். அப்படி எல்லா வயதினரையும் வசீகரிக்கும் சுவை மாம்பழத்திற்கு உண்டு. ஒரு சர்க்கரை நோயாளி கூட ஆசைக்கு ஒரு துண்டு என மாம்பழத்தை சுவைக்க ஏங்குவதில் இருக்கிறது அதன் அசாத்திய சுவையின் வெற்றி. மனிதனுக்கு எந்தெந்த காலங்களில்

என்ன தேவை என்பதை இயற்கை நன்றாகவே அறிந்து வைத்துள்ளது.

அந்த வகையில் நம் ஆரோக்கியத்துக்காக இந்தக் கோடை காலத்தில் இயற்கை தந்த அற்புத பரிசு தான் மாம்பழம். உலக அளவில்

மாம்பழத்துக்கே மவுசு அதிகம். காரணம் இதன் சுவைக்கு உலகின் மூலை முடுக்கெல்லாம் ஏராளமான ரசிகர்கள். மொத்தத்தில்



அனைவரையும் ருசியில் மயங்க வைக்கும் மந்திரப் பழம் இந்த மாம்பழம். இதனை மண் மாதாவின் அன்புக் கொடை என்றும் வர்ணிக்கலாம்.

## பல்வேறு வகையான மாம்பழங்கள் உருவான சுவையான வரலாறு

மாம்பழத்துக்கு ஆங்கில பெயரை தந்ததே தமிழர்கள் தான். 'மாங்கோ' என்ற ஆங்கிலப் பெயர் 'மாங்காய்' என்ற தமிழ்ச் சொல்லில் இருந்து உருவானதே. போர்த்துக்கீசியர்கள் 500 ஆண்டுகளுக்கு முன்பு கடல் வழியாக இந்தியா வந்த போது அங்காங்கே குடியேறினர். அப்போது அவர்கள் இந்திய மாம்பழங்களை சுவைத்து அதிசயித்துப் போனார்களாம். அதனால் தான் விதம் விதமான மாம்பழங்ளை உருவாக்கும் பரிசோதனைகளை மேற்கொண்டனர். இப்போது நாம் சப்புக் கொட்டி சாப்பிடும் பல்வேறு வகையான மாம்பழங்கள் அவை போர்த்துக்கிசியர்களின் கடும் உழைப்பினால் வந்தவையே. உலகிற்கு மாம்பழ ஏற்றுமதியை அறிமுகப் படுத்தியவர்களும் இவர்களே.

மாம்பழங்களை எப்படி பார்த்து வாங்குவது?

தேங்காயைத் தட்டிப் பார்த்து வாங்குவது போல, மாங்காயையும் தட்டிப் பார்த்துத்தான் வாங்க வேண்டும். தட்டும் போது சத்தம் கேட்காமலேயே இருந்தால் அழுகியது அல்லது கனிந்தது என்று அர்த்தம்.

மாம்பழத்தின் உள்ளே காணப்படும் ஆரஞ்சு மற்றும் சிவப்பு கலந்த நிறம் இயற்கையானது. வெறும் மஞ்சள் நிறச் சதைப் பழம் என்றால் அது செயற்கையாக பழுக்க வைக்கப்பட்டது என்று தெரிந்து கொள்ளுங்கள்.



### மனச் சோர்வை நீக்கும் மாம்பழம்

மாம்பழச் சதையில் 15சதவீதம் சர்க்கரை, 1சதவீதம் புரதம், பெருமளவு உயிர்ச்சத்துக்கள் ஏ, பி, சி ஆகியவை உள்ளன. அதிகப் படியாக விளையக் கூடியதும், அதிகப் படியாக உண்ணக் கூடிய பழம் என்ற சிறப்பும் மாம்பழத்தையே சாரும். மாம்பழத்தை பழமாகவோ, பழரசமாகவோ உண்ணலாம்.

வெயிலுக்கு இதமாய் மனம் வருட ஜில் என்று ஜூஸ் போட்டு குடித்தால் 'சொர்க்கமே' தெரியும்.

## எண்ணற்ற உயிர்கள் பிழைக்க பழம் தரும் மரங்கள். (குட்டிக்கதை)

ஆன்மீக சொற்பொழிவு ஒன்றில் துறவியின் பேச்சை குழப்பும் வகையில் கீழே கிடந்த கல்லொன்றை எடுத்து துறவியை நோக்கி குறி வைத்து அடித்தான் ஒருவன். அது அவரின் தலையி'ல் பட்டு காயத்தை ஏற்படுத்திவிட மற்ற பக்தர்கள் அவனை மடக்கிப் பிடித்து அடிக்கவும் அவனை தன்னிடம் அழைத்து வருமாறு துறவி சைகை செய்தார். பக்தர்களும் அவர் முன் அவனை இழுத்து வந்தனர். பயத்தோடு நின்ற அவனை பார்த்து சிரித்த படியே அருகில் வைக்கப்பட்டிருந்த தட்டில் இருந்து மாம்பழம் ஒன்றை எடுத்து அவனிடம் நீட்டினார். அவனை தண்டிக்காமல் பழம் கொடுக்கிறீர்களே சுவாமி எனப் பக்தர்கள் கேட்க அவர்களை அமைதிப்படுத்தி விட்டு கூட்டத்தினரை பார்த்து ஐந்தறிவுடைய மரமே தன் மீது கல் எறிபவனுக்கு பழத்தைத் தருகிறது. ஆறறிவு உடைய நான் என்ன செய்ய வேண்டும்? நன்மை தானே செய்ய வேண்டும். துறவி கூறியதை கேட்ட அவன் தடால் என அவர் பாதங்களில் விழுந்து அழுதான்.



பிரமிளா நாகேஸ்வரராஜா

**மாம்பழ பருவத்தில் (சீசனில்) செய்யக்கூடிய அருமையான சமையல்கள் இவை.**

**மாம்பழ இனிப்பு சப்பாத்தி**
**மாம்பழ பாயாசம்**
**மாம்பழ ஐஸ்க்ரீம்**
**மாம்பழ கேசரி**
**மாம்பழ அல்வா**
**மாம்பழ ரசம்**
**மாம்பழ சாம்பார்**
**மாம்பழ ஜாம்**
**மாம்பழ மோர்க்குழம்பு**

## இந்த வார சமையல் குறிப்பு

### சட் பட் மாம்பழ புடிங்

#### தேவையானவை

**பெரிய சைஸ் மாம்பழம் - 1 பழுத்தது**
**வெனிலா ஐஸ்க்ரீம் - 6 ஸ்குப்கள்**
**கெட்டியான கீரீம் -2 மேசைக்கரண்டி**

#### செய்முறை

மாம்பழத்தை தோல் நீக்கி துண்டுகளாக்கி பிளெண்டரில் அரைத்து எடுக்கவும். அதனுடன் வெனிலா ஐஸ்க்ரீம் மற்றும் ஹெவிதிக்கான கீரீம் சேர்த்து மீண்டும் ஒரு முறை பிளெண்டரை இயக்கி கலந்து விட்டு ஒரு கண்ணாடி சேர்விங் பாத்திரத்திலோ அல்லது கண்ணாடி குவளைகளில் தனித் தனியாகவோ விட்டு மீதிக் திக் கீரீமை மேலால் விட்டு மாம்பழ துண்டுகளை வைத்து அலங்கரித்து குளிர்சாதப் பெட்டியில் நன்றாக செட் பண்ணிய பிறகு ஜில் என்று பரிமாறவும்.

கட்டுக் கதைகளை உடைக்கும் உண்மைகள்.

வெயில் காலத்தில் மாம்பழம் சாப்பிட்டால் உடல் சூடாகி ஏற்படும் வெயில் கால நோய்களுக்கு பயந்து மாம்பழத்தை தவிர்ப்பவர்களும் உண்டு. ஆனால், உண்மை என்னவென்றால், வெயில் கால நோய்களுக்கு சரியான தீர்வை கொடுக்கக் கூடிய சத்துக்களை தன்னுள் கொண்டுள்ளது மாம்பழம்.

எல்லோருடைய மனங்களிலும், இல்லங்களிலும் நிறைவான இடத்தை பிடித்திருக்கும் மாம்பழம் உண்மையிலே பழங்களின் அரசன் தான். அப்ப வாருங்கள்

மாம்பழம் வாங்கப் போவோமா? சீசன் முடிவதற்குள் சுவைப்போம்.




# ஒன்பது சாபங்களில் குவேனியின் வலியும்...

## ஒன்பதாம் திகதிகள் தரும் கிலியும்

**கடவுள்** நம்பிக்கை இல்லாதவர்களுக் கும்கூட சாபம் என்கிறவொன்றின்மீது ஏதோவொரு அச்சம் இருந்துகொண்டே தானிருக்கும் . அப்படி இலங்கையின் வரலாற்றோடு சம்பந்தப்பட்ட ஓர் சாபம் அறிவியல் தாண்டியும் உண்மைதானோ என எண்ணும்வகையில் , இன்றுவரையில் பலித்துக் கொண்டேதான் இருக்கின்றதென்றால் மிகையில்லை . ஆம் , அது இலங்கையின் பூர்வகுடி பெண்ணான குவேனியின் சாபம்தான்! விஜயனின் வருகையோடு ஆரம்பிக்கும் இலங்கை வரலாற்றில் [கிமு 543 ] , அவனுக்கு அடைக்கலம் கொடுக்கும் பூர்வகுடி பெண்ணான குவேனிக்கும் விஜயனுக்கு ஏற்படும் காதலில் இரு குழந்தைகளும் பிறக்கின்றனர் . எனினும் தாம் உருவாக்கியிருக்கும் புதிய நகரங்களுக்கு விஜயனை மன்னராகும்படி கோரும் அவனது எழுநூறு நண்பர்களினதும் கோரிக்கைக்கிணங்க , பாண்டிய இளவரசியை மணந்துகொள்ளும் விஜயன் , தன்னுடைய இரு குழந்தைகளையும் அரண்மனையில் விட்டுவிட்டு குவேனியை எங்காவது சென்றுவிடும்படி கூறுகின்றான். இதனால் மனமுடைந்த குவேனி தன் இருகுழந்தைகளையும் அழைத்துக்கொண்டு 'லங்காபுர ' எனும் இடத்திற்கு செல்ல, அங்கே அவளது குலத்தவர்களே அவளை கொலை செய்ய முயல்கின்றனர் அங்கிருந்து தப்பியோடும் குவேனியின் குழந்தைகளே இன்றைய இலங்கையின் ஆதிவாசிகளின் முன்னோர்கள் என கருதப்படுகின்றது . உண்மையில் விஜயனுக்காக பெரும் விலையைக் கொடுத்தவள் குவேனி. தனது இனத்தால் தனிமைப்படுத்தியதை ஏற்றுக் கொண்டது கூட விஜயனிடம் கொண்டிருந்த நம்பிக்கையால் தான். தனது இனத்தவர்களை [இயக்கர்களை ]

விஜயன் அழிக்க முடிவெடுத்தபோது அந்த அழித்தொழிப்புக்கு விஜயனுடன் ஒத்துழைத்தவள் . விஜயன் தலைவனாவதற்கு உதவியவள் . அப்படிப்பட்ட குவேனியால் விஜயனின் துரோகத்தை அவ்வளவு சீக்கிரத்தில் ஏற்றுக்கொள்ள இயலுமா என்ன ? அவள் , தான் தற்கொலை செய்துகொள்ளும்முன் ஒன்பது சாபங்களை





விடுகின்றாள் , அந்த சாபங்கள்தான் இன்றுவரையில் இலங்கையை பாடாய்படுத்துகின்றது எனும் நம்பிக்கை சிங்கள மரபுவழி இன்றும் உள்ளது .

**சாபம் - 1**

**' இலங்கைத் தீவு நான்கு திசைகளாலும் அழிக்கப்படட்டும்' எனும் முதல் சாபத்தின் பிரகாரம் சுனாமி போன்ற பேரழிவினை சிங்களவர்கள் குறிப்பிடுகின்றனர் .**

**சாபம்-2**

**சாபுர்ன என்றழைக்கப்படுகிற இரண்டாவது சாபத்தின்படி இலங்கைக்கு யார் எல்லாம் தலைமை தாங்குகின்றார்களோ அவர்கள் அழிந்து போகட்டும் என்பதே.**

**சாபம்-3**

**'மூன்றாவது சாபமான அன்னிய ஆக்கிரமிப்புகளுக்கு சிக்கட்டும்' என்பதன்படி போர்த்துக்கீசியர் , ஒல்லாந்தர் , ஆங்கிலேயர் என ஆளப்பட்டு இன்று சீனா , இந்தியா , அமெரிக்கா என யாரின் பிடிக்குள் இருக்கின்றோம் என தெரியாமலே சிக்கியிருக்கும் சொப்பனசுந்தரி நிலையே இலங்கைக்கு.**

**சாபம்-4**

**நான்காவதாக , ஹெல இனம் இரத்தத் தூய்மை இழந்து தனித்துவத்தை இழக்கட்டும் எனும் பக்கி மவுரி என்கிற சாபத்தின்படி இனத் தூய்மை இழந்து, ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு சாக்காட்டுங்கள் என்கிற சபிப்பு ( சிங்கள வரலாற்றில் ஆட்சிக்காக எழுந்த சகோதர சண்டை காசியப்பன் முதல் ராஜபக்ஷே வரை தொடர்கின்றதோ என்னவோ ),**

**சாபம்-5**

**ஹெல தீவு இரண்டாகப் பிளந்து கடலுக்குப் பலியாகட்டும் எனும் 'நிமி மினிச என்கிற ஐந்தாவது சாபமானது இலங்கை இரண்டாக உடைந்து இறுதியில் சமுத்திரத்தில் மூழ்கட்டும் என்பதே.**

**சாபம்-6**

**தக்னிகா எனும் ஆறாவது சாபமானது இலங்கையில் அறிவீனமான இனம் தோன்றட்டும் என்பதாகும்.**

**சாபம்-7**

**ஏழாவது சாபமானது சூரியன், மழை, காற்று, கடல் மற்றும் நீர் என்பவற்றால் அனர்த்தங்கள் ஏற்படவேண்டும் என்பதே.**

**சாபம்-8**

**குணமடைய முடியாததும் விரைவாக பரவக் கூடியதுமான நோய்களுக்கு எப்போதும் இலங்கை ஆளாகிக்கொண்டிருக்கட்டும் எனும் எட்டாவது சாபம் ,**



**சாபம்-9**

**குவேனியின் இறுதி சாபம் என்னவென்றால், கடலில் மிதக்கும் மரக் குச்சி அலைகளுக்கு அகப்பட்டு இங்குமங்குமாக எந்தக் இலக்குமில்லாமல் இறுதியில் மூழ்கிவிடுவது போல எந்தக் கொள்கையும் இல்லாத மக்கள் இலங்கையில் உருவாகட்டும் , அவர்கள் சிக்கி சீரழியட்டும் என்பதேயாகும் .**

இலங்கை வரலாற்றைப் படிப்பவர்களுக்கு குவேனியின் சாபம் இன்றுவரை பலித்து வருவது தெரிய வரும். இலங்கையை ஆண்ட எந்த மன்னரும் இடையூறின்றி, நிம்மதியாக ஆட்சி செய்துவிட்டு மாண்டதில்லை. அவர்கள் அனைவருமே பீதியுடனும், போர்களுடனும், சதிகளை எதிர்கொண்டும்தான் ஆட்சி புரிய நேர்ந்தது. அது பண்டைய மன்னர்கள் தொடக்கம் இன்றைய நவீன அரசாங்கங்கள் வரை நீடிக்கின்றன என்பது கண்கூடு ! மகா வம்சத்தின் [கிமு 543 கிபி 275] சிங்கள அரசர்களில் ஒரு சிலரைத் தவிர மற்ற அனைவரும் பலவீனமானவர்களாகவும் திறமையற்றவர்களாகவும் இருந்ததை மகாவம்சத்திலிருந்தே காணலாம். இந்த வம்சத்தின் 54 மன்னர்களில், 15 பேர் ஓர் ஆண்டிற்கும் குறைவாகவும், 30 பேர் நான்கு ஆண்டுகளுக்கு குறைவாகவும், 11 பேர் அரியணையில் இருந்து நீக்கப்பட்டனர், ஆறு பேர் படுகொலை செய்யப்பட்டனர், 13 பேர் போரில் கொல்லப்பட்டனர் மற்றும் 22 பேர் அவர்களின் வாரிசுகளால் கொல்லப்பட்டனர். தொடக்ககால சிங்கள அரசர்களின் இருண்ட அவலமான பதிவு அரியணைக்கான இடைவிடாத போராட்டம், சகோதரக் கொலைகள், சதிகள் மற்றும் உள் சண்டைகள் ஆகியன இடம் பெற்றன.

இன்று 73 ஆண்டுகால ஆட்சியின் பின்னர் இலங்கைத் தீவு வாங்கிய கடனைத் திருப்பி அடைக்க முடியாது ஒட்டாண்டி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஆட்சியில் இருக்கும் ராஜபக்ஷே வம்சம் அசிங்கப்பட்டு நிற்கிறது. நெருக்கடிகள் ஒன்றா இரண்டா? அவை வரிசையாக எழுந்து நிற்கின்றன. நிதித் தட்டுப்பாடு, உற்பத்தி வீழ்ச்சி, பண வீக்கம், கோவிட், விலைவாசி ஏற்றம் , உயிர் காக்கும் மருந்துகள் , உணவுப் பொருட்கள் உற்பட அத்தியாவசிய பொருட்கள் இன்மை போன்ற நெருக்கடிகளை இலங்கை அரசாங்கம் எதிர் நோக்குகிறது.

குவேனியின் சாபம் இலங்கை ஆட்சியாளர்களைத் துரத்துகிறது!



பிரியா இராமநாதன்

**இன்று 73 ஆண்டுகால ஆட்சியின் பின்னர் இலங்கைத் தீவு வாங்கிய கடனைத் திருப்பி அடைக்க முடியாது நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஆட்சியில் இருக்கும் ராஜபக்ஷே வம்சம் அசிங்கப்பட்டு நிற்கிறது. நெருக்கடிகள் ஒன்றா? இரண்டா? அவை வரிசையாக எழுந்து நிற்கின்றன. நிதித் தட்டுப்பாடு, உற்பத்தி வீழ்ச்சி, பண வீக்கம், கோவிட், விலைவாசி ஏற்றம் , உயிர் காக்கும் மருந்துகள் , உணவுப்பொருட்கள் உட்பட அத்தியாவசிய பொருட்கள் இன்மை போன்ற நெருக்கடிகளை இலங்கை அரசாங்கம் எதிர் நோக்குகிறது.**



# ஜனநாயகம்

# ஜனனமாவது எப்போது?

புஸ்பராசா
கோபிகா

> ஜனநாயக அரசொன்றில், அரசியல், சமூக, பொருளாதார வாய்ப்புக்கள் அனைத்துமே நாட்டின் குடிகள் அனைவருக்கும் சமமாக வழங்கப்படவேண்டிய ஒன்றாகும்.இதைவிடுத்து ஆட்சியாளர்கள் பக்கசார்பாக செயற்படுவதும், மக்கள் மத்தியில் பாகுபாடு காட்டுவதும் ஏற்றுக்கொள்ளமுடியாத தொரு விடயமே ஆகும். நாட்டை ஆளும் ஆட்சியாளர்களிடையே அனைவரும் ஒரே நாட்டவர், நாம் அனைவருக்கும் பொதுவான ஒரு ஆட்சியாளன் என்ற மனநிலை ஏற்படுவதுடன் தன்னலத்தை விடுத்து சேவை ரீதியிலான மனப்பாங்கு காணப்பட்டாலும் அங்கே நிச்சயம் ஜனநாயகமானது வலுவானதாகவே காணப்படும்

**நாடொன்றின்** அடிப்படை சட்டமாக கருதப்படும் அரசியலமைப்பில், அதாவது இலங்கையின் அரசியலமைப்பிலே, 'இலங்கையானது ஜனநாயக சோசலிச குடியரசு' என்ற பெயரிலே குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில் இவ்விடத்தில் இலங்கையும் ஜனநாயகமும் என்ற தலைப்பில் தற்போதைய நிலைகளையும் கருத்திற்கொண்டு சில விடயங்கள் பற்றி பார்ப்போம்.எதுவித சார்புநிலையுமற்று ஜனநாயகம் என்ற கருத்தியலானது இலங்கையில் அன்று முதல் இன்று வரை எந்நிலையில் உள்ளதென்பதை பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பொதுவாக ஜனநாயகம் என்பதை 'மக்களுக்காக மக்களால் நடத்தப்பெறும் ஆட்சியளன்' என்று கூறுவர்.அதாவது குடிமக்களது அரசியல் அர்ப்பணிப்புக்கள்,அபிலாஷைகள்,போராட்டம்,பின்னடைவுகளின் போதான எதிர்ப்பு,மீளுருவாக்க முயற்சி போன்ற மக்கள்மயப்படுத்தப்பட்ட தொரு சமூக இயங்குதளமென்று கூறலாம்.இந்த ஜனநாயகமானது தனக்கேயுரிய சில பண்புகளை கொண்டமைந்து காணப்படுகிறது. அதிலும் குறிப்பாக சுதந்திரமும்,சமத்துவமும் ஜனநாயகத்தின் அடிப்படைத்தத்துவங்களாக காணப்படுகின்றன. அதைவிடுத்து சகிப்புத்தன்மை, கலந்துரையாடலிலான தீர்மானங்கள்,இறைமை,அரசியலமைப்பிலான அரசாங்கம் காணப்படல்,ஊடக சுதந்திரம்,பேச்சு சுதந்திரம் போன்றவற்றை குறிப்பிடலாம்.

இந்நிலையில் எந்தவொரு நாட்டை எடுத்து நோக்கினும், அங்கு ஜனநாயகமும்,சுதந்திரமும் நிலைபெறவேண்டுமெனில்,சமூகமும் அரசும் பலமாக இருக்க வேண்டும். அதிலே, அரசு பலமாக இருந்து சமூகம் பலவீனமான நிலையில் இருக்குமாயின்,அங்கு முழு அளவிலான எதேச்சதிகாரம் காணப்படும். அதற்கு எதிர்மாறாக சமூகம் பலமாக இருந்து அரசு பலவீனமான நிலையில் இருப்பின்,அங்கு அராஜகநிலை தலைதூக்கிவிடும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதன்படி,இலங்கையின் ஜனநாயகத்தின் நிலை பற்றி நோக்கின்,காலணித்துவ ஆட்சியிலிருந்து விடுபட்டு 1948ம் ஆண்டு இறைமையுடைய அரசாக சுதந்திரம் பெற்ற காலப்பகுதி தொட்டு,இலங்கையில் ஜனநாயக ரீதியிலான ஒரு ஆட்சியே இடம்பெறுகிறது. அதாவது பிரதிநிதித்துவ ரீதியிலான ஜனநாயகமுறை ( மக்களின் சார்பாக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் ஊடாக இடம்பெறும் ஆட்சி) அன்று முதல் இன்றுவரை மக்கள் பிரதிநிதிகள் ஆட்சி நடவடிக்கைகளில் பங்குபற்றினாலும் கூட அங்கே மக்கள் எந்தளவிற்கு திருப்தியடைந்தார்கள். என்பது ஐயம் கலந்ததொரு விடயமே. அதற்காக மக்கள் திருப்தியடையுமளவிற்கு, மக்களின் தேவைகளை இனங்கண்டு பூர்த்திசெய்யுமளவிற்கு ஒரு அரசாங்கம் காணப்படவில்லை.என்றும் கூறிவிடமுடியாது.

சில விடயங்களில் யார்மீதும் குறை சொல்லிடமுடியாததொரு நிலை காணப்படும். அதுபோலவே இலங்கையின் ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் மக்களால்




தெரிவுசெய்யப்படுபவர்கள்.இங்கே சில சமயங்களில் ஆட்சி நடவடிக்கைகள் மக்களிற்கும், நாட்டிற்கும் சாதகமாக அமையவில்லையெனில், அவ்விடத்தில் யாரை குறைகூறிட முடியும்.எமது நாட்டை நிர்வகிக்க நாம் தெரிவுசெய்வோர் எப்படி இருக்கவேண்டும் என்று மக்கள் நன்றாக அலசி ஆராய்ந்து தொலை நோக்குடன் தமது தெரிவை மேற்கொள்ள வேண்டும். அதேபோல், மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களும்,மக்கள் தமது பிரதிநிதியாக எம்மை தெரிவுசெய்துள்ளனர்.நாம் அதற்கேற்றவகையில் மக்களினது வாழ்வாதாரத்தையும், நாட்டின் அபிவிருத்தியையும் மேம்படுத்த தன்னலமற்று சேவையாற்ற வேண்டும் என்ற மனப்பான்மையுடன் செயற்படவேண்டும்.இவ்வாறாக நாட்டின் குடிகளிடையேயும், நாட்டை நிர்வகிப்போரிடையேயும் பொறுப்புணர்வு ஏற்படின்,அவ்விடத்தே சீரான ஜனநாயகம் நிலவும்.ஆனால் இது நடைமுறைக்கு சாத்தியமற்றதொன்றாகவே இலங்கையில் காணப்பட்டு வருகிறது. ஏனெனில் இலங்கை மக்களிடையே நாமெல்லாம் ஒரேநாட்டவர் என்ற சிந்தனை வளர இத்தனை காலமாகிவிட்டது. தற்போது இலங்கையானது எதிர்நோக்கிவரும் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு தீர்வு தேவை என்பதற்காக நாட்டு மக்கள் அனைவரும் எதுவித வேறுபாடுகளுமின்றி ஒன்றுபட்டு செயற்பட்டு வருகின்றனர். ஆனால் இதற்கு முன்னர் இன,மத ரீதியில் வேறுபட்ட ஒரு நிலையே காணப்பட்டது. தமிழர்,சிங்களவர் என்றொரு விடயமே நாட்டை பிளவுபடுத்துமளவிற்கு ஒரு சந்தர்ப்பத்தை அமைத்திருந்தது. சுருங்கக் கூறின், ஒரு நாட்டில்,ஜனநாயக ரீதியிலான ஆட்சி நிலவவேண்டுமாயின், அங்கே மக்கள் எதுவித பாகுபாடுமின்றி ஒற்றுமையாக இருக்கவேண்டும். இதுவே ஜனநாயகத்திற்கு அடித்தளமிட்டுத்தரும் என்று கூற கருதலாம்.

அதைவிடுத்து, இலங்கையானது ஜனநாயக ரீதியிலான ஆட்சி நிலவுகின்றது என்பதை குறிப்பிடுமளவிற்கு, அரசியலமைப்பில் கூறப்பட்ட பல விடயங்கள் வெறும் எழுத்துருவிலான அம்சங்களாகவே காணப்படசெய்கின்றன. நடைமுறையில் அரசியலமைப்பில் கூறப்பட்ட பல விடயங்கள் மீறப்பட்ட வண்ணமே உள்ளன. எடுத்துக்காட்டாக ஜனநாயக நாடொன்றில் மக்களுக்கு அரசையோ, அரசாங்கத்தையோ விமர்சிக்கவோ அல்லது தமது தனிப்பட்ட கருத்தை தெரிவிக்கவோ உரிமை உண்டு எனவும், ஊடகச்சுதந்திரம் காணப்படும்.என்ற ரீதியில் ஜனநாயகத்தை பிரதிபடுத்தும் பல அம்சங்கள் காணப்படுகின்றன. ஆனால் இவை நடைமுறையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமா?என்றால், அதற்கு என்ன பதில் கூறிவிட முடியும்.நடைமுறை விடயங்களுடன் ஒப்பிட்டு பார்த்தால், பெருமளவிற்கு இவை அனைத்தும் வெறுமனே எழுத்துரு ரீதியிலான அம்சங்களே என்று தான் கூறவேண்டும்.அதாவது ஊடகச்சுதந்திரம் என்றொரு விடயத்தை எடுத்தாலே, இலங்கையில் இற்றைவரை எத்தனை ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டும், கொல்லப்பட்டும் உள்ளார்கள் என்பதை அறிந்தாலே, மேற்கூறப்பட்ட கருத்தின் உண்மைத்தன்மையை தெரிந்துகொள்ளமுடியும்.

ஜனநாயக அரசொன்றில்,அரசியல்,சமூக, பொருளாதார வாய்ப்புக்கள் அனைத்துமே நாட்டின் குடிகள் அனைவருக்கும் சமமாக வழங்கப்படவேண்டிய ஒன்றாகும்.இதைவிடுத்து ஆட்சியாளர்கள் பக்கசார்பாக செயற்படுவதும், மக்கள் மத்தியில் பாகுபாடு காட்டுவதும் ஏற்றுக்கொள்ளமுடியாத தொரு விடயமே ஆகும். நாட்டை ஆளும் ஆட்சியாளர்களிடையே 'அனைவரும் ஒரே நாட்டவர்', 'நாம் அனைவருக்கும் பொதுவான ஒரு ஆட்சியாளன்'என்ற மனநிலை ஏற்படுவதுடன் தன்னலத்தை விடுத்து சேவை ரீதியிலான மனப்பாங்கு காணப்பட்டாலும் அங்கே நிச்சயம் ஜனநாயகமானது வலுவானதாகவே காணப்படும்.

'மனம் உண்டானால் மார்க்கம் உண்டு' என்பார்கள். மனதில் எழும் மாற்றங்கள் எதையும் மாற்றுமளவிற்கு வலிமை கொண்டவை. பத்தோடு பதினொன்றாக நாமும் இருக்க வேண்டாமே. எமது நாட்டின் ஜனநாயகம் சர்வதிகாரமாக மாறிவிட்டது. ஆட்சியாளர்களின் குறைகள், மக்களின் பிழைகள் என்றவாறாக விமர்சனம் கூறிக்கொண்டு இருப்பதை விடுத்து பாரியதொரு மாற்றம் உண்டாக ஒவ்வொருத்தரும் தம்முள் மாற்றத்தை உண்டு பண்ணி அடித்தளமிடலாம். பொறுப்புணர்வு, சகிப்புத்தன்மை, பொதுநலன், கடமையுணர்ச்சி, ஒற்றுமை என்றவாறாக ஏற்படும் மாற்றங்கள் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துமளவிற்கு பலமானவை. காலணித்துவ ஆட்சிக்குள் முடங்கியிருந்த எமது நாடு சுதந்திரம் பெறவில்லையா? அதுபோலவே தற்போதைய நாட்டின் பொருளாதார நெருக்கடியும் மாறும். அதுபோல இலங்கை நாடு மீண்டும் கட்டியெழுப்பப்பட்டு சிறப்பானதொரு ஆட்சி நிலவும்.












சோபிகா
கிருஷ்ணமூர்த்தி

# புலிட்சர் விருதுக்கு

# குழந்தையிடமிருந்து ஒரு மடல்...




**கெவின்** கார்ட்டர் உலக புகழ்பெற்ற புகைப்படக்காரார். எல்லா சிறந்த புகைப் படக்காரர்களைப் போன்றே இவருக்கும் நல்ல புகைப் படங்களை எடுக்க வேண்டுமென்ற ஆசையும் ஆர்வமும் இருந்தன.இந்த ஆர்வம் அவரை நாடு, நகரம், கிராமம், காடு, மலை என்று கொண்டு சென்றது.

1993 இல் இந்த ஆர்வம் அவரைத் தனது சக புகைப்படப் பத்திரிக்கையாளர்களுடன் சூடானுக் குக் கொண்டு சென்றது.

அப்போது சூடான் வரலாறு காணாத பஞ்சத்தில் சிக்கித் தவித்துக் கொண்டு இருந்தது. குறிப்பாக சூடானின் தென்பகுதி மக்கள் உண்ண உண வின்றி, பருகநீரின்றி பசி, தாகத்தில் தவித்துக் கொண்டிருந்தனர்.

பசி பஞ்சத்தில் தவிக்கும் மக்களின் நிலை களைக் கெமராவில் பதிவு செய்ய கெவின் தொலைதூர கிராமங்கள் வரை சென்றார்.

இறுதியாக அவர் முயற்சி கைகூடியது. ஒரு நாள் தன் கெமராவை தோளில் தொங்க விட்டுக் கொண்டு உள்ளத்தை உலுக்கக் கூடிய படத்துக் கான காட்சியைத் தேடியலைந்து கொண்டிருந்த போது அப்படிப்பட்ட காட்சி தென்பட்டது.



பசி பஞ்சத்தால் அடிபட்ட மெலிந்த நிலை யில் உள்ள ஒரு சிறுமி நடக்கக் கூட இயலாத நிலையில், எலும்புக் கூடு போன்ற தன்னுடலை தவழ்ந்து இழுத்துக் கொண்டு மெல்ல மெல்ல ஊர்ந்து செல்வதைக் கண்டார்.

அந்தச் சிறுமி ஐக்கிய நாடுகளின் சபையின் சார்பாக அமைக்கப்பட்டு இருந்த உணவு வழங் கும் முகாமை நோக்கி தள்ளாடியபடி தவழ்ந்து கொண்டிருந்தாள். உண்மையிலேயே இதயத் தைப் பிழியக் கூடியதாக இருந்தது. தோளில் இருந்து கெமராவை இறக்கி கோணம் பார்த்த கெவினுக்கு இன்னொரு வியப்பும் காத்திருந்தது. ஆம்! அந்த எலும்பும் தோலுமான சிறுமிக்குப் பின்னாலேயே சிறிது தொலைவில் ஒரு பிணம் தின்னிக்கழுகும் சிறுமியின் மீது பார்வையை நிலை நிறுத்திக் கொண்டு இருந்தது.எப்போது சிறுமியின் உடலை விட்டு உயிர் பிரியும். மீதியுள்ள அந்தத் தோலையும் அதைச் சுற்றி இருக்கும் சிறிது மாமிசத்தையும் எப்போது சாப்பிட லாம் எனக் காத்திருந்தது பிணம் தின்னிக்கழுகு.

கெவின் கெமரா லென்சை கண்ணுக்கு ஒத் திக் கொண்டார். சிறுமியையும் கழுகையும் ஒரு பிரேமில் அடக்கிக் கொண்டு ‘க்ளிக்’ செய்தார். இப்போது அவரது புகைப்படக்கருவியில் மிக அரிதினும் அரிதான படம் பதிவாகி விட்டது. இதை விற்றால் நல்ல விலை கிடைக்கும் என்ற மகிழ்ச்சியில் கெமராவைத் தோளில் மாட்டிக் கொண்டு தனது வண்டியில் சென்று விட்டார்.

இந்த அரிதான படத்தை ‘நியூயோர்க் டைம்ஸ்’ பத்திரிக்கைக்கு விற்று விட்டார். இந்தப் புகைப் படம் 1993 மார்ச் திங்கள் 26 ஆம் நாள் காலை நாளிதழில் முதல் பக்கத்தில் வெளியானது.இந்தப் படத்தைப் பார்த்ததும் ஆயிரக்கணக்கான வாசகர் கள் பத்திரிக்கை அலுவலகத்திற்கு தொலைப் பேசி மூலம் தொடர்புக் கொண்டனர்.

அனைவரும் ஒரே கேள்வியைத் தான் கேட் டனர். புகைப்படத்தில் உள்ள சிறுமி என்ன ஆனாள்? அவள் உயிருடன் பிழைத்தாளா அல் லது இறந்து விட்டாளா?

இந்தக் கேள்விக்கான பதில் பத்திரிக்கையின் தொலைப் பேசி ஆப்ரேட்டரிடமோ படத்தை எடுத்த கெவின் கார்ட்டர்டமோ இல்லை.

1994, மே 23 அன்று பெரும் கை தட்டல்க ளுக்கு இடையே கெவின் கார்ட்டர் கொலம்பியப் பல்கலைக்கழகத்தின் பிரமாண்டமான அரங்கத் தில் இந்த அரிதான புகைப்படத்திற்கான புலிட்சர் விருதைப் பெற்றுக்கொண்டார்.



இந்த Pulitzer விருது புகைப்படத் துறையில் நோபல் விருதுக்கு இணையானது.

விருது பெற்ற சில நாட்களுக்குப்பின் கெவின் பெரும் மன உளைச்சலுக்கு ஆளானார்.

கெவினுக்கும் அங்கு இருந்த பிணம்தின்னிக் கழுகுக்கும் என்ன வேற்றுமை?

இரண்டும் ஒரே விதமாகத்தான் செயல்பட்டுள்ள னர். குறைந்தபட்சம் புகைப்பட நிபுணர் கெவின் அந்த சிறுமிக்கு ஒரு வாய் தண்ணீர் தந்து உயி ரைக் காப்பாற்றி இருக்கலாம்!?



அல்லது தனது வலுவான கைகளினால் அந் தச் சிறுமியைத் தூக்கிச் சென்று உணவளிக்கும் அமைப்பு அலுவலகத்தின் வாயிலிலாவது சே ர்த்து இருக்கலாம்!?

கல்லெடுத்து வீசி அந்தக் கழுகையாவது விரட்டி இருக்கலாம்!?

ஆனால் இவற்றில் எதையும் செய்யாமல் வெறும் ஒரு படத்தை எடுத்தார்!!

அதை அதிக விலை தந்த பத்திரிக்கைக்கு விற்று விட்டார் என்று ஒருவர் அவர் மீது குற்றம் சாட்டியதுதான் காரணம்!!

இரண்டு மாதங்களுக்குப் பின் கடற்கரைக்கு அருகில் அவரது கார் நின்று கொண்டிருந்தது. அதில் அவர் பிணமாகக் கிடந்தார். கெவின் தற் கொலை செய்துகொண்டார்!!

அவரது பிணத்திற்கு அருகில் காவல்துறைக்கு ஒரு கடிதம் கிடைத்தது. அதில் சில வரிகளே இருந்தன.

**முதல் வரி**
**I am Really, Really Sorry...**
**தற்போது சுயநலமில்லாத அன்பு அரி தாகி வருகிறது.நாம் எவராக இருந் தாலும்சரி, நம்மிடம் மனித நேயம் இல்லையெனில்நாமும் மிருகத்திற்கே ஒப்பாவோம்.**



# எழுத்தறிவித்த இமயங்கள்

காலத்தோடு கனம் பண்ணுவோம்.
காலம் ஆகினும் கற்றவழி நிற்போம்.



# வாழ்வின் வழித்தடங்களில் என்னோடு வாழ்வீர்கள் ஆசானே...

## என் தமிழ் ஆசான் கிளரன்ஸ்

**2007** நான் தரம் 7அவகுப்பிற்குள் சென்று 3ம் பாடம் தமிழ் யார் ஆசிரியராக இருக்கும் கருணாகரன் ஆசான் எமக்கு வர கூடாது என்று இறைவனை வேண்டிய படி இருக்கையில் [கருணாகரன் ஆசான் என்றால் அடிப்பார் என்ற பயம்]

புன்னகைத்த முகத்துடன் ஒரு ஆசிரியர் வந்து **7A** வகுப்பு இதா என்று கேட்க ஆம் என்று நாங்க கூற நான் தான் உங்கள் தமிழ் ஆசான் கிளறன்ஸ் என்று கூறி அன்று ஆரம்பித்த உறவு அது மிகவும் மகிழ்வுடன் கடந்த பாதை மாணவர்களை சமனாக மதித்து தன் பிள்ளைகள் போல் பார்த்து வரும் இனிய உறவு என் ஆசான் வேறு யாரும் ஆசான் எங்களை திட்டினால் கூட எமக்காக வந்து நிற்கும் நல்ல தாய். வேறு பாடத்துக்கு ஆசிரியர் வரவில்லை என்றாலும் நாங்கள் ஓடிச் செல்வது கிளரன்ஸ் ஆசிரியரை தேடியே அவர் வேறு வகுப்புக்கு பாடம் எடுத்த படி நின்றாலும் எங்கள் வகுப்பு வாருங்கள் என்று அழைப்பதும் அவருக்கு மற்ற வகுப்பில் பாடம் என்று வருத்தத்துடன் கூட சென்றிருக்கிறோம் ஆசிரியர் பாடசாலை வரவில்லை என்றால் மனது வலிக்கும் அடுத்த நாள் காலை ஆசிரியர் வந்தவுடன் நலன் விசாரிப்பதே முதல் வேலையாக இருக்கும் அந்த அளவுக்கு அன்பு நிறைந்த தாய் இப்படி நான் ஒரு நாள் பாடசாலையில் பெற்றோர் கூட்டம் எங்கள் வீட்டில் அனைவரும் முல்லைத்தீவு போனதால் கூட்டத்துக்கு யாரும் வரவில்லை பெற்றோர் வரவில்லை என்று என்னை வெளியே விட்டு விட்டு அதிபரை சந்திக்க சொல்லி இருந்தார்கள் நான் பயத்துடன் இருந்தேன் எங்கள் அதிபர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லஸ் என்றாலே அனைவருக்கும் பார்த்தவுடனே காற்சட்டை ஈரமாகும் என்ன செய்வது என்று அறியாமல் பயத்துடன் இருக்கையில் அங்கே கூட்டத்துக்கு வந்த கிளரன்ஸ் ஆசிரியர் என்னை கண்டு உடனே என் கையை பிடித்து உனக்காக அம்மா நான் இருக்கிறேன் என்று எனக்காக தாயாக கூட்டத்தில் பங்கு பற்றிய நினைவு இன்றும் நெஞ்சில் அதே போல் தான் பாடசாலையில் வாணி விழாவுக்காக நாம் 7பேர் முதல் முறையாக பரதநாட்டியம் ஆடியிருந்தோம் நடனம் முடிந்தவுடன் எங்களை வாழ்த்திய முதல் ஆசான் அவரே இப்படியே தொடங்கிய பயணம் தரம் 7,8,9,10,11,A/l வரை தொடர்ந்தே சென்றது O/l படிக்கும் போது தமிழ் பரீட்சை முடிய வினாத்தாள் திருத்த உதவசென்று விடுவோம் A/l அண்ணாக்களின் வினாத்தாள் எல்லாம் நாம் திருத்த உதவுவோம். அப்போது ஆசிரியர் வாங்கி தரும் குளிர்பானம் கூட ஆசிரியரின் அன்பையே கூறி நிற்கும் இப்படி தான் O/l பரீட்சை நேரத்தில் நண்பர்கள் செய்த சில வினைகளால் நான் நோயில் வாடிய போது எனக்காக கண்ணீர் சிந்தி தைரியம் தந்த ஆசான் என் தமிழ் ஆசான் கிளறன்ஸ். அவர்கள் இப்படியே உயதரம் முதல் வருடம் கற்பித்த ஆசிரியர் இரண்டாம் வருடம் இடமாற்றம் பெற்று வேறு பாடசாலை செல்ல ஆயத்தமான வேளையில் உணர்ந்தேன் தாயின் இனிய பாசம். அன்று சிந்திய கண்ணீர் ஆசிரியரின் அன்பின் உணர்வே அதன் பின் ஆசிரியர் வீட்டிற்கு மாலையில் வகுப்புக்கு செல்ல ஆரம்பித்தேன் இப்படியே குடும்ப உறவாக தொடங்கி பயணித்தோம். அதன் பின் உயர்தரம் முடித்தவுடன் முல்லைத்தீவு வந்த பின் மன்னார் சென்றால் ஆசிரியர் வீட்டுக்கு போகாமல் வர மாட்டேன் இப்படி தான் 22.02.2017எங்கள் மூத்த அண்ணாவின் குழந்தை கர்ப்பத்தில் இறந்ததால் அண்ணி மன்னார் வைத்திய சாலையில் என்று மன்னார் சென்ற நாங்கள் வைத்திய சாலை போய் வரும் போது மரியம்மா ஆசிரியர் வைத்திய சாலை வருவதை கண்டு ஓடி சென்று கதைத்தேன் அப்போது ஆசிரியர் கூறிய செய்தி என்னை இடித்தே போட்டது கிளரன்ஸ் ஆசிரியர் இரு கிழமையாய் கோமாக்கு போய் இப்போதே நலம் வார்ட்டில் என்றவுடன் என் கால்கள் ஆசானை பார்க்க விரைந்து ஆசிரியரை கண்டு கண்ணீர் என்னை அறியாமலே வர ஆசிரியர் என்னை ஆறுதல் படுத்த பின்பு வீடு சென்ற பின்னும் ஆசிரியரை சென்று பார்த்து வருவேன் என் முதல் கவிதை நூல் வெளியிடும் போதும் ஆசிரியரின் ஆசி பெற்றே ஆரம்பித்தேன் ஆசிரியரின் ஆசியால் தான் உங்களுடன் நான் கவிஞன் எனும் உறவாக வாழ்கிறேன் இன்று காலை[17.07.2022] வந்த தொலைபேசி அழைப்புடன் நான் நானாகவே இல்லை இறைவனில் கோபமும் கூட என் உயிரை எடுத்து என் ஆசானை காப்பாற்றி இருக்கலாம் என்று தாங்க முடியவில்லை. இந்த நொடி வரை ஆசானின் மரணம் ஏற்கவே முடியவில்லை மீண்டும் வருவாரா என்றே காத்திருக்கிறேன் கண்ணீரை அடக்கவே முடியவில்லை ஆசானே பிரிவு ஏன் வந்தது? கண்ணீர் சிந்தும் போது ஆறுதல் கூறும் நீங்கள் இன்று வர மறுப்பது ஏன்? இறுதியாய் முகம் பார்க்க முடியாத பாவியாகி விட்டேன். ஏன் என்ன செய்தேன் தாயே? முடியவில்லை என்றும் நீங்கள் காட்டிய பாதையில் வாழ்ந்து உங்கள் பெயரை உலகத்துக்கு கூறுவேன் ஆசானே. உங்கள் ஆன்மா அமைதியில் துயில் கொள்ளட்டும்.

ஆசானே உங்களை பற்றி எழுத நிறைய உண்டு என் வாழ்வில் நீங்கள் செய்த தியாகம் அதிகம் ஆசானே. இருந்தும் வலியுடன் ஒருதுளியை இதுவரை எழுதினேன்.

ஓய்வு எடுங்கள் மரணமொன்றா தாயிடமிருந்து தனயனை பிரிக்கும்?





கிளைம்சென்
(பாரதி மைந்தன்)
மன்/புனித சவேரியார்
ஆண்கள் தேசிய
பாடசாலை
(2014 கலைப்பிரிவு)



# காகத்தின் கூட்டில் குயில்முட்டை... கூவுமா? கரையுமா?



**அரசியலமைப்பே** நாட்டின் அரசியல் செயற்பாடுகளுக்கான வழிகாட்டி. அந்த வழிகாட்டியின்படி மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் யாவும் சட்டரீதியானவை. கேள்விக்கு உட்படுத்தப்பட முடியாதவை என்றும் கூறலாம். ஆனால் அந்த நடவடிக்கைகள் சில, சில தருணங்களில் வினோதமான செயற்பாடுகளாக அமைந்திருப்பதைக் காண முடிகின்றது. சட்ட வலுவுள்ளதாக இருந்தாலும் இந்த வினோதத்தை நியாயமற்றதாகவே நோக்க வேண்டி இருக்கின்றது.

தேர்தலின் பின்னர் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தையும் நாடாளுமன்ற உறுப்புரிமையையும் கொண்டிருக்கின்ற கட்சியின் தலைவரை ஜனாதிபதி பிரதமராக நியமிக்கின்றார். இது சட்ட ரீதியானது. அதேவேளை, பிரதமராகப் பொறுப்பேற்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினராக இருத்தல் அவசியம் என்பதும் கவனிக்கத் தக்கது.

பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்ட பிரச்சினைகளே மக்களை அரசுக்கு எதிராக வீதிகளில் இறங்கிப் போராட நிர்ப்பந்தித்திருந்தது. பொருளாதாரப் பிரச்சினை காரணமாக நாட்டில் பணவீக்கம் அதிகரித்துள்ளது. பொருட்களின் விலைகள் பல மடங்கு உயர்வடைந்திருக்கின்றன. இந்த விலை உயர்வு என்பது சில ரூபாய்களினால் அதிகரிக்கவில்லை. மாறாக நூற்றுக்கணக்கான ரூபாய்கள் என்ற ரீதியில் அதிகரித்தன. அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால் விலை அதிகரிப்பின்போது அத்தியாவசியப் பொருட்களை மக்கள் பெற்றுக் கொள்ளத் தக்கதாக இருந்தது. இதனால் பொருட்களின் விலை உயர்வுகளை மக்கள் தங்கிக் கொண்டார்கள். அதைப்பற்றி பெரிய அளவில் அவர்கள் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் விலை உயர்வோடு உணவுப் பொருட்களுக்கும் எரிபொருட்களுக்கும் தட்டுப்பாடும் பற்றாக் குறையும் ஏற்படுத்திய சுமையை அவர்களால் தாங்க முடியவில்லை. நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டார்கள். மூன்று வேளை உணவு இரண்டு நேர உணாவாகவும், சில வேளைகளில் ஒருவேளை உணவாகவும் ,குறைய நேரிட்டது. இந்த நிலையிலேயே மக்கள் வீதிகளில் போராடத் தொடங்கினார்கள்.

மக்கள் போராட்டத்தின் பிரதான மையமாக விளங்கிய காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் அருகில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்தைச் செயலிழக்கச் செய்தது. போராட்டக்காரர்களினால் சுற்றி வளைக்கப்பட்ட பிரதமருடைய அலரி மாளிகையும் செயலிழந்து போனது.

ஜனாதிபதியும் பிரதமரும் பதவி துறக்க வேண்டும். அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்று கோரி மக்கள் தொடர்ச்சியாகப் போராடினார்கள். இந்தப் போராட்ட அழுத்தம் காரணமாக பிரதமராகப் பதவி வகித்த மகிந்த ராஜபக்ஷ மே மாதம் 9 ஆம் திகதி பதவியைத் துறந்து அலரி மாளிகையில் இருந்து வெளியேறினார். அலரி மாளிகை முற்றுகைப் போராட்டம் நடத்திய போராட்டக்காரர்களின் வசமாகியது.





பி.மாணிக்கவாசகம்

கோத்தாபாய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்பது உள்ளிட்ட நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் வெற்றிடமாகிய பிரதமர் பதவியை பொறுப்பேற்றுக் கொள்வதாகக் கூறி, ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளுக்கமைய, பிரதமர் பதவியை ஏற்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மறுத்துவிட்டார்.

## நிபந்தனையற்ற பதவி ஏற்பு

ஆனால் ரணில் விக்கிரமசிங்க எந்தவித நிபந்தனைகளுமின்றி, கோத்தாபாயவின் அழைப்பின் பேரில் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டார். இந்த நியமனம் சட்ட ரீதியானது. அரசியலமைப்புச் சட்டத்திற்கு அமைவானது.

ஆனால், பிரதமர் பதவி என்பது நாட்டின் இரண்டாவது அதி உயர் அரச பதவியாகும். முன்னர் குறிப்பிட்டது போன்று தேர்தலில் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வெற்றிகொண்ட கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஒருவரே பிரதமராக முடியும். அதாவது மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட ஒருவராக இருத்தல் வேண்டும்.

ஆனால் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியை மக்கள் முற்றாகப் புறக்கணித்திருந்தனர். கட்சியின் தலைவர் என்ற ரீதியில் ரணில் விக்கிரமசிங்கவினாலும் தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை. இதனால் அவரது கட்சியில் இருந்து ஒருவர்கூட நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகவில்லை. மாறாக தேர்தலில் அந்தக் கட்சிக்கு நாட்டின் பல பகுதிகளிலும் உதிரிகளாக அளிக்கப்பட்டிருந்த 2 வீதம் மாத்திரமே கொண்ட 2 லட்சத்து 49 ஆயிரத்து 435 வாக்குகளின் மூலம் ஒரேயொரு தேசியப் பட்டியல் உறுப்புரிமையைப் பயன்படுத்தி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றப் பிரதிநிதியானார்.

அவர் சட்ட ரீதியான முறையிலேயே நாடாளுமன்ற உறுப்பினரானார். ஆனால் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர் நியமன நாடாளுமன்ற உறுப்பினராகி அதன் வழியில் நாட்டின் பிரதமராகிய வினோத சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது. பிரதமர் என்ற வகையில் ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷவினால் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுவிட்டார். இந்த நியமனமும் அரசியலமைப்புச் சட்ட விதிகளுக்கு அமைவாகவே இடம்பெற்றிருக்கின்றது. இதிலேயும் ஒரு வினோதத் தன்மை காணப்படுவதைக் காணலாம்.

> **ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட ராஜபக்ஷக்களும் அரசாங்கமும் பதவி துறக்க வேண்டும் என்ற மக்களின் போராட்ட கோரிக்கைக்கு மத்தியில் ராஜபக்ஷக்களை அரசியல் சிக்கலில் இருந்து பிணை எடுப்பதற்காக அவர்களைப் பாதுகாப்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்க பிரதமராகினார் என்றும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இத்தகைய ஓர் அரசியல் பின்னணியிலேயே அவர் பதில் பிரதமராக ஜனாதிபதி கோத்தாபாயவினால் நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.**

நாட்டின் அரசியலமைப்பு ஜனநாயக ரீதியிலானது. குடியரசு தன்மையைக் கொண்டது. இதனாற்தான் இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசு என்று பெயர் பெற்றிருக்கின்றது. நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி மக்களுடைய செல்வாக்கின் மூலாக அதாவது மக்கள் செல்வாக்குடன் தேர்தல் மூலமாகத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று அழுத்திக் கூறியிருக்கின்றது. அது மட்டுமல்லாமல்





12 ஆம் பக்கம் பார்க்க...



# காகக்கூட்டில் குயில்முட்டை... கூவுமா? கரையுமா?

ஜனாதிபதி தேர்தலில் அளிக்கப்படுகின்ற வாக்குகளில் 51 வீதமான வாக்குகளைப் பெற்றவரே வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்.

அந்த வகையிலேயே 69 லட்சம் சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளைப் பெற்று கோத்தாபாய ராஜபக்ஷ 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

அரசியலமைப்பின் மூலம் அத்தகைய முக்கியத்துவம் மிக்க ஜனாதிபதி பதவிக்கு பதில் ஜனாதிபதியாக பொதுத் தேர்தலில் நேரடி வாக்குகளின் மூலம் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படாதவரும், தேர்தலில் படுதோல்வி அடைந்த கட்சியின் தலைவருமாகிய ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாகி இருக்கின்றார்.

## சட்ட ரீதியானவை ஆனால் நியாயமானவையா....?

அவருடைய பிரதமர் பதவி நியமனமும்சரி, பதில் ஜனாதிபதி நியனமமும்சரி சட்ட ரீதியானது. அரசியலமைப்புக்கு உட்பட்ட வகையிலேயே இடம்பெற்றிருக்கின்றது. ஆனால் ஜனநாயகப் பண்பின்படி மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற நியதி சட்ட வரையறை இந்த நியமனங்களில் காணப்படவில்லை.

> “பதில் ஜனாதிபதி என்ற நிலையில் இருந்து அடுத்த கட்டமாக பதவியில் உள்ள அரசாங்கத்தின் ஆட்சிக் காலமாகிய அடுத்த இரண்டரை வருடங்களுக்கு ஜனாதிபதி பதவியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் இடைக்கால அரசாங்கத்திற்கு முன்னோடியாக அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஜனாதிபதி தெரிவுக்கான போட்டியில் ரணில் விக்கிரம சிங்க நம்பிக்கையோடு களமிறங்கி வெற்றி பெற்றுள்ளார்.”

நாடாளுமன்ற உறுப்புரிமைக்கான தேசியப்பட்டியல் உறுப்புரிமை என்பது மக்களால் அளிக்கப்படுகின்ற வாக்குகளின் அடிப்படையிலேயே வரையறுக்கப்பட்டிருக்கின்றது என்ற வாதம் முன்வைக்கப்படலாம். ஆனால் அந்த வாதம் பிரதமர் மற்றும் பதில் ஜனாதிபதி என்ற நாட்டின் அதி உயர் அரச பதவிகளுக்கான சட்ட நியதியை முழுமையாக அது நிறைவேற்றியிருப்பதாகக் கூற முடியாது என்பது சட்டத்துறை நிபுணர்களின் கருத்து. இந்த நியமனங்கள் சட்ட ரீதியானவை. சுட்ட வலுவைக் கொண்டிருக்கின்றன என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. ஆனால் அந்த நியமனங்கள் நியாயமானவையா என்பது கேள்விக்கு உரியதாகும் என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டி இருக்கின்றனர்.

மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை இராஜிநாமா செய்ததையடுத்து ஏற்பட்டிருந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷ சிரமங்களை எதிர்கொண்டிருந்த போது, அவருடைய அழைப்பை ஏற்று பொருளாதார சிக்கலுக்கு உள்ளாகியிருந்த நாட்டை மீட்பதற்காக ‘நெருக்கடி முகாமையாளராக’ ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை, ஏற்றுக்கொண்டார். இதனை அவரே தெரிவித்திருக்கின்றார்.

நெருக்கடி முகாமையாளர் என்ற ரீதியில் பிரதமர் பதவிப் பொறுப்பை ஏற்று பொருளாதார சிக்கலில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதே தனது முக்கிய கடமையாகும் என்றும், ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட முழு அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்ற மக்கள் போராட்ட கோரிக்கைக்கான அரசியல் முறைமையில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற அரசியல் விடயத்திற்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனாலும் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட ராஜபக்ஷக்களும் அரசாங்கமும் பதவி துறக்க வேண்டும் என்ற மக்களின் போராட்ட கோரிக்கைக்கு மத்தியில் ராஜபக்ஷக்களை அரசியல் சிக்கலில் இருந்து பிணை எடுப்பதற்காக – அவர்களைப் பாதுகாப்பதற்கானவே ரணில் விக்கிரமசிங்க பிரதமராகினார் என்றும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இத்தகைய ஓர் அரசியல் பின்னணியிலேயே அவர் பதில் பிரதமராக ஜனாதிபதி கோத்தாபாயவினால் நியமிக்கப்பட்டார் என்பது , குறிப்பிடத்தக்கது.

## அடுத்த கட்டம் என்னவாக இருக்கப் போகின்றது....?

ஜனாதிபதி பதவியைப் போலவே பிரதமர் பதவியும் அரசியலில் முக்கியமானது. ஜனாதிபதி நாட்டைவிட்டு வெளியேறியுள்ள நிலையில் பதில் ஜனாதிபதியாக பிரதமர் நியமிக்கப்பட்டிருக்கின்றார். இந்த நிலையில் இரண்டு பதவிகளையும் ஒரே நேரத்தில் ஒருவரே வகிக்க முடியுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. அரசியல் ரீதியிலான நெருக்கடி ஒன்று உருவாகியுள்ள சூழலில் நாட்டில் பிரதமர் பதவி வெற்றிடமாக இருப்பது எந்த அளவில் சரியானது என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இந்தக் கேள்விகளுக்கு சட்ட ரீதியில் மக்களுக்கு விளக்கமளிக்கப்பட வேண்டியது அவசியம்.

ஏனெனில் பொதுஜன பெரமுன கட்சி அரசாங்கத்தின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முழு அரசுமே பதவி விலக வேண்டும் எனக் கோரி மக்கள் போராடி வருகின்றார்கள். ஜனாதிபதி நாட்டைவிட்டு வெளியேறி, தனது பதவியைத் துறந்துள்ள நிலையில், பதில் ஜனாதிபதியாக நியமனம் பெற்றுள்ள பிரதமரையும் பதவி விலக வேண்டும் எனக் கோரி மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றார்கள்.

மகிந்த ராஜபக்ஷ பதவியை இராஜிநாமா செய்ததையடுத்து, தனது மேற்குலக ஆதரவுப் போக்கு அரசியல் நிலைப்பாட்டின் மூலம் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கையோடு பிரதமர் பதவியை ஏற்றிருந்த ரணில் விக்கிரமசிங்கவினால் மக்களுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்ற வகையில் செயற்பட முடியவில்லை. அவர்களின் நம்பிக்கையை தனது நடவடிக்கைகளின் மூலம் வெற்றி கொள்ளவும் முடியவில்லை. இந்த நிலையில், மக்களுடைய வெறுப்பைச் சம்பாதித்துள்ள ராஜபக்ஷக்களை, அரசியல் பிணை எடுப்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்க பிரதமராகியுள்ளார் – பிரதமராக்கப்பட்டுள்ளார் என்ற கருத்தும் மக்கள் மத்தியல் இருந்து வெளிப்பட்டிருக்கின்றது.

நாட்டின் பிரதமராக ஐந்து தடவைகள் பதவி வகித்துள்ள அனுபவத்தைக் கொண்டு எப்படியும் ஜனாதிபதியாகிவிட வேண்டும் என்பது ரணில் விக்கிரமசிங்கவின் நீண்டகால அரசியல் கனவு.







அந்தக் கனவு தேர்தலின் ஊடாக அல்லாமல் தேசியப்பட்டியல் மூலமான நாடாளமன்ற உறுப்பினர் நியனம் என்ற அடித்தளத்தில் அவருடைய அரசியல் கனவு பதில் ஜனாதிபதியாக நிறைவேறி இருக்கின்றது. இது ராஜபக்ஷக்களின் அரசியல் செயற்பாட்டின் மூலமே சாத்தியமாகி உள்ளது. இதனால் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கத்தை ராஜபக்ஷக்களின் நிழல் அரசாங்கமாகவே பலரும் கருதுகின்றனர்.

பதில் ஜனாதிபதி என்ற நிலையில் இருந்து அடுத்த கட்டமாக பதவியில் உள்ள அரசாங்கத்தின் ஆட்சிக் காலமாகிய அடுத்த இரண்டரை வருடங்களுக்கு ஜனாதிபதி பதவியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் இடைக்கால அரசாங்கத்திற்கு முன்னோடியாக அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஜனாதிபதி தெரிவுக்கான போட்டியில் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கையோடு களமிறங்கி வெற்றி பெற்றுள்ளார்.

இந்த வெற்றி ஜனாதிபதியாக வேண்டும் என்ற அவரது அரசியல் கனவை நனவாக்கியுள்ளது. அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் பொதுஜன பெரமுன கட்சி அணிவகுத்து இடைக்கால அரசாங்கத்தை அமைத்துள்ள அதிசயம் இடம்பெற்றிருக்கின்றது. மக்களின் பேராதரவைப் பெற்று மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருந்த பொதுஜன பெரமுன கட்சி அரசாங்கத்தில் இருந்து ஜனாதிபதி கோத்தாபாய நாட்டைவிட்டுத் தப்பியோடி பதவியை இராஜிநாமா செய்துள்ள போது இந்த அரசியல் கட்சிக் கலவையிலான அரசாங்கம் துளிர்த்திருக்கின்றது.



ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் படுதோல்வி அடைந்து அந்தக் கட்சி பிளவடைந்து நிர்மூலமாகின்ற நிலையில் அதன் தலைவர் நாட்டின் அதியுயர் பதவியாகிய ஜனாதிபதி பதவியைப் பெற்றிருக்கின்றார். இந்த அரசியல் அதிர்ஷ்டம் அவருக்கு கோத்தாபாயாவின் அரசியல் நடவடிக்கையின் மூலம் சாத்தியமாகி உள்ளது, இந்த நிலையில் ஐக்கிய தேசிய கட்சியின் தனி உறுப்பினர் என்ற ரீதியில் பொதுஜன பெரமுன கட்சி அரசாங்கத்தின் தலைவராக ராஜபக்ஷ குடும்ப அரசியல் பாசறையில் இருந்து கோலோச்சப் போகின்றார்.

தீர்க்கதரிசனமற்ற, நாட்டு மக்களின் நலன்களைப் புறந்தள்ளி ராஜபக்ஷ குடும்ப ஆட்சியாகப் பரிணமித்திருந்த ஆட்சி போராடட்டக்காரர்களினால் மண்டியிடப்பட்டு தோல்வியைத் தழுவி உயிரச்சத்துக்கு உள்ளாகியுள்ள நிலையில் ராஜபக்ஷக்களின் நிழல் அரசாங்கமாகத் தொடரப் போவதற்கான அறிகுறியாகவே இந்த ஜனாதிபதி தெரிவில் அவருக்குக் கிடைத்துள்ள வெற்றி திகழ்கின்றது.

அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய காலிமுகத் திடல் போராட்டக்காரர்களை பாஸிசவாதிகள் என விளித்து, தனது தனிப்பட்ட இல்லம் தீக்கிரையாக்கப்பட்ட பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோத்தாபாய ராஜபக்ஷவின் மறு அவதாரமாக உண்மையான சர்வாதிகாரியாக அடுத்த கட்டமாகச் செயற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அத்தகைய நிலைமைகளுக்கான குறிகாட்டிகளையே அவருடைய ஜனாதிபதித் தெரிவு வெற்றி காட்டுவதாக அமைந்திருக்கின்றது.

# ஆடுகளங்களின் அதிர்வுகள்

இராஜேஸ் மணாளன்

## நட்சத்திர வீரர் ஓய்வு?



டென்னிஸ் உலகின் முடிசூடா மன்னனாகத் திகழும், சுவிஸ் வீரர் ரோஜர் பெடரர், தான் ஓய்வு பெறப் போவதாக சூசமாகத் தெரிவித்திருப்பது, இந்த வார தலைப்புச் செய்தியாகி இருக்கின்றது. 20 முறை கிரான்ட் ஸ்லாம் மோதல்களை வென்ற இவர், காயம் காரணமாக, நீண்ட காலமாக விளையாடாமல் இருந்து வருகிறார். சமீபத்தில் நடந்து முடிந்த விம்பிள்டன் மோதல்களிலும் அவர் கலந்து கொள்ள முடியாமல் போயிருக்கின்றது.

இப்படியொரு நிலையில் ஒரு தொழில் முறை வாழ்க்கையில் நிரந்தரமாக நீடிக்க முடியாது.இனியும் சவாலாக ஆடமுடியவில்லையென்றால் ஆடுவதை நிறுத்தி விடுவது சிறந்தது. டென்னிஸ் ஆடுகளத்திற்கு குட்பை சொல்லி விடலாம் போலிருக்கின்றது என்று மறைமுகமாக தன் ஓய்வு பற்றி இவர் பிரஸ்தாபித்துள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம், தன் சொந்த மண்ணில் வருடா வருடம் நடாத்தப்படும் சுவிஸ் இன்டோர்ஸ் சுற்றுப் போட்டியில் இவர் பங்குபற்றுவதை உறுதிப்படுத்தி இருக்கிறார்.

அப்படி விளையாடினால், 2021 இல் விம்பிள்டன் காலிறுதிப்போட்டியில் தோற்றபின்னர், விளையாடப்போகும் முதன் மோதல் இதுவாகவே (ஒக்டோபர் 25) இருக்கும். (சுமாராக ஒன்றைரை வருட இடைவெளியில்)

இந்த சுவிஸ் தொடரில் 13 தடவைகள் விளையாடிய இவர், அனைத்து மோதல்களிலும், இறுதி மோதல்களுக்கு தெரிவாகி இருக்கிறார். இந்தப் பதின்மூன்றில் பத்துத் தடவைகள் கிண்ணத்தை வென்றிருப்பது ஓர் அற்புத சாதனைதான்..

20 கிரான்ட் ஸ்லாம் வெற்றிகள் என்ற இவரது நீண்ட காலச்சாதனையை, கடந்த ஜனவரியில், ஸ்பானியரான நடால் உடைத்து, தனது 21வது கிரான்ட் ஸ்லாம் வெற்றியைப் பெற்றிருந்தார். (அவுஸ்திரேலியன் கிரான்ட் ஸ்லாம்)

## எல்.பி.எஸ். தொடர் ஒத்தி வைப்பு



ஒரு பக்கம் இலங்கை போராட்டங்களால் கொந்தளித்துக் கொண்டிருக்க, எல்.பி.எல் என்று அழைக்கப்படும் லங்கா பிரிமியர் லீக்கின் நடப்பு ஆண்டுக்கான தொடர், எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதியன்று ஆரம்பிக்கப் போவதாக முன்பு நிர்வாகம் அறிவித்திருந்தது.இப்பொழுது அந்தத் திகதி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது

முதல் போட்டியில் நடப்பு சாம்பியனான யாழ்ப்பாணம் கிங்ஸ் அணி காலி கிளேடியேட்டர்ஸ் அணி மோதவுள்ளன.

24 போட்டிகள் கொண்ட இத் தொடரின் முதல் சுற்றுப் போட்டிகளில் 20 போட்டிகள் இடம்பெறும். இறுதிப்போட்டி உட்பட 4 போட்டிகள் தொடர்ந்து இடம்பெறவுள்ளன.

## றொனால்டோ விற்பனைக்கு இல்லை

நட்சத்திர காற்பந்தாட்ட வீரரான றொனால்டோ இன்னமும் எங்களுடன்தான் இருக்கிறார். இவர் விற்பனைக்கு இல்லை என்று மன்செஸ்டர் யுனைட்டெட் கழகத்தின் பொறுப்பதிகாரி எரிக் டென் ஹொக் அறிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக , றொனால்டோ இங்கிலாந்து கழகத்தை விட்டு விலகப்போகிறார். தாய்லாந்து சுற்றுப் பயணத்தில் கலந்து கொள்ள மாட்டார் என்றெல்லாம் பரவிய வதந்திகளுக்கு முற்றுப்புள்ளியாக இந்த அறிவித்தல் வெளிவந்துள்ளது.

முன்பு ரியல் மட்ரிட், ஜூவென்ரஸ் அணிகளுக்காக விளையாடியிருந்த இவர், மன்செஸ்டர் யுனைட்டெட் அணிக்கு திரும்பியுள்ளார். 5 தடவைகள் சிறந்த காற்பந்தாட்ட வீரருக்கான விருதை ( Ballon d'Or) கிரிஸ்டீனோ றொனால்டோ வென்றுள்ளார்.

கடந்த ஒரு வருட காலமாக இங்கிலாந்து கழகத்திற்காக விளையாடி வரும் இந்த 37 வயதான காற்பந்தாட்ட வீரர், கழகத்தை விட்டு விலகலாம் என்று பேச்சடிபட்டது.க்உஊஅ சாம்பியன் லீக் கிண்ணத் தொடரில் தகுதி பெறாமல் போனது, இந்தக் கிசுகிசுக்களுக்கு மேலும் உரமூட்டிக் கொண்டிருந்தது. முன்பு இத்தாலியில்(Turin) போர்த்துக்கல் மனேஜர் Jorge Mendes என்பவரோடு இணைந்து 134 போட்டிகளில் விளையாடியிருந்த இவர் தன் பக்கம் இழுப்பதாகவே செய்திகள் முன்பு கசிந்திருந்தன.

பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு சவுதி காற்பந்தாட்டக் கழகம், 275 மில்லியன் டாலர் தொகைக்கு இவரை வாங்க விரும்பியும்இவர் சம்மதிக்கவில்லைஇ இதற்குச் சம்மதித்திருந்தால், உலகிலேயே அதிக தொகை சம்பாதிக்கும் கால்பந்தாட்ட வீரராக இவர் மாறியிருப்பார். தவிர்க்க முடியாத குடும்பக் காரணங்களுக்காகவே, தான் தாய்லாந்து, அவுஸ்திரேலிய சுற்றுலாவில் பிந்தியே கலந்து கொள்வதாகத தெரிவிக்கப்பட்டுள்ளது.




## வென்றார் பி.வி. சிந்து



சிங்கப்பூர் பேட்மின்டன் ஓபன் இறுதிப் போட்டியில் சீனா வீராங்கனை வாங் சியை வீழ்த்தி வெற்றிப் பெற்றுள்ளார் பி. வி. சிந்து.சிங்கப்பூரில் நடைபெற்று வரும் சிங்கப்பூர் ஓபன் பேட்மின்டன் போட்டியில் சிந்து சீன வீராங்கனை வாங் சியை 21 -9, 11-21, 21-15 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.

தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது ‘டுவிட்டர்’ பக்கத்தில் வெளியிட்டுள்ள.

பதிவில், தனது முதல் சிங்கப்பூர் ஓபன் வெற்றியை பதிவு செய்துள்ள நமது ஊக்கமிகு பேட்மிண்டன் வீராங்கனை பி.வி.சிந்துவுக்கு எனது பாராட்டுக்கள். இதே ஆற்றலோடும், உத்வேகத்தோடும் பர்மிங்காம் காமன்வெல்த் போட்டிகளிலும் விளையாட வாழ்த்துகிறேன். அடிவானத்தில் ஒரு புதிய விண்மீனாக தோன்றியுள்ளார், என்று வாழ்த்தியுள்ளார்.சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற பி.வி.சிந்துவுக்கு பிரதமர் மோடியும் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே பி.வி.சிந்து சையத் மோடி பேட்மிண்டன் தொடர், ஸ்விஸ் ஓபன் பேட்மிண்டன் தொடர்களில் இந்த ஆண்டு சாம்பியன் பட்டம் வென்ற நிலையில் தற்போது அவர் சிங்கப்பூர் ஓபன் தொடரையும் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தொடரை வென்றது இந்தியா

இங்கிலாந்தில் இடம்பெந்ந மூன்று ஒரு நாள் போட்டித் தொடரில், இந்தியா 2-1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றி உள்ளது.

இநுதியாக நடந்த மோதலில் ரிஷப் பான்ட் சதமடித்து அசத்தினார். இறுதிவரை ஆட்டமிழக்காமல் 125 ஓட்டங்கள் எடுத்த இவருக்கு இது முதலாவது சதமாகும். ஹார்த்திக் பாண்டியா பந்து வீச்சிலும்,(4) விக்கெட்டுகள் துடுப்பாட்டத்திலும்(71) ஓட்டங்கள்) என்று தன் கைவரிசையைக் காண்பித்தார். இவர் தொடர் நாயகனுக்கான விருதைப் பெற்று கௌரவிக்கப்பட்டார் கோலி இந்தத் தடவையும் தனது துடுப்பாட்டத்தில் சோபிக்கவில்லை..கண்டா வரச் சொல்லுங்க.. சதம் அடிக்கும் கோலியை கையோடு கூட்டி வாருங்கோ.. என்று இணையத்தில் கேலியாகச் சொல்கிறார்கள்.

முதற் தடவையாக இங்கிலாந்து அணிக்கு தலைமை தாங்கிய பட்லருக்கு, இது பெரிய ஏமாற்றமாகும்.






# உருளைக்கிழங்கை உருவாக்கும் வித்தை!

## உருளைக்கிழங்கு வளர்ப்பு: கொள்கலகன்களிலும், பைகளிலும் வளர்ப்பது எப்படி?



யேமிகா பொன்னுத்துரை
விவசாய பீடம்,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

**உருளைக்கிழங்கு** (potato) சோலானம் டியூபரோசம் (solanum tuberosum) என்னும் செடியின் வேரில் இருந்து பெறும் மாவுப்பொருள் நிறைந்த, சமையலில் பயன்படும், ஒருவகைக் கிழங்காகும். உருளைக் கிழங்குத் தாவரம் நிழற்செடி (nightshade) குடும்பத்தைச் சேர்ந்தது. அரிசி, கோதுமை, சோளம் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக உலகில் நான்காவதாக அதிகம் பயிர் செய்யப்படும் செடியினமாகும். மிக எளிதாக வளர்க்கக்கூடிய கிழங்கு வகைகளில் உருளைக் கிழங்கும் ஒன்று. இவை வளர்ப்பதற்கு வேடிக்கையானது அதுமட்டுமல்லாமல் இது குறைந்த இடத்திலேயே மிக சிறந்த மகசூல்



அளிக்கக் கூடியது. இள வசந்தமே இவற்றை பயிரிடுவதற்கு ஏற்ற காலம்.

உருளைக் கிழங்கு வளர்ப்பதில் நமக்கு கிடைக்கும் அநேக வெகுமதிகளில் ஒன்று இதனை வளர்ப்பின் வெவ்வேறு நிலைகளில் நாம் பயன்படுத்தலாம். இளம் கிழங்குகளை (புது உருளை கிழங்குகள்) அறுவடை செய்து அதனை பட்டாணியுடன் சேர்த்து சமைத்து சாப்பிடுவது வழக்கம். ஆனால் பெரும்பாலான கிழங்குகளை முழுமையாக வளர விட்டு அதனை அறுவடை செய்து வருடம் முழுதும் சேமித்து பயன் படுத்தலாம்.

கொள்கலன்களில் உருளைக்கிழங்கினை வளர்ப்பதன் மூலம் நீங்கள் இடப்பிரச்சனையை அழகாக சமாளிக்கலாம். உருளைக்கிழங்குகளை கொள்கலன்களில் பயிரிடுவதன் மூலம் அதனை எளிதாக அறுவடை செய்யலாம் ஏனெனில் எல்லா கிழங்குகளும் ஒரே இடத்தில் இருக்கும். உருளைக்கிழங்குகளை கோபுரங்களில், குப்பை தொட்டிகளில் (waste paper basket), வளர் பைகளில்(Grow bags), ஏன் சாக்குகளில் கூட வளர்க்கலாம். இந்த முறை மிக சுலபமானது. விதைப்பிலிருந்து அறுப்பு வரை முழு குடும்பமாக பங்கு கொண்டு மகிழ கூடிய செயல்முறை இது.

கொள்கலன் உருளைக்கிழங்கு தோட்டம்.

கொள்கலன்களில் வளர்க்க சிறந்த வகை சீக்கிரத்தில் முதிர கூடிய உருளைக்கிழங்குகளே ஆகும். சிறந்த நோயற்ற கிழங்குகளை விதைகளுக்காக எடுத்து கொள்ளுங்கள். பொதுவாக 70-90 நாட்களுக்குள் வளரக்கூடிய வகைகளை தேர்ந்தெடுப்பது பரிந்துரைக்கத்தக்கது. உங்களுக்கு மிகவும் பிடித்த வகைகளை கூட நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். ஆனால் சில வகைகள் முதிர 120 நாட்கள் வரை எடுக்கும் அவற்றை தவிர்ப்பது நல்லது.

உருளைக்கிழங்கு வளர்க்க நிறைய முறைகள் இருக்கின்றன. பொதுவாக மண்ணில் வளர்ப்பது தான் வழக்கம் ஆனால் நன்கு வடிய கூடிய வேறு எந்த ஊடகமானாலும் (medium) உபயோகிக்கலாம்.

நீங்கள் இறப்பர் அல்லது பிளடிக்(plastic) கொள்கலன்களை பயன்படுத்துவதாய் இருந்தால் நீர் வடிவதற்காக நிறைய துவாரங்களை இட்டுகொள்ளுங்கள். நீங்கள் அடர்த்தியான சாக்குப்பைகளை கூட பிரயோகிக்கலாம், அவற்றால் சுவாசிக்கவும் நீர் வெளியேற்றவும் முடியும். நீங்கள் எந்த கொள்கலனை பயன்படுத்துவதாயிருந்தாலும் சரி மேலும் மண் இடுவதற்கு இடம் இருக்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள். அப்படி செய்வதன் மூலம் இன்னும் நிறைய கிழங்குகள் வளர நாம் செடியை ஊக்குவிக்கலாம்.



### எங்கு வளர்ப்பது?
### இடம்.

உருளைக்கிழங்கு வளர்ப்பதற்கு இடம் திறந்த வெளியாகவும் சூரிய ஒளி அதிகம் படும் வகையிலும் இருக்க வேண்டும். உருளைக்கிழங்கிற்கு வளமான மற்றும் நன்றாக வடிகால் இருக்கக் கூடிய நிலமாக இருக்க வேண்டும். இரண்டு வருடங்கள் அல்லது அதற்கு மேலாக உருளைக் கிழங்கு விளைந்த இடத்தை தேர்ந்தெடுப்பது நல்லதில்லை ஏனென்றால் நோய்கள் பரவக்கூடிய வாய்ப்பு அதில் அதிகம். காரத் தன்மை (alkaline) அதிகம் இருக்கக் கூடிய நிலமானது உருளை வளர்ப்பிற்கு நல்லது.

சுமார் 6-8 மணி நேர சூரிய வெளிச்சமும், 16ஜசெல்சியஸ் வெப்ப நிலையும் இதற்கு ஏற்றதாகும். புது கிழங்குகளை அறுவடை செய்ய இதனை டெக்குகளில் வளர்ப்பது நல்லது. இதற்கு உங்கள் சமையலறை பக்கத்திலேயே ஒரு தொட்டியிலோ, அல்லது உங்கள் வீட்டின் உள் முற்றத்தில் ஒரு 20 லிட்டர் வாளியிலோ உருளைகிழங்கினை வளருங்கள்.



### எப்படி வளர்ப்பது? முளை கட்டுதல்

உருளைக்கிழங்குகளை மிதமான குளிர்ச்சி மற்றும் ஒளி இருக்கக்கூடிய இடத்தில் சில தினங்கள் வைத்தால் முளை கட்ட தொடங்கி விடும். இதன் மூலம் பலமான தண்டுகள் வளரும் மேலும் நிலத்தில் நட்ட பிறகு செடி வேகமாகவும் வளரும்.

உருளைக்கிழங்குகளை பனிக்காலத்திற்கு பிறகு பயிரிடுங்கள். நல்ல நீர் வடிய கூடிய மண்ணுடன் பொறுமையாக கலக்க கூடிய



கரிம உரங்களை கலந்து வைத்துக்கொள்ளுங்கள். சிறிது ஈரப்பதமுடைய இந்த கலவையை கொள்கலனில் 4-அங்குலம் அளவிற்கு நிரப்பவும். நீங்கள் விதைக்க இருக்கும் கிழங்குகளை 2 அங்குல துண்டுகளாக துண்டித்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு துண்டிலும் நிறைய முளைகள் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும்.

### செடி நடுதல்

முளை கட்டிய உருளைக்கிழங்குகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அளவில் இருந்தாலும் எல்லாமே நன்றாக வளரும். தட்ப வெப்ப நிலை மற்றும் நிலத்தின் தன்மை பொறுத்து செடிகளை நடலாம். 10 செமீ ஆழத்திற்கு குழி தோண்டி முளை கட்டிய உருளைக்கிழங்குகளை முளை மேல் நோக்கி இருக்குமாறு அதில் நட வேண்டும். குழிக்குள் நன்றாக மண் அடைத்து உருளைக்கிழங்குகள் அதில் புதையுமாறு செய்ய வேண்டும்.

சின்ன கிழங்குகளை அப்படியே நடலாம். துண்டுகளை 5-7 அங்குல

15 ஆம் பக்கம் பார்க்க...





உழுதுண்டு வாழ்வோம்
எமக்கான உணவில் தன்னிறைவு

# உருளைக்கிழங்கை உருவாக்கும் வித்தை!

## உருளைக்கிழங்கு வளர்ப்பு: கொள்கலகன்களிலும், பைகளிலும் வளர்ப்பது எப்படி?



இடைவெளியில் நடவும், பின்னர் அவற்றை 3 அங்குலம் ஈர மண்ணினால் மூடவும். இந்த உருளைக்கிழங்கு செடிகள் 7 அங்குல உயரம் வரை வளர்ந்தவுடன் மேலும் மண் இட்டு அதனை மூடவும். இப்படி கொள்கலன் நிரம்பும் வரை செய்துகொண்டே வர வேண்டும். கொள்கலன்களில் வளர்க்கும் உருளைக்கிழங்குகளுக்கு நிறைய தண்ணீர் தேவைப்படும் அதே நேரத்தில் நீர் தேங்காதவாறும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

### பாதுகாத்தல்

தண்டுகள் நிலத்தின் மேல் வரத் தொடங்கும் பொழுது பனி தண்டுகளின் நிறத்தை கருமையாக்கி உற்பத்தியை பாதிக்காமல் தடுக்க மண் கொண்டு அவற்றை மூடுவது நல்லது.

### நீர் பாய்ச்சுதல்

உருளைக்கிழங்குகள் விளையும் மண் ஈரமானதாக இருக்க வேண்டும் அதோடு ஈரப்பதமும் தொடர்ந்து இருக்க வேண்டும். 1 அல்லது 2 அங்குல அளவிற்கு நீர் இருப்பது அவசியமாகும்.

### அறுவடை

எப்போது அறுவடை செய்ய வேண்டும் என்பது தட்ப வெப்பம் மற்றும் மண்ணின் தன்மை கொண்டு வேறுபடும். செடிகள் பூக்கத் தொடங்கியவுடன் அறுவடை செய்ய



லாம். இதற்கு 10 முதல் 15 வாரங்கள் ஆகும்.

உருளைக்கிழங்கு செடிகள் பூ பூத்து, மஞ்சளாய் மாறியவுடன் கிழங்குகளை அறுவடை செய்யலாம். புது கிழங்குகளை பூ பூப்பதற்கு முன்னமே அறுவடை செய்யலாம்.

தண்டு மஞ்சளாய் மாறியவுடன் தண்ணீர் ஊற்றுவதை நிறுத்திவிட்டு ஒரு வாரம் காத்திருக்கவும். பின்னர் கிழங்குகளை தோண்டியோ அல்லது கொள்கலன்களை காலி செய்து அதிலிருந்து கிழங்குகளை எடுத்துக் கொள்வதோ எது வேண்டுமானாலும் செய்யலாம். பின்னர் கிழங்குகளை சுத்தப்படுத்தி, குணப்படுத்தி, சேமித்து வைத்துக்கொள்ளலாம்.

### நோய்கள்

உருளைக்கிழங்கில் முன் இலைக்கருகல், பின் இலைக்கருகல், பழுப்பு நிற அழுகல், உருளைக்கிழங்கு வைரஸ் மற்றும் இலைச் சுருள் வைரஸ் போன்றவை முக்கியமான நோய்களாகும்.

### உருளைக்கிழங்கு அந்துப்பூச்சி.

புதிய கிழங்குகளை நடவு செய்யும் போது நன்கு ஆழமாக நடுதல் வேண்டும். மேலும் தாய் அந்துப்பூச்சிகளை இனக்கவர்ச்சி கொண்டு கவர்ந்து அழிக்கலாம். இலையில் ஏற்படும் சேதாரங்களைத் தடுக்க வேப்பங் கொட்டைச்சாறு 5 சதவிகிதம் (அ) குயினால்



பாஸ் 2 மில்லியினை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும். நடவுக்கு பயன்படுத்தப்படும் விதைக் கிழங்கினைக குயினால்பாஸ் ஒரு கிலோவினை 100 கிலோ கிழங்கு என்ற அளவில் கலந்து நடவு செய்ய வேண்டும்.

### முன் இலைக்கருகல் (பூசண நோய்)

கிழங்கை நடவு செய்த பின் மூன்றிலிருந்து நான்கு வாரங்களுக்குப் பின் இந்நோய் தொன்றுகிறது. இலைகளில் வெளிர் பழுப்பு நிறமடைய புள்ளிகள் தோன்றும். பின்பு இப்புள்ளிகளில் வட்டவடிவமான வளையங்கள் தோன்றும். பாதிக்கப்பட்ட இலைகள் காய்ந்து உதிர்ந்துவிடும். இந்நோய் மண் மூலம் பரவுகிறது. இதைக் கட்டுப்படுத்த பயிர்ச்சுழற்சி செய்வதோடு தோட்டத்தையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். நோய் தாக்கி காய்ந்து போன இலைகளைச் சேகரித்து எரித்துவிடவேண்டும். நடவு செய்த 45,68 மற்றும் 75 வது நாட்களில் மான்கோசெப் அல்லது குளோரோதலோனின் என்ற மருந்தை எக்டருக்கு ஒரு கிலோ என்ற விகிதத்தில் தெளித்தும் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம்.

### பின் இலைக்கருகல்

உருளைக்கிழங்கில் தோன்றக்கூடிய அனைத்து நோய்களிலும் மிக முக்கியமானது பின் இலைக்கருகல் நோயாகும். சிறிய பழுப்பு நிறமுடைய நீர் கசியும் புள்ளிகள் இலைகளில் தோன்றுவது இந்நோயின் முதல் அறிகுறியாகும். மழையும் வெயிலிலும் மாறி மாறி இருக்கும்போது இப்புள்ளிகள் கருப்பு நிறமாக மாறி, இலைகள் அழுகிவிடும்.



பாதிக்கப்பட்ட இலைகளின் பின்புறத்தில் இப்பூசணம் வெள்ளை நிறத்தில் காணப்படும். இப்பூசணம் கிழங்குகளையும் தாக்குகின்றது. நோய் தாக்கப்பட்ட கிழங்கின் மூலம் இந்நோய் பரவுகிறது. எனவே இந்நோயைக் கட்டுப்படுத்த நோய் தாக்காத கிழங்கை நடவுசெய்யவேண்டும். தரையுடன் மூடிய படர் கிளைகளை நீக்கவேண்டும். நோய் தாக்கி கீழே விழுந்த இலைகளைச் சேகரித்து எரித்துவிடவேண்டும். முன் இலைக்கருகலைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தும் மான்கோசெப் அல்லது குளோரோதலோனில் என்ற மருந்தை எக்டருக்கு ஒரு கிலோ என்ற விகிதத்தல் நீரில் கலந்து நடவு செய்த 45,68 மற்றும் 75வது நாட்களில் தெளிக்கவேண்டும். இந்நோய்க்கு எதிர்ப்பத் திற்ன கொண்ட குப்ரி ஜோதி, குப்ரிமலர் மற்றும் குப்ரிதங்கம் ஆகிய இரகங்களைப் பயிரிடவேண்டும்.

பழுப்புநிற அழுகல் (பாக்டீரியா) நோய்.

இளஞ்செடிகள் உடனடியாக வாடுவதும், இலைகள் பழுப்புநிறமடைந்து தளர்ச்சியுற்றுத் தொங்குவதும் இந்நோயின் அறிகுறிகளாகும். நோய் முற்றிய நிலையில் செடிகள் வாடிக் காய்ந்துவிடும். தண்டின் உட்பகுதியில் பழுப்பு அல்லது கருப்பு நிறமாக மாறிவிடும். நோய் தாக்கப்பட்ட கிழங்கை வெட்டிப் பார்க்கும் போது கிழங்கின் ஓரத்தில் பழுப்பு நிறமுடைய வளையம் காணப்படும். இத



னைத் தொடர்ந்து இக்கிழங்குகள் அழுகிவிடும். வடிகால் வசதி இல்லாத இடங்களில் இந்நோயின் தாக்குதல் அதிகமாகக் காணப்படும். இந்நோயைக் கட்டுப்படுத்த இரண்டிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குப் பயிர்சுழற்சியைக் கடைப்பிடிக்கவேண்டும். நோய் தாக்காத கிழங்கை நடவு செய்ய வேண்டும். நோய் தாக்கப்பட்ட செடிகளைப் பிடுங்கி அழித்துவிடவேண்டும்.

### வைரஸ் நோய்கள். மொசைக் நோய்.

மொசைக் என்பது ஒரு வகையான வைரஸ் நோய் ஆகும். இந்நோயின் அறிகுறிகளாக இலையில் பச்சையத்திற்கு இடையே மஞ்சள் நிறக் கோடுகள் மற்றும் மஞ்சள் நிறத் திட்டுக்கள் காணப்படும். இதில் பாதிக்கப்பட்ட செடி மற்ற செடிகளுடன் உரசும் போது உருளைக்கிழங்கு வைரஸ் அசுவினி மூலம் பரவுகிறது.

### இலைச்சுருள் நோய்.

இந்நோயினால் பாதிக்கப்பட்ட செடிகளின் அடிப்பகுதியில் உள்ள இலைகள் மேல்நோக்கிச்சுருண்டுவிடும். பாதிக்கப்பட்ட செடிகளின் வளர்ச்சி குன்றி வெளரி நிறமாகத் தோன்றும். இந்த வைரசும் அசுவினி மூலம் பரவுகிறது.

வைரஸ் நோய்களைகட்டுப்படுத்த வைரஸ் தாக்காத செடிகளிலிருந்து கிழங்கு எடுத்து அதை நடவு செய்யவேண்டும். தேவையறிந்து பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தெளித்து அசுவினியைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் இந்நோய்த் தாக்குதலைத் தவிர்க்கலாம்.



# ரோஸியும் வெள்ளையம்மாவும்... ஒரே வீட்டில் உருவான நேசம்!




**வீட்டின்** மதில் சுவரில் பதுங்கி அமர்ந்திருப்பவர்கள் போல் மதில் சுவரின் வெளியே மதில் சுவரை ஒட்டியுள்ள எலிவங்கையே பார்த்தபடி கிட்டத்தட்ட அரைமணி நேரமாக கண்ணை சிமிட்டாமல் அதே இடத்தை பார்த்து அமர்ந்து கொண்டு இருந்தாள் டயானா. நானும் காம்பவுண்ட் கதவுக்கு அருகே படுத்து சற்று கண்ணயருவதாகவும் அவளைப் பார்ப்பதுமாகவே இருந்தேன். திடீரென்று தாவிக் குதித்தாள் டயானா. நான் வெளியே ஓடி சென்று பார்த்த பின் தான் தெரிந்தது அதன் வாயில் அது ஒரு கொழுத்த எலியோடு ஓடிக்கொண்டிருந்தது. அட இதற்கு தான் இப்படி வெறிச்சு பாத்துக்கிட்டு இருந்தாளோ என்று எண்ணிக்கொண்டே மீண்டும் பழைய இடத்தில் வந்து படுத்துக் கொண்டேன்.

முதலில் வீட்டு மதில் சுவரின் மேல் மட்டும் அமர்ந்து கொண்டு எலிகளைப் பிடித்து படிப் படியாக வீட்டு அப்பாவின் அபிமானம் பெற்று உள்ளே வந்து தைரியமாக உலவ ஆரம்பித்தாள் டயனா. கொஞ்சம் கொஞ்சமாக வந்தவள் பெரும்பான்மையான நேரம் இங்கேயே இருக்க ஆரம்பித்தாள். தினமும் காலை மாலை இரு நேரமும் டயானாவிற்குப் பால் சோறு போட்டார்கள்.

எனக்குப் பெரும்பாலும் தயிர் சாதம் தான். வாரத்தில் ஒரு நாள் அசைவம் அதுவும் அப்பாவின் மூத்த மகன் அசைவம் சாப்பிடும் நேரங்களில் கொடுப்பான். மற்ற மூவரும் சைவம் என்பதால் சைவம் தான். எப்படியும் தினமும் இரவு முட்டை தோசையோ முட்டை சாதமோ கிடைத்துவிடும். அதுவும் இல்லை என்றால் எனக்கு கஷ்டம் தான். ஏனென்றால் எனக்கு அசைவம் என்றால் மிகவும் பிடிக்கும். தினமும் தயிர் சாதத்தையும் சாப்பிடுவது ரொம்ப கஷ்டமாகத்தான் இருக்கிறது எனக்கு.


சரிதா. ஜோ

சரி டயானாவின் கதைக்கு வருவோம்.

டயானா அப்பாவின் அபிமானம் பெற முக்கியக் காரணம் வீட்டைச் சுற்றி மதில் சுவரின் கீழே ஏராளமான எலிகள் வங்கு போட்டு வாழ்கின்றன. அந்த வங்கு கட்டிடத்திற்கு சேதம் விளைவிப்பதாக அப்பா சொல்லிக் கொண்டிருக்கும் தருணத்தில் தான் டயானா வந்தாள். டயானா வந்தபின் அந்த எலிகளைப் பிடிக்க ஆரம்பித்தாள். அதனால் அப்பாவிற்கு என்னைவிட அவள் மீது சற்றே பிரியம் அதிகம்.

நாட்கள் நகர்ந்தன. இடையில் ஒருமுறை டயானா குட்டிகள் போட்டாள். டயானா இப்போது தன் குட்டிகளோடு உலவ ஆரம்பித்திருந்தாள். எப்போதாவது இருவரும் பரஸ்பரம் பேசிக் கொள்வோம். அப்பொழுது கூட முறைத்துக் கொண்டேதான் இருப்பாள். எனக்கு போடும் தயிர் சாதம் கூட டயானா சாப்பிட ஓடுவாள் நானும் விட்டுவிடுவேன். எனக்கு எப்பவுமே அவள் மீது ஒரு தனி பிரியம் உண்டு. அவள் சாப்பிட்டு முடித்த பின்பு தான் சாப்பிடுவேன்.

அந்த நேரத்தில் வீட்டின் இரண்டாவது மகன் நகுல் அவன் அம்மாவை அழைத்து ‘அம்மா பாரும்மா நம்ம ரோஸி நல்ல ரோஸி. நம்ம ரோஸிக்கு வைத்த சாப்பாட்டை டயானா சாப்பிட்டுட்டு இருக்கிறதைப் பார்த்தும் கூட நம்ம ரோஸி டயானா சாப்பிட்டு முடிச்சதுக்கு அப்புறம் சாப்பிடுது’ என்று கூறும் நேரத்தில் எனக்கு சற்றே பெருமையாக இருக்கும். அவளுக்காக என்னுடைய சாப்பாட்டை பெரும்பாலான நேரங்களில் விட்டுக்கொடுத்து இருக்கிறேன்.

ஒருநாள் நல்ல குளிர்கால மாலை நேரம் காற்று விசுவிசுவென்று வீசிக் கொண்டிருந்தது. நான் வீட்டின் முன்னால் முசுமுசு வென்று போடப்பட்டிருந்த கால்மிதி மீது என்னுடைய வாலை உடம்போடு சேர்த்து சுருட்டிப் படுத்துக் கொண்டிருந்தேன். அப்போது அங்கு வந்த டயானா ஒரு மூலையில் பதுங்கி அமர்ந்து கண்ணயர ஆரம்பித்தாள்.

நீண்ட நாட்களாகவே டயானாவிடம் ஏதாவது பேசவேண்டும் என்று எண்ணி பேச ஆரம்பித்தவுடன் வெளியே ஓடி விடுவாள். அல்லது நான் பேசுவதை கேட்டு உள்ளிருந்து வந்த அம்மாவோ அல்லது நகுலோ ‘என்ன ரோஸி சும்மா லொள்ளு லொள்ளுன்னு கத்திட்டு என்னாச்சு சும்மாயிரு’ என்று ஒரு செல்லத் அதட்டல் போடுவார்கள் நான் உடனே அமைதியாகி விடுவேன். இன்று வீட்டில் யாரும் இல்லை இது தான் சரியான நேரம் என்று மெதுவாக ‘டயானா’ என்று அழைத்தேன்.

மாறாக டயானா எதுவும் பேசாமல் என்ன என்பது போல் முறைத்து பார்த்தாள்.

‘உன்னிடம் ஒன்று கேட்க வேண்டும்’ என்றேன். அதன்பின்னும் எந்தப் பேச்சும் இல்லை. அதே முறைப்பு. ‘நீ பயப்படாத நான் உன்னோட ஃப்ரண்ட் தான் உன்னை எதுவும் செய்ய மாட்டேன்’ என்று எனது வலது கையை தூக்கி பிராமிஸ் என்றேன்.

மெதுவாக வாய் திறந்தாள் டயானா.

‘என் பெயர் டயானா என்று யார் சொன்னது’ என்று முகத்தை திருப்பிக் கொண்டாள்.

‘இல்லே அம்மா தான் டயானா என்று உன்னைக் கூப்பிடுவாங்க நீ வெள்ளையா புசு புசுன்னு இருக்கிறயா அதனால அந்தப் பேரு வச்சிருப்பாங்கன்னு நினைத்தேன்’ என்று நான் சொன்னவுடன்.

‘என் பெயர் வெள்ளையம்மாள். என்ன போயி டயானா குயானான்னு எனக்குப் பிடிக்கவே இல்லை’ என்றாள் கோபத்தோடு.



அடடா உன் பேரு வெள்ளையம்மாவா ? இத்தனை நாளாக டயானா என்று அழைத்ததுக்குதான் கோவமா? சொன்னால் தானே தெரியும் எங்களுக்கு’ என்றேன் நான்.

உர்ரென்ற முகம் மாறி சகஜமானாள் டயானா இல்லை இல்லை வெள்ளையம்மாள்.

‘உனக்கு யார் இந்தப் பெயரை வைத்தது? நீ எங்கே இருந்து வருகிறாய்?’ என்று கேட்டேன் நான். ‘அதுவா அதோ எதிரில் இருக்கிற அபார்ட்மெண்ட்ல். மூன்றாவது மாடியில் இருக்கிற ஆடிட்டர் வீட்டில்தான் வளர்ந்தேன். ஆடிட்டர் பொண்ணு நிஷாதான் எனக்கு வெள்ளையம்மாள் என்று பெயர் வைத்தார். அங்கே நான் ரொம்ப சொகுசாக இருந்தேன். எனக்கு என்றே தனியாகக் குட்டி வீடு, குட்டித் தலையணை, குட்டிப் படுக்கை, சாப்பிட எனக்குன்னு தனியாக குட்டி பவுல். அதுமட்டுமா எனக்கே எனக்குன்னு தனியாக சோப்பு, சீப்பு,டவல்,ஷாம்பு கூட இருந்தது.

இப்படித்தான் ரொம்ப மகிழ்வாக என்னோட வாழ்க்கை இருந்தது. ஆடிட்டருக்குப் பணிமாற்றம் கிளம்ப வேண்டிய நாள் வந்தது.

எல்லோரும் வண்டியில் ஜாமான்களை ஏத்திட்டு இருந்தாங்க. அந்த நேரம் பார்த்து என்னோட பிரண்டு போண்டா அங்கு வந்தான். எப்பவுமே வீட்டுக்குள் இருந்த எனக்கு புது உலகத்த காட்டியவன் அவன் தான். அவனோட விளையாடிட்டே வெளியே போனேன். அவன் அன்று எனக்காகக் காட்டு எலியை வேட்டையாடி வைத்திருந்தான். ரெண்டு பேரும் நல்லா சாப்பிட்டுவிட்டு அசதியில் அங்கேயே ஒரு தூக்கம் போட்டுவிட்டேன் நேரம்போனதே தெரியவில்லை. திரும்பி வந்து பார்த்தபோது நான் இருந்த வீட்ல யாருமே இல்லை’என்றாள் வெள்ளையம்மாள்.

‘அச்சச்சோ அப்புறம் என்ன ஆச்சு?’ என்று கேட்டேன் நான். ‘அப்போதான் எதிர் வீட்டு அம்மா என்ன வெள்ளே இப்போ வந்திருக்கிறாய். இவ்வளவு நேரம் வரை காத்திருந்து காத்திருந்து நிஷா கூட அழுதுக்கிட்டே இப்பொழுதுதான் கிளம்பிப் போனாங்க என்று என்னைத் தூக்கி செல்லம் கொஞ்சினார். அதன் பிறகு கீழே விட்டுவிட்டார். நாட்கள் நகர்ந்தன ஓரிரு நாட்கள் எதிர் வீட்டு அம்மா சாதம் வைத்தார். பிறகு அதுவும் நின்று போனது’என்றாள் வெள்ளையம்மாள்.

‘பிறகு சாப்பாட்டுக்கு என்ன செய்தாய்?’என்று கேட்டேன் நான்.

‘என்னுடைய தோழன் போண்டாவோடு சேர்ந்து எங்கெங்கயோ சுற்றித் திரிந்தேன்.

17 ஆம் பக்கம் பார்க்க...





# ரோஸியும் வெள்ளையம்மாவும்... ஒரே வீட்டில் உருவான நேசம்!

ஒரு நாள் நல்ல தீனி கிடைக்கும். ஒரு நாள் இருக்காது. இப்படித்தான் நாட்களை நகர்த்தினேன். அவனோடு இருந்த நாட்களில் நான் கற்றுக்கொண்டது ஏராளம்' என்றாள் டயானா.

'அப்படி என்ன கற்றுக்கொண்டாய்?' என்று டயானாவிடம் கேட்டேன்.

'முதலில் எந்த மனிதரைக் கண்டாலுமே ஓடிச் சென்று அவர்களின் காலின் அடியில் நின்று அவர்களைப் பாவமாகப் பார்த்து என்னைச் செல்லம் கொஞ்சுங்கள் என்று அவர்களின் காலில் சென்று என் முதுகை உரசுவேன். கெஞ்சுவது போலப் பார்ப்பேன். பெரும்பாலான மனிதர்கள் என்னை துூரத்துவதிலேயே குறியாக இருப்பார்கள். சிலர் என்னை உதைத்தார்கள். வீட்டில் இருக்கும்போது மனிதர்கள் மீது இருந்த அபிப்ராயம் தெருவுக்கு வந்ததும் எனக்கு மாறியது. பிறகு மனிதர்களைப் பார்த்ததும் ஓடவும் ஆரம்பித்தேன். இதை எனக்குப் போண்டாதான் கற்றுக் கொடுத்தான்' என்றாள் டயானா.

'இங்கு எப்படி வந்து சேர்ந்தாய்?' என்று நான் கேட்டேன்.

'ஒருநாள் எதேச்சையாக உள்ளே வந்தேன். ஒரு தட்டில் தயிர் சாதம் வைக்கப்பட்டிருந்தது. வயிறு முட்ட சாப்பிட்டேன். பிறகு தான் தெரிந்தது அது உனக்காக போட்டு வைத்த சாப்பாடு என்று. பிறகு இங்கேயே தங்க ஆரம்பித்தேன்' என்றாள் டயானா.

'சரி உன் நண்பன் போண்டா என்ன ஆனான்?'என்று வெள்ளையம்மாவைப் பார்த்து நான் கேட்டேன்.

'நான் இங்கு வந்து சேர்ந்த நாட்களில் தான் என் நண்பன் போண்டாவைத் தொலைத்து விட்டேன். போண்டவைக் காணவில்லை. எங்கு தேடியும் இன்றுவரை கிடைக்கவில்லை. தேடிக்கொண்டு தான் இருக்கிறேன். அப்பொழுது நான் என் வயிற்றில் என் குழந்தைகளைச் சுமந்து கொண்டிருந்தேன். இந்த இடம் எனக்கு பாதுகாப்பாக இருக்கும் என்று இங்கேயே இருக்க ஆரம்பித்தேன்' என்றாள் டயானா.

'உன் நண்பன் உன்னை போல் பூனையா? அல்லது என்னைப்போல் நாயா?' என்று வேள்ளையம்மாவிடம் கேட்டேன்.

'பூனைதான்' என்றாள் மகிழ்வோடு.

'எல்லாம் சரி இவ்வளவு நாள் ஆகிவிட்டது தினமும் சாதம் வைக்கிறார்கள் அப்படியிருந்தும் இந்த வீட்டில் இருக்கும் ஆட்கள் யாரைப் பார்த்தாலும் சீறிக் கொண்டே தான் இருக்கிறாய் ஏன்?' என்று நான் கேட்டேன்

'அதுவா? அது என்னதான் பழகினாலும் சில நேரங்களில் யாராவது மீது இருக்கும் கோபத்தில் நம்மை அடித்து விடுவார்கள் நான் என்னைக் காத்துக் கொள்ள அடிக்கடி சீறுவேன் ஆனால் கடிக்க மாட்டேன்' என்றாள் வெள்ளையம்மாள்.

'பரவாயில்லையே! இது கூட உன் நண்பன் போண்டா கற்றுக்கொடுத்ததோ' என்று நான் கேட்டேன்.

'ஆமாம் ஆமாம்' என்றாள் வெள்ளையம்மாள்.

'ஆனால் இங்கே இருக்கிறவர்கள் யாரும் அடிக்க மாட்டார்கள். நம்மை மிகவும் பாசமாகப் பார்த்துக் கொள்வார்கள். இத்தனை நாள் இங்கிருந்தும் அது கூட உனக்குத் தெரியலையா?' என்று வெள்ளையம்மாவிடம் கேட்டேன் நான்.

'தெரியுது என்ன செய்வது பழக்க தோசம் கொஞ்சம் கொஞ்சமா மாத்திட்டு வருகிறேன்' என்றாள் வெள்ளையம்மாள்.

'அது சரி உன் குழந்தைகள் எங்கே?'அப்பப்போ எப்பொழுதாவது கூட்டிட்டு வந்து இருக்கிறாய்' என்று நான் கேட்டேன்.

'அதோ புதிதாகக் கட்டிட வேலை நடக்குது இல்லையா' என்று பக்கத்தில் புதிதாக கட்டிக் கொண்டிருந்த அப்பார்ட்மெண்டை நோக்கி காண்பித்தாள் வெள்ளையம்மாள்.

'உன்னோட குழந்தைகள் அங்க தான் இருக்கறாங்களா?' என்று நான் கேட்டேன்.

'ஆமாம் இப்பதான் வளர ஆரம்பிச்சு இருக்காங்க. அப்படியே வெளியிலயும் வர ஆரம்பிச்சிருக்காங்க' என்றாள் வெள்ளையம்மாள்.

'வெள்ளையம்மா எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு. ரொம்பப் பிடிச்சிருக்கு என்னை உன்னோட நண்பனாக ஏற்றுக் கொள்வாயா?' என்று வெள்ளையம்மாவிடம் கேட்டேன்.

'சரி ஏற்றுக்கொள்கிறேன் என்று கூறிவிட்டு.

நீ எப்படி இங்க வந்தாய்?' என்று என்னை பார்த்துக் கேட்டாள் வெள்ளையம்மாள்.

'அது ஒரு பெரிய கதை என்னோட பிறந்தவங்க மொத்தம் ஆறு பேர். நான் இருந்த இடம் ஒரு அப்பார்ட்மெண்ட்டின் எதிரில் இருக்கும் காருக்கு அடியில். அந்தக் காரின் ஓனர் எங்களுக்காக அந்த காரை வெகு நாட்களாக அதே இடத்தில் நிறுத்தி வச்சுட்டாங்க' என்றேன் நான்.



'அதிசயமாக இருக்கே எதுக்கு நிறுத்தி வெச்சாங்க? இந்த காலத்தில்கூட இப்படி மனுஷர்கள் இருக்கிறார்களா?' என்று கேட்டாள் வெள்ளையம்மாள்.

'ஏன்னா நாங்க ஏழு பேரும் ரொம்ப குட்டியா இருந்தோம். அப்போதான் பிறந்து இருந்தோம். அதனால் அங்கேயே நிறுத்தி வைத்துவிட்டார்.

அந்தக் காருக்கு அருகிலேயே ரோடு ஒன்று இருந்தது. அங்கே வண்டிகள் அதிகமாக வந்து சென்றுகொண்டே இருக்கும். காருக்கு அடியிலிருந்து வெளியில் வந்த என்னோட தங்கை ஒருத்தி ரோட்ல வந்த பஸ்சில் அடிபட்டு இறந்துவிட்டாள்' என்றேன் நான்.

'அச்சச்சோ அதுக்கப்புறம் என்ன ஆச்சு?' என்று கேட்டாள் வெள்ளையம்மாள்.

'அதன்பிறகு என்னோட அண்ணன் ரெண்டு பேரையும் யாரோ வந்து எடுத்துட்டு போயிட்டாங்க. பிறகு என்னோட தம்பியை அந்தக் காரின் ஓனரே எடுத்துட்டு போயி அவரோட தோட்டத்தில் பாதுகாப்புக்காக விடரதா பேசிக்கிட்டு இருந்தாங்க. அடுத்த நாளே என் தம்பியும் எடுத்துட்டு போயிட்டாங்க. நானும் ரெண்டு தங்கைகளும் அம்மாவும் பயந்து பயந்துதான் அங்க இருந்தோம். ஹாரன் சத்தம் கேட்டாலே ரொம்பப் பயமா இருக்கும் எனக்கு'என்றேன் நான்.

பேசிக்கொண்டிருக்கும்போதே இடைமறித்து 'ஹாரன் சத்தம் கேட்டால் இன்னும் உனக்கு பயமாக இருக்குமா?' என்று கேட்டாள் வெள்ளையம்மாள்.

'இல்லை இல்லை இப்போதெல்லாம் எனக்கு பயம் இல்லை அப்போது நான் குழந்தையாக இருந்ததால் அப்படி இருந்திருக்குமோ என்னவோ' என்றேன் நான்.

'சரி சரி அப்புறம் என்ன ஆச்சு கதையைச் சொல்லு' என்றாள் வெள்ளையம்மாள்.

'தினமும் சாயங்கால நேரம் அந்தக் கார் ஓனரோட குழந்தைங்க வர்ஷாவும் தர்ஷனும் எங்களோட வந்து விளையாடுவாங்க, சாப்பாடு கொடுப்பாங்க, பிஸ்கட் கொடுப்பாங்க தூக்கி கொஞ்சுவாங்க இப்படித்தான் நாட்கள் போயிட்டிருந்தது' என்றேன் நான்.

'அப்புறம் என்ன ஆச்சு?' என்று கேட்டாள் வெள்ளையம்மாள்.

'ஒரு நாள் எங்க அபார்ட்மெண்டுக்குப் பக்கத்தில் இருக்கிற கார் ஓர்க் ஷாப்புக்கு முன்னாடி நின்று கொண்டிருந்த காருக்கு அடியில் சென்று படுத்துக் கொண்டேன். திடீரென்று அந்தக் காரை எடுக்கும்போது கார் ஹாரன் சத்தம் கேட்டு ரொம்ப பயமா இருந்தது. வெளியில் ஓடி வந்த எனக்கு எந்த பக்கம் போவது என்று தெரியாமல் நடுங்கியபடி அங்கேயே நின்று கொண்டு இருந்தேன். அந்த நேரத்தில் ஒரு சிறுவன் என்னைப் பார்த்து ஓடி வந்து என்னைத் தூக்கினான். அந்த சிறுவன்தான் அம்மாவோட பெரிய மகன் வினய்

அப்பொழுதிருந்து தான் நான் இங்க இருக்கிறேன்' என்றேன் நான்.

'அப்போ இருந்து இங்கே வந்து ஜாலியா இருந்து கொண்டிருக்கிறாய் என்று சொல்லு' என்றாள் வெள்ளையம்மாள்.

'அப்படியெல்லாம் சொல்லிட முடியாது என்னைப் பார்த்ததும் அப்பாவுக்கு முதலில் பிடிக்கலை' என்றேன் நான்.

'ஏன்? ஏன் பிடிக்கலை?' என்று கேட்டாள் வெள்ளையம்மாள்.

'ஏன்னா நான் ஒரு பொம்பளை நாய்க்குட்டியாம். நாளை கொண்டு போய் எடுத்த இடத்திலேயே விட்டுவிட்டு வா என்று வினயிடம் சொன்னாரு' என்றேன் நான்.

'அப்புறம் என்ன ஆச்சு?' என்று கேட்டாள் வெள்ளையம்மாள்.

'ஆனால் நகுலும் வினயும் கொண்டு போய் விட மாட்டேன் என்று சொல்லிட்டாங்க. அப்புறம் அந்தன்னைக்கு நைட்டு அப்பா

என்னைக் கொண்டு வந்து எடுத்த அதே இடத்துல விட்டுட்டு போயிட்டாரு யாருக்குமே தெரியாமல்' என்றேன் நான்.

'அடடா! அப்புறம் என்ன ஆச்சு எப்படித் திரும்ப நீ இங்க வந்தாய்? என்று கேட்டாள் வெள்ளையம்மாள்.

'மறுபடியும் அடுத்த நாள் அம்மாவும் வினயும் என்னைத் தேடி வந்து எடுத்து திரும்பவும் வீட்டுக்குக் கூட்டிட்டு வந்துட்டாங்க' என்றேன் நான்.

'அப்போ அப்பா ரொம்ப மோசம்னு சொல்றியா?' என்று கேட்டாள் வெள்ளையம்மாள்.

'அப்படியெல்லாம் சொல்லிட முடியாது முதல்ல கோபப்பட்டாலும் இப்ப அம்மாவையும் நகுலையும் வினயையும் விட அப்பதான் நல்லாப் பாத்துக்கராரு' என்றேன் நான்.

'ஆமா ஆமா நானும் கூடக் கவனிச்சேன். வந்த நாளிலிருந்து எல்லாரையும்விட அப்பா என் மேலே ரொம்பப் பாசமா தான் இருக்காரு' என்றாள் வெள்ளையம்மாள்.

'அதுக்கப்புறம் வந்த கொஞ்ச நாளிலேயே ஊசி போட்டாங்க. மறுபடியும் கொஞ்ச நாள் கழிச்சு ஊசி போட்டாங்க. இங்க பக்கத்துல வீட்ல இருக்குற பூச்சி நாய் தான் என்னோட பெஸ்ட் ஃப்ரெண்ட்' என்றேன் நான்.

'அதான் தெரியுமே அடிக்கடி பூச்சி இங்கு வருவதும் நீ அங்கே போவதும் விளையாடுவதும் நான் வந்த நாளிலிருந்து பார்த்துக் கொண்டுதானே இருக்கிறேன்' என்றாள் வெள்ளையம்மாள்.

'அடிக்கடி நகுலும் வினயும் நம்ம ரோஸி மாதிரி பிறந்திருக்கணும் என்று என்னை கட்டிப்பிடித்து செல்லம் கொஞ்சுவார்கள்'என்றேன் நான்.

வெள்ளையம்மாள் வாய்விட்டு சிரித்து விட்டாள்.

'எதற்காகச் சிரிக்கிறாய்?' என்று கேட்டேன்

'நம்ம படுகின்ற கஷ்டம் தெரிந்தால் நம்மளை மாதிரி பிறக்க வேண்டும் என்று நினைக்கவே மாட்டாங்க. சரி சரி மீதிக் கதையைச் சொல்லு என்றாள் வெள்ளையம்மாள்

' கொஞ்ச நாட்களுக்கு முன்னாடி எனக்கு ஐந்து குழந்தைகள் பிறந்தன. அந்த ஐந்து குழந்தைங்களும் கொஞ்ச நாளில் இறந்துவிட்டன'. என்றேன் நான்.

'அச்சச்சோ ஐந்தும் செத்துப் போச்சா? எப்படி?' என்று பரிதாபத்தோடு கேட்டாள் வெள்ளையம்மாள் .


'அது எப்படினே தெரியலை. எல்லாருமே வருத்தப் பட்டாங்க .அதைப் பற்றி இங்கே அடிக்கடி பேசிக்கொண்டே இருப்பார்கள். இப்போது மறுபடியும் என்னோட வயிற்றில் குழந்தைகள் இருக்கு' என்றேன் நான்.


'அட என் கதையை விட உன்கதை பெரு கதையா இருக்கும் போல இருக்கே'என்றாள் வெள்ளையம்மாள்.

'இது மட்டும் இல்ல இன்னைக்கும் இந்த வீட்டுக்கு புதுசா யாராவது வந்தா எதுக்கு பொட்டை நாயை வளர்க்கறீங்க நீங்க? என்றுதான் கேட்பாங்க' என்றேன் நான்.

அந்த நேரம் பார்த்து ஹாரன் சத்தம் கேட்டது. 'ஆஹா வந்துட்டாங்கய்யா வந்துட்டாங்க'என்று நான் கூற இருவரும் அவரவர் இடத்தில் சென்று அமைதியாகப் படுத்துக் கொண்டோம்.












துன்னையூர்
ராம் தேவலோகேஸ்வரக்
குருக்கள்




அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம் கொண்ட மேடராசி அன்பர்களுக்கு இந்த வாரம் சற்று மத்திமமாகவே இருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் பொறுமை,நிதானம் தேவை. தொழில் சார்ந்த அலைச்சல்கள் காணப்படும். எந்த விடயமாயினும் பொறுமையாகவும், நிதானமாகவும் செயற்பட வேண்டும். குடும்ப நிலையில் சஞ்சலம் ஏற்பட்டு மறையும். பெண்களுக்கு சஞ்சலமான வாரம். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காணப்படும். அனுகூலமான நாள் திங்கட்கிழமை . அதிஷ்ட திகதி 22.




கார்த்திகை 2ம்,3ம்,4ம் பாதம், ரோகினி, மிருகசீரிடம் 1ம்,2ம் பாதம் கொண்ட இடபராசி அன்பர்களே, இந்த வாரம் சற்று மத்திமமாகவே காணப்படும். காரிய தடை, எடுக்கும் முயற்சிகளில் இழுபறி. தொழில் சார் பிரச்சனை காணப்படும்.பணவரவு மத்திமமானதாக இருக்கும். குடும்பத்தில் சஞ்சலம் நிலவும்.சகோதரர் வழியில் சஞ்சலம் ஏற்பட்டு மறையும். பெண்களுக்கு சஞ்சலம் ஏற்படும் வாரமாகும். மாணவர்களுக்கு முயற்சி தேவை. அதிஷ்ட நாள் வெள்ளி. அதிர்ஷ்ட திகதி 24.




மிருகசீரிடம் 3ம்,4ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ம்,2ம்,3ம் பாதம் கொண்ட மிதுன ராசி அன்பர்களே இந்த வாரம் சிறப்பானதாக காணப்படும். தொழில்சார் முன்னேற்றம் ஏற்படும். எடுக்கின்ற முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குடும்ப நிலைசார் அனுகூலங்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை தரும் வாரமாகும். மாணவர்களுக்கு சிறப்பான வாரமாகும். அதிஷ்ட நாள் புதன். அனுகூலம் தரும் திகதி 23.





மகம்,பூரம், உத்தரம் 1ம்பாதம் கொண்ட சிம்ம ராசி அன்பர்களே, எதிர்பாராத செலவுகள் ஏற்படும் வாரமாகும். தொழில்சார் பிரச்சனை,அலைச்சல் காணப்படும். பணவரவு மத்திமமானதாக இருக்கும். குடும்பத்தில் முன்னேற்றம் காணப்படும்.உறவினர் மூலம் அனுகூலங்கள் ஏற்படும். பெண்களுக்கு சஞ்சலம் நிறைந்த வாரமாகும். மாணவர்களுக்கு முயற்சி தேவை. அதிர்ஷ்ட நாள் – ஞாயிறு. அதிர்ஷ்ட திகதி 24.




சித்திரை 3ம்,4ம் பாதம்,சுவாதி,விசாகம்1ம்,2ம்,3ம் பாதம்கொண்ட துலாம் ராசி அன்பர்களே, இவ்வாரம் அலைச்சல்கள் நிறைந்ததாக காணப்படும். தொழில்சார் பிரச்சனை ஏற்படும். பணவரவு மத்திமமாக காணப்படும். குடும்ப நிலையில் சஞ்சலம் ஏற்படும்.எடுக்கும் முயற்சிகளில் பொறுமை, நிதானம் தேவை. பெண்களுக்கு மத்திமமான வாரமாகும். மாணவர்களுக்கு முயற்சி தேவை. அதிர்ஷ்ட நாள் வெள்ளி. அதிர்ஷ்ட திகதி 24 .




மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம் கொண்ட தனுசு ராசி அன்பர்களே, இந்த வாரம் சற்று மத்திமமான பலனாகும். தொழில் சார் அலைச்சல் காணப்படும். பணவரவு மத்திமம். எடுத்த முயற்சிகளில் பொறுமை,நிதானம் தேவை.குடும்பத்தில் சஞ்சலம் ஏற்படும். அதிர்ஷ்ட நாள் வியாழன். அதிர்ஷ்ட தினம் 25.




அவிட்டம் 3ம்,4ம் பாதம்,சதயம்,பூரட்டாதி 1ம்,2ம்,3ம் பாதம் கொண்ட கும்பராசி அன்பர்களே, இந்த வாரம் சற்று சிரமமானதாக காணப்படும்.உடல் உபாதைகள் ஏற்பட்டு மறையும்.எடுக்கும் முயற்சிகளில் பொறுமை,நிதானம் அவசியம்.தொழில்சார் அலைச்சல் ஏற்படும். எந்த விடயமாயினும் சிக்கல்,இழுபறியாகவே காணப்படும். அதிர்ஷ்ட நாள்–வியாழன். அதிர்ஷ்ட திகதி 26





புனர்பூசம் 4ம்பாதம், பூசம், ஆயிலியம் கொண்ட கடகராசி அன்பர்களே,சற்று மத்திமம் தரும் வாரமாகும். தொழில்சார் பிரச்சனை, அலைச்சல் நிலை, குடும்பத்தில் மந்த நிலை என்பன காணப்படும். காரியத்தடை ஏற்படும்.பணவரவு மத்திமம் எனவே பொறுமை, நிதானத்துடன் செயற்பட வேண்டும். அதிர்ஷ்ட நாள் திங்கள். அதிர்ஷ்ட திகதி 25.




உத்தரம் 2ம்,3ம்,4ம் பாதம், அத்தம், சித்திரை 1ம், 2ம் பாதம் கொண்ட கன்னிராசி அன்பர்களே, இந்த வாரம் மிகச்சிறப்பானதாக காணப்படும்.தொழில்சார் முன்னேற்றங்கள் ஏற்படும்.பணவரவு திருப்தியானதாக காணப்படும்.குடும்பசார் அனுகூலங்கள் ஏற்படும்.உறவினர் மூலம் நன்மை கிடைக்கும்.புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். எண்ணங்கள் ஈடேறும் வாரமாகும். அதிர்ஷ்ட தினம்– புதன். அதிர்ஷ்ட திகதி 23




விசாகம் 4ம்பாதம், அனுஷம், கேட்டை கொண்ட விருச்சிக ராசி அன்பர்களே, மிகச்சிறப்பான வாரமாகும். பணவரவு திருப்தியானதாக காணப்படும். தொழில்சார் முன்னேற்றங்கள் ஏற்படும்.கொடுக்கல் வாங்கலில் சுமுகமான நிலை காணப்படும்.புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.குடும்பத்தில் சுபகாரியநிகழ்வுகள் இடம்பெறும். உறவினர்கள் மூலம் நன்மை கிடைக்கும். பெண்கள்,மாணவர்களுக்கு சிறப்பான பலனாகும். அதிர்ஷ்ட நாள் திங்கள். அதிர்ஷ்ட திகதி 27.




உத்தராடம் 2ம்,3ம்,4ம் பாதம்,திருவோணம்,அவிட்டம் 1ம்,2ம்,3ம் பாதம் கொண்ட மகர ராசி அன்பர்களே,ஓரளவு நன்மைதரும் வாரமாகும்.குடும்பத்தில் அனுகூலம் ஏற்படும்.பணவரவு திருப்திகரமானதாக காணப்படும்.தொழிலில் சிறு சிறு சஞ்சலங்கள் ஏற்படும்.உறவினர்கள் மூலம் சிறு நன்மைகளும், தீமைகளும் ஏற்படும். பொறுமை, நிதானம் தேவை. அதிர்ஷ்ட நாள் ஞாயிறு .அதிர்ஷ்ட தினம் 26.




பூரட்டாதி 4ம் பாதம், உத்தரட்டாதி,ரேவதி கொண்ட மீனராசி அன்பர்களே, இந்த வாரம் அனுகூலமானதாக காணப்படும்.எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.பணவரவு திருப்தியாக அமையும். குடும்பநிலை அனுகூலமானதாக காணப்படும். கொடுக்கல், வாங்கலில் நன்மை ஏற்படும். பெண்களுக்கு அனுகூலம் நிறைந்த வாரமாகும். மாணவர்களுக்கு சிறப்பான வாரமாகும். அதிர்ஷ்ட நாள் – வியாழன். அதிர்ஷ்ட திகதி 24.



# தேசியப்பட்டியல் ஆசனம்

# தேசம் ஆள வந்தது!





★சபாநாயகர் பதவி தவிர நாடாளுமன்றில் ஏனைய அனைத்து பதவிகளும் வகிப்பு

★தேசியப்பட்டியலில் வந்து ஜனாதிபதியான முதல் அரசியல்வாதி

★பிறப்பு - 1949 மார்ச் 24.

★தந்தை - எஸ்மண்ட் விக்கிரமசிங்க.

★தாய் - மாலினி விக்கிரமசிங்க.

★மூன்று சகோதரர்கள், ஒரு சகோதரி. ரணில் இரண்டாவது மகன்.



★ஆரம்பக்கல்வி - கொழும்பு ரோயல் கல்லூரி.

★உயர்கல்வி - கொழும்பு பல்கலைக்கழகம், சட்டத்துறை.

★ஐ.தே.கவின் இளைஞர் முன்னணி ஊடாக அரசியல் பயணம் ஆரம்பம். 1970 இல் களனி தொகுதி அமைப்பாளராக நியமனம். அதன்பின்னர் பியகம தொகுதி கையளிப்பு.

★1977 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் பியகம தொகுதியில் போட்டி. 22 ,045 வாக்குகளைப்பெற்று வெற்றிநடை.

★28 ஆவது வயதில் பிரதி வெளிவிவகார அமைச்சராக நியமனம்.

★1977 ஒக்டோர் 05 ஆம் திகதி அமைச்சரவைக்கு உள்வாங்கப்பட்டு இளைஞர் விவகார மற்றும் தொழில் அமைச்சு பதவி ஒப்படைப்பு.

★1980 பெப்ரவரி 14 கல்வி அமைச்சு பதவி கையளிப்பு. 9 ஆண்டுகள் அப்பதவியில் நீடித்த அவர், கல்வித் துறையில் நவீன யுகத்துக்கேற்ப பல மறுசீரமைப்புகளை மேற்கொண்டார்.

★1993 மே 17 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்பு.





★1994 இல் ஐ.தே.க. தலைவராக ரணில் விக்கிரமசிங்க நியமனம். கட்சியிலிருந்து வெளியேறி மீண்டும் தாய் வீடு திரும்பிய காமினி திஸாநாயக்க பிரதான எதிர்க்கட்சி தலைவரானார். காமினி திஸாநாயக்க கொல்லப்பட்ட பின்னர் எதிர்க்கட்சி தலைவராகவும் ரணில் செயற்பட்டார்.

★1995 - திருமண வாழ்வில் இணைவு. களனிப் பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியையான மைத்திரி விக்கிரமசிங்கவை கரம்பிடித்தார்.

★1999 இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க முதன்முறையாக போட்டி. சந்திரிகாவே வெற்றிபெற்றார். ரணிலுக்கு 42.71% வாக்குகள் கிடைத்தன.



★2000 ஒக்டோபர் 10 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சந்திரிகா தலைமையிலான மக்கள் கூட்டணி வெற்றி. ஓராண்டுக்குள் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் 2001 டிசம்பர் 05 ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டது. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது.



★2001 டிசம்பர் 09 ஆம் திகதி ரணில் பிரதமரானார். 2004 ஏப்ரல் 2 ஆம் திகதிவரை பதவியில் நீடித்தார்.

★நாடாளுமன்றத்தில் ஆயுட்காலம் முடிவடைவதற்குள்ளேயே நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி சந்திரிக்கா நாடாளுமன்றத்தைக் கலைத்து 2004 ஏப்ரல் 2 ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டது. ஐ.தே.க. ஆட்சி கவிழ்ந்தது. கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க 3 இலட்சத்து 29 ஆயிரத்து 524 விருப்பு வாக்குகளைப் பெற்றார்.

மிகுதி 20 ஆம் பக்கத்தில்...



## ரணில் கடந்து வந்த பாதை

### ஒரு கண்ணோட்டம்

ஒன்பதாவது பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ரணில் விக்ரமசிங்க கடந்த 2021ஆம் ஆண்டு ஜூன்23 ஆம் திகதி தெரிவுசெய்யப்பட்டார்.

1949ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் திகதி பிறந்த ரணில் விக்ரமசிங்க கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் பிரதமராகப் பதவி வகித்தார். 1970 ஆம் ஆண்டு களனி தொகுதி ஐக்கிய தேசிய கட்சியின் அமைப்பாளராக தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்த அவர், பின்னர் பியகம தொகுதியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டார். 1977 ஆம்ஆண்டில் முதல் முறையாக பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட அவர், ஜே.ஆர். ஜயவர்தன அரசின்அமைச்சரவையில் இளம் அமைச்சராக இருந்ததுடன் இளைஞர் விவகாரம் மற்றும் தொழிற்துறை அமைச்சராகஅவர் அப்போது கடமையாற்றினார்.

28 வயதில் வெளிவிவகார பிரதியமைச்சராக நியமிக்கப்பட்ட அவர்,பின்னர் இளைஞர் விவகாரம், கல்வி மற்றும் தொழில், விஞ்ஞான மற்றும் தொழிநுட்பம் போன்ற கபினட் அமைச்சு பதவிகளை வகித்தார். 1989 மார்ச் 06 முதல் 1993 மே 07 வரையான காலப்பகுதியில் பாராளுமன்ற சபை முதல்வராக பணியாற்றிய விக்ரசிங்க அவர்கள் 1994 முதல் 2001 வரை மற்றும் 2004 முதல் 2015 வரை இலங்கைபாராளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவராக பதவிவகித்துள்ளார்.

அவர் முதன்முறையாக 1993 மே மதம் 07 ஆம் திகதி பிரதமராக தெரிவு செய்யப்பட்டதுடன் 1994ஆகஸ்ட் 19 வரை அந்த பதவியை வகித்தார். இவர் இரண்டாவது தடவையாக 2001 டிசம்பர் 09ஆம் திகதி முதல்2004ஆம் ஆண்டு ஏப்ரல் 02ஆம் திகதிவரையும், மூன்றாவது தடவையாக 2015 ஜனவரி 09ஆம் திகதி முதல் 2015ஆம் ஆண்டு ஒகஸ்ட் 21ஆம் திகதி வரையும், நான்காவது தடவையாக 2015 ஒகஸ்ட் 24 ஆம் திகதி முதல் 2018 ஆண்டு ஒக்டோபர் 26 ஆம் திகதிவரையும், ஐந்தாவது தடவையாக 2018 டிசம்பர் மாதம் 16ஆம் திகதி முதல் 2019 நவம்பர் 21ஆம் திகதி வரையும் பிரதமராகக் கடமையாற்றியிருந்தார்.

இதன் பின்னர் கடந்த மே மாதம் 9ஆம் திகதி முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவிவிலகியதைத் தொடர்ந்து கௌரவ ரணில் விக்ரமசிங்க அம்மாதம் 12ஆம் திகதி மீண்டும் பிரதமராக நியமிக்கப்பட்டார். இந்தப் பதவியைவகித்துவரும் போதே ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து அரசியலமைப்புக்கு அமைய கடந்த 14ஆம் திகதி முதல் பதில் ஜனாதிபதிப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.ஜூலை 20 ஆம் திகதி பாராளுமனற வாக்கெடுப்பின் மூலம் இலங்கையின் 8 ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாகியுள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவரான ரணில் விக்ரமசிங்க பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்டு சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

# தேசியப்பட்டியல் ஆசனம்
# தேசம் ஆள வந்தது!



★2005 நவம்பர் 17 ஆம் திகதி நடைபெற்ற ஐந்தாவது ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் ரணில் விக்கிரமசிங்கவே போட்டியிட்டார். 47 இலட்சத்து 6 ஆயிரத்து 366 வாக்குகளைப் பெற்றார். இத்தேர்தலில் மஹிந்தவே வெற்றிபெற்றார்.

★2010 ஜனவரி 26 ஆம் திகதி ஆறாவது ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் மஹிந்த களமிறக்கினார்.

அவருக்கு எதிராக எதிரக்கட்சிகளின் சார்பில் - இறுதிப்போரை வழிநடத்திய இராணுவத்தளபதி சரத் பொன்சேக்கா களமிறக்கப்பட்டார்.

★ஜனாதிபதி தேர்தல் வரலாற்றில் முதல் முறையாக ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் களமிறங்கவில்லை என்பதுடன், யானை சின்னத்துக்கு பதிலாக அன்னப்பறவை சின்னமே முன்னிலைப்படுத்தப்பட்டது. இத்தேர்தலில் மஹிந்தவே வெற்றிபெற்றார்

★2010 ஏப்ரல் 4 ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் ரணிலின் தலைமைத்துவத்தின்கீழ் யானை சின்னத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிட்டது. தேர்தலில் தோல்வி. கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க



2 இலட்சத்து 32 ஆயிரத்து 957 வாக்குகளைப் பெற்றார்.

★2015 ஜனவரி 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலிலும் விட்டுக்கொடுப்புகளை செய்யவேண்டிய நிலை ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற்பட்டது. மஹிந்த அரசிலிருந்து வெளியேறிய சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு பொதுவேட்பாளராக களமிறங்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

★மைத்திரி ஜனாதிபதி, ரணில் பிரதமர் என்ற தொனியிலேயே பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டன. 62 இலட்சத்து 17 ஆயிரத்து 162 வாக்குகளைப் பெற்று மைத்திரி வெற்றிபெற்றார். மஹிந்தவின் 10 ஆண்டுகால சாம்ராஜ்யமும் சரிந்தது.





★2015 ஜனவரி 9 ஆம் திகதி பிரதமராக ரணில் பதவியேற்றார். இதனால், மஹிந்தவின் அமைச்சரவையும் கலைந்தது.

★2015 ஆகஸ்ட் நடைபெற்ற பொதுத்தேர்தலிலும் ஐக்கிய தேசியக்கட்சி 106 ஆசனங்களைக் கைப்பற்றி அறுதிப்பெரும்பான்மை இல்லாவிட்டாலும் தேசிய அரசமைத்து ஆட்சியை தக்கவைத்துக்கொண்டது.

★ கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க 5 இலட்சத்து 566 வாக்குகளைப் பெற்று மீண்டும் வரலாற்று வெற்றியை பதிவுசெய்தார்.

★2018 ஒக்டோபர் மாதம் ஆட்சிகவிழ்ப்பு சூழ்ச்சிமூலம் மஹிந்தவை, ஜனாதிபதி மைத்திரி பிரதமராக்கினார்.

எனினும், நீதிமன்றத்தை நாடி சவால்களையெல்லாம் சமாளித்து மீண்டும் பிரதமரானார் ரணில்.

★நம்பிக்கையில்லாப் பிரேரணை



களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உதவியுடன் மண்கவ்வ செய்தார்.

★2019 நவம்பர் 16 ஆம் திகதி நடைபெற்ற இலங்கையின் 8 ஆவது ஜனாதிபதி தேர்தலில் களமிறங்க வேண்டும் என்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறியாகவே இருந்தார். எனினும், கட்சிக்குள் எதிர்ப்புகள் வலுத்ததால், பங்காளிகள் விடாப்பி



டியாக நின்றதாலும், நாட்டு மக்கள் சஜித்தை கோரியதாலும் மூன்றாவது முறையும் தியாகம் செய்யவேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டார்.

எனினும், 1994 ஆம் ஆண்டுக்கு பிறகு ஐக்கிய தேசியக்கட்சியை சார்ந்த உறுப்பினர் ஒருவரை வேட்பாளராக களமிறக்கும் வாய்ப்பு உதயமானது.

★2019 ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தோல்வியடைந்தது. அதன்பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக உடைந்தது. சஜித் தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி உயதமானது.

★2020 பொதுத்தேர்தலில் இரு அணிகளும் தனியாக போட்டியிட்டன.

மிகுதி 21 ஆம் பக்கத்தில்...

ஐக்கிய மக்கள் சக்தி 54 ஆசனங்களைக் கைப்பற்றியது. ஐக்கிய தேசியக்கட்சிக்கு நாடு முழுவதும் 2.15% வாக்குகளே கிடைக்கப்பெற்றன.

★தேசியப்பட்டியல் ஊடாக வாய்ப்பு கிடைத்தது.

★நாடாளுமன்ற அரசியலுக்கு வந்த பிறகு ரணில் எந்தவொரு பொதுத் தேர்தலிலும் தோற்றதில்லை. 45 வருடங்களாக தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து சாதனையும் படைத்துள்ளார். 2020 இல் தோல்வியை தழுவினார். எனினும், தேசியப்பட்டில் ஊடாக சபைக்கு நாடாளுமன்றம் வந்தார்.

★அரசியலில் குள்ளநரியாகவே



அவர் பார்க்கப்படுகின்றார். 42 ஆசனங்களை வைத்துக்கொண்டு ஆட்சியைப்பிடித்ததுடன், அரசமைப்பிலும் மாற்றங்களைஏற்படுத்தினார். எனவேதான் தற்போது ஒரு ஆசனத்தை ஜனாதிபதி பதவியையும் கைப்பற்றியுள்ளார்.ப்போரை வழிநடத்திய இராணுவத்தளபதி சரத் பொன்சேக்கா களமிறக்கப்பட்டார்.

★ஜனாதிபதி தேர்தல் வரலாற்றில் முதல் முறையாக ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் களமிறங்கவில்லை என்பதுடன், யானை சின்னத்துக்கு பதிலாக அன்னப்பறவை சின்னமே முன்னிலைப்படுத்தப்பட்டது. இத்தேர்தலில் மஹிந்தவே வெற்றிபெற்றார்

★2010 ஏப்ரல் 4 ஆம் திகதி நடை





# தேசியப்பட்டியல் ஆசனம்
# தேசம் ஆள வந்தது!

பெற்ற பொதுத்தேர்தலில் ரணிலின் தலைமைத்துவத்தின்கீழ் யானைசின்னத்திலேயே ஐக்கிய தேசியக்கட்சி போட்டியிட்டது. தேர்தலில் தோல்வி. கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க 2 இலட்சத்து 32 ஆயிரத்து 957 வாக்குகளைப் பெற்றார்.

★2015 ஜனவரி 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்



தலிலும் விட்டுக்கொடுப்புகளை செய்ய வேண்டிய நிலை ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற்பட்டது. மஹிந்த அரசிலிருந்து வெளியேறிய சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு பொதுவேட்பாளராக களமிறங்கு

★மைத்திரி ஜனாதிபதி, ரணில் பிரதமர் என்ற தொனியிலேயே பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டன. 62 இலட்சத்து 17 ஆயிரத்து 162 வாக்குகளைப் பெற்று மைத்திரி வெற்றிபெற்றார். மஹிந்தவின் 10 ஆண்டுகால சாம்ராஜ்யமும் சரிந்தது.

2015 ஜனவரி 9 ஆம் திகதி பிரதமராக





ரணில் பதவியேற்றார். இதனால், மஹிந்தவின் அமைச்சரவையும் கலைந்தது.

2015 ஆகஸ்ட் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் ஐக்கிய தேசியக்கட்சி 106 ஆசனங்களைக் கைப்பற்றி அறுதிப்பெரும்பான்மை இல்லாவிட்டாலும் தேசிய அரசமைத்து ஆட்சியை தக்கவைத்துக்கொண்டது.

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க 5 இலட்சத்து 566 வாக்குகளைப் பெற்று மீண்டும் வரலாற்று வெற்றியை பதிவுசெய்தார்.

2018 ஒக்டோபர் மாதம் ஆட்சிகவிழ்ப்பு சூழ்ச்சிமூலம் மஹிந்தவை, ஜனாதிபதி மைத்திரி பிரதமராக்கினார்.

எனினும், நீதிமன்றத்தைநாடி சவால்களையெல்லாம் சமாளித்து மீண்டும் பிரதமரானார் ரணில்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உதவியுடன் மண்கவ்வ செய்தார். 2019 நவம்பர் 16 ஆம் திகதி நடைபெற்ற இலங்கையின் 8 ஆவது ஜனாதிபதி தேர்தலில் களமிறங்க வேண்டும் என்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறியாகவே இருந்தார். எனினும், கட்சிக்குள் எதிர்ப்புகள் வலுத்ததால், பங்காளிகள் விடாப்பிடியாக நின்றதாலும், நாட்டு மக்கள் சஜித்தை கோரியதாலும் மூன்றாவது முறையும் தியாகம் செய்யவேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டார்.

எனினும், 1994 ஆம் ஆண்டுக்கு பிறகு ஐக்கிய தேசியக்கட்சியை சார்ந்த உறுப்பினர் ஒருவரை வேட்பாளராக களமிறக்கும் வாய்ப்பு உதயமானது.

2019 ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தோல்வியடைந்தது. அதன்பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக உடைந்தது. சஜித்



தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி உயதமானது.

2020 பொதுத்தேர்தலில் இரு அணிகளும் தனியாக போட்டியிட்டன. ஐக்கிய மக்கள் சக்தி 54 ஆசனங்களைக் கைப்பற்றியது. ஐக்கிய தேசியக்கட்சிக்கு நாடு முழுவதும் 15சதவீத வாக்குகளே கிடைக்கப் பெற்றன.

04 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## முள்கிரீடம் பூப்பூக்குமா?

ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறுவார் என்பது ஓரளவுக்கு எதிர்பார்க்கப்பட்டது என்ற போதிலும், இந்தளவு பெரும்பான்மை அவருக்கு கிடைக்கும் என்பது எதிர்பார்க்கப்படாத ஒன்றுதான். பெரும்பாலான சிறுபான்மையினக் கட்சிகளும், ஐக்கிய மக்கள் சக்தி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பன டலஸ் அழகப்பெருமவை ஆதரிப்பதென முடிவெடுத்திருந்த போதிலும் அந்தக் கட்சிகளின் பல உறுப்பினர்கள், கட்சித் தலைமையின் முடிவை மீறி ரணிலுக்கு வாக்களித்தமையால்தான் இந்தளவு அதிகளவு வாக்குகளை அவரால் பெற முடிந்தது.

இலங்கையின் 7 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவி வகித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு எதிராக மக்கள் புரட்சி வெடித்ததால், பதவி காலம் முடிவடைய இன்னும் இரண்டவரை வருடங்கள் எஞ்சியுள்ள நிலையில் – ஜூலை 14 ஆம் திகதி அவர் பதவி விலகினார். வெளிநாட்டுக்கு தப்பியோடிய பின்னரே பதவி விலகல் கடிதத்தை சபாநாயகருக்கு அனுப்பி வைத்திருந்தார். இதனால் புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்யும் பொறுப்பு, நாடாளுமன்றம் வசமானது.

இந்நிலையில் புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்காக நாடாளுமன்றம் புதன்கிழமை கூடியது. இரகசிய வாக்கெடுப்பில் 134 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் 8 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார். செல்லுபடியான வாக்குகளில் 50 வீதத்துக்கும் மேல் ரணில் பெற்றதால், அடுத்த தேர்வுகளுக்கு செல்ல வேண்டிய தேவை எழவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, சுயாதீன அணிகள், மொட்டு கட்சியின் ஒரு பிரிவு தமது ஆதரவை டலஸ் அழகப்பெருமவுக்கு நேற்று வெளிப்படுத்தியிருந்தன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈபிடிபி, தேசிய காங்கிரஸ், சிறிலங்கா பொதுஜன பெரமுன என்பன ரணிலுக்கு ஆதரவளிக்கபோவதாக அறிவித்திருந்தன என்பன குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசியல் வரலாற்றில் இதற்கு முன்னர் 1993 இல்தான் ஜனாதிபதி பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டது. ரணசிங்க பிரேமதாச படுகொலை செய்யப்பட்டமையால் இந்த நிலை ஏற்பட்டது, புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் பொறுப்பு நாடாளுமன்றம் வசமானது. பதில் ஜனாதிபதியாக இருந்த டி.பி. விஜேதுங்க ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். அவருக்கு எதிராகப் போட்டியிட அப்போது யாரும் முன்வரவில்லை.

இந்நிலையில் நாடாளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவது



இதுவே முதன்முறையாகும்.

ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள ரணில் விக்கிரமசிங்க முன்பாக உள்ள சவால்கள் பல. அவற்றை அவர் எவ்வாறு சமாளிக்கப்போகின்றார் என்பதில்தான் அவரது உண்மையான வெற்றி தங்கியுள்ளது. முதலாவதாக – பொருளாதார நெருக்கடி ஒவ்வொரு குடும்பத்தையும் பாதிக்கின்றது. பல குடும்பங்கள் மூன்று நேரமும் உணவருந்த முடியாத நிலையில் இப்போதுள்ளன. இதற்கு நிவாரணம் பெற்றுக்கொடுப்பது பிரதான பிரச்சினை. அதிகரித்த வாழ்க்கைச் செலவு ஒருபுறம். வேலை இழப்புக்கள் மறுபுறம் அனைத்துக் குடும்பங்களையும் பாதிக்கின்றது. அவர்களுக்கு ஏதோ ஒருவகையில் நிவாரணம் வழங்கவேண்டிய தேவை உள்ளது.

ரணில் ஜனாதிபதியாக வந்திருந்தாலும் ரணிலுக்கு எதிரான தமது போராட்டம் தொடரும் என காலிமுகத் திடல் போராட்டக்காரர்கள் அறிவித்துள்ளார்கள். இது ரணில் எதிர்கொள்ளவேண்டியுள்ள மற்றொரு பிரச்சினை.

இதனைவிட சர்வதேச உதவிகளைப் பெற்று பொருளாதாரத்தை மீளக்கட்டியமைப்பது அவசியம். இதனை செய்யக்கூடிய ஒருவராகவே ரணில் விக்கிரமசிங்கவை இலங்கை மக்கள் பார்க்கின்றார்கள். சர்வதேசத் தொடர்புகள், மேற்கு நாடுகளுக்கு சார்பான அவரது அணுகுமுறை என்பன இவ்விடயத்தில் அவருக்கு உதவலாம். சர்வதேச நாயண நிதியம் ரணிலின் தெரிவையடுத்து வெளியிட்டுள்ள அறிக்கை அவருக்கு உற்சாயமளிப்பதாக அமையலாம்.

ஆனால், அடுத்துவரப்போகும் இரண்டரை வருடங்கள் அவருக்கு சவால் நிறைந்ததாகவே இருக்கப் போகின்றது. அதில் வெற்றிபெற அவர் எவ்வாறான உபாயங்களைக் கையாளப்போகின்றார் என்பதில் தான் அவரது அரசியல் எதிர்காலம் மட்டுமல்ல ஐ.தே.க.வின் எதிர்காலமும் தங்கியுள்ளது.

# கறுப்பு யூலையின் கறுத்தப்பக்கங்கள்



## ஆண்டுகள் போனாலும் தமிழினத்தின் ஆறாத வடுக்கள்

*கறுப்பு ஜீலை என்றும்*
*ஆடிக் கலவரம் என்றும்*
*எண்பத்து மூன்று கலவரம் என்றும்*
*எண்ணற்ற தமிழர்களின்*
*உயிர்களும் உடைமைகளும் பறித்து*
*மூன்று தசாப்த*
*யுத்தத்திற்கும் அடித்தளமிட்டுச்*
*சென்ற கலவரம் அது*
*வழிகள் எங்கும்*
*தமிழர் தேடி*
*விழிகள் கலங்கும்*
*கொடுமைகள் செய்து*
*களிநடனம் ஆடினர்*
*இனவாதக் காட்டுமிராண்டிகள்*

*அங்கம் சிதைத்தும்*
*அக்கினிக்கு இரையாக்கியும்*
*இடம்பெயர வைத்தும்*
*புலம் பெயர வைத்தும்*
*உடைமைகளற்ற ஏதிலிகளாக்கியும்*
*மடைமை இனவாதம்*
*கொடுமைகள் புரிந்தது*

*அன்று விதைத்த*
*இடப்பெயர்வெனும்*
*வித்து ஆண்டுகள்*
*பலதாய்த் தமிழருக்கே உறவானது*
*உயிர் மட்டும் அங்கே*
*இடத்துக்கிடம் பெயர்ந்தது*
*உணர்வுகள் கூட வாழ மறுத்தன*
*வேடிக்கை பார்க்கவும்*
*கொடுந்துயர் இரசித்தும்*
*இரத்தம் பருகியும்*
*இனவாதம் ஏப்பம்விட்டது*

*தமிழராய் பிறந்த ஒரே*
*குற்றத்திற்காய் ஆயிரக்கணக்கில்*
*உயிர்களைக் கொன்று*
*குவித்தது இனவெறி*

*உரிமைகள் மறுத்து*
*அரசியல் அடிமைகளாய்*
*தமிழினம் வாழ்வதன்*
*சாட்சியுமாய் தமிழர்*
*தம் நெஞ்சங்களில் ஆழப்பதிந்தது*


*சாட்சிகள் இருந்தும்*
*நீதிகள் இல்லை*
*தவறு எனத் தெரிந்தும்*
*தண்டனைகள் இல்லாது*
*வேடிக்கை பார்த்தும்*
*கூடி அழித்தும்*
*தமிழினம் முப்பதாண்டுகளாகியும்*
*சுமக்கும் துன்பங்கள்*
*இங்கிருந்து தான் பிறந்தனவோ?*

*ஜீலைக்கும் கண்கள் இருந்தால்*
*குருதிக் கண்ணீரால்*
*இனப்பசியாற்றி இருக்கும்*

*தமிழினம் வாழும் வரை*
*அழியாத காயமாய்*
*ஆறாத வடுவாய்*
*கனத்த இதயத்தின்*
*ஒவ்வொரு துடிப்பிலும்*
*வாழும் துயர் -கறுப்பு ஜீலை*



**(குகதா)**
**டக்ஸனா கிருஷ்ணானந்தன்**



1983 ஜூலைக் கலவரம் வெடிப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னதாக 1983 ஜூலை 11 ஆம் திகதி லண்டன் டெயிலி ரெலிகிராப் பத்திரிகைக்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தன தெரிவித்திருந்தது:


'தமிழ் மக்களுடைய கருத்துக்களையிட்டு நான் கவலைப்படவில்லை. இப்போது நாம் அவர்களைப் பற்றி, அவர்களுடைய உயிர்கள், கருத்துக்களையிட்டு சிந்திக்க முடியாது. உண்மையில் தமிழ் மக்களை நான் பட்டிணி போட்டால் சிங்கள மக்கள் மகிழ்ச்சியடைவார்கள்.'

---------------------------------------

தமிழ் மக்களுக்கு எதிரான கலவரம் ஆரம்பமாகி ஐந்து நாட்களுக்கு மௌனமாக இருந்த ஜெயவர்த்தன, பின்னர் தேசிய தொலைக்காட்சியில் தோன்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

'இந்தத் தாக்குதல் நகரப்புற காடையர்களின் தாக்குதல் அல்ல. இது பெரும்பாலான சிங்களவர்களின் உணர்வுகளின் பிரதிபலிப்பு. சிங்கள மக்களுடைய தேசிய மதிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது.'

---------------------------------------



பேராசிரியர் ஸ்ரான்லி தம்பையா இவ்வாறு எழுதுகின்றார்:

'இதே தொலைக்காட்சி நிகழ்ச்சியில் சிங்கள மக்களுடைய இந்த செயற்பாட்டுக்காக அவர்களுக்கு தமது வணக்கத்தை ஜனாதிபதி தெரியப்படுத்தினார். லலித் அத்துலத்முதலி, இந்த வன்முறைகளின் விளைவாக உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக சிங்கள மக்கள் வரிசையில் காத்திருப்பதைப் பார்த்து கண்கலங்கினார். அச்சத்துடன் சொல்ல முடியாத துன்;பங்களுடன் முகாம்களுக்குள் அடைபட்டிருந்த தமிழர்களையிட்டு ஒரு வார்த்தையைக் கூட அவர் சொல்லவில்லை.'

---------------------------------------



இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த என்.சண்முகதாசன் இவ்வாறு தெரிவித்தார்:

'கொழும்பில் குறைந்த பட்சம் 500 கார்கள் எரிக்கப்பட்டன. சில கார்கள் அதன் சாரதிகளுடனும், பயணிகளுடனும் எரிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டிருந்த தமிழர்களுக்குச் சொந்தமான பஸ்கள் பலவும் எரிக்கப்பட்டன. மருத்துவமனைகளில் இருந்த தமிழ் நோயாளிகள் தாக்கப்பட்டு கொல்லப்பட்டார்கள். சிலருக்கு அவர்களுடைய படுக்கையில் வைத்தே கழுத்து வெட்டப்பட்டது.'

இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக வெளியிட்ட தகவலின்படி 358 பேர் கொல்லப்பட்டிருந்தனர். ஆனால் உயிர் தப்பிய தமிழர்களின் கணிப்பின்படி மூவாயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் கொல்லப்பட்டிருந்தார்கள்.



# ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்ற அன்று இலக்கம் 9!

## அதுதான் ராஜபக்சக்கள் விரட்டப்படுகின்றனரா?

**இலங்கையில்** ஈஸ்டர் குண்டு வெடிப்பு இடம்பெற்ற அன்று தேவாலய மணிக்கூண்டு கோபுரம் காட்டிய இலக்கத்தின் சாபத்தினால் தான் ராஜபக்சக்கள் விரட்டப்படுகின்றனரா என்று சிங்கள இணையத்தளம் ஒன்று விரிவான கட்டுரையினை வெளியிட்டுள்ளது.

தமயந்தி ரேணுகா பெர்னாண்டோ என்பவர் எழுதிய நீண்ட கட்டுரையில் முக்கிய பகுதிகளை உங்களுக்கு தருகின்றோம். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

### 9 ஆம் திகதி ராஜபக்சக்களை ஏன் விரட்டுகின்றது?

1 தொடக்கம் 10 வரை அதிகம் பேசப்படும் எண்கள் எவை என்று கேட்டால் என்ன பதில்





தமயந்தி ரேணுகா

## காற்று வாக்கில் காதில் விழுந்தது...

### மாற்றுமொழி பேசும் ஊடகத்துறை என்னசொல்கிறது?

சொல்வீர்கள் என்று தெரியவில்லை. ஒட்டு மொத்தமாக, பெரும்பாலான சந்தர்ப்பங்களில், கிட்டத்தட்ட எல்லோரும் 7 என்ற எண்ணை விரும்புகிறார்கள். அப்படி நடந்தால், 'லக்கி செவன்' என்ற கருத்து தலையில் இருப்பதுதான் காரணம்.

3 என்ற எண்ணை விரும்பும் பலர் உங்களில் உள்ளனர். மூன்று என்ற எண்ணுக்கு மத முக்கியத்துவம் இருப்பதால் இது நிகழ்கின்றது. உதாரணமாக, பௌத்த மதத்தினர்'திரிவித ரத்னாயா' மற்றும் கிறிஸ்தவ மதத்தினர் 'ஹோலி டிரினிட்டி' என்ற வார்த்தைகளின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடலாம்.

3 மற்றும் 7–க்கும் இடையில், சில சந்தர்ப்பங்களில் 9 என்ற எண்ணும் சிறப்பு வாய்ந்தது. அந்தத் தனித்துவம் மிகக் கொடியது. அதனால்தான் சிலர் 9 ஐ 'தீய 9' அல்லது 'துரதிர்ஷ்டவசமான 9' என்று குறிப்பிடுகின்றனர்.

'9 தீயது. கவனியுங்கள் கவனமாக இருங்கள்..' என்று தற்செயலாக மாதம் 9 ஆம் திகதி ஒரு முக்கிய நிகழ்வு நடந்தால், சிலர் அதை மேற்கூறியவாறு எச்சரிக்கின்றனர்.

### 9 உண்மையில் தீயதா?

எனக்கு தெரியாது. தீய 9 பற்றிய வித்தியாசமான கதைக்கு நாங்கள் தயாராகி வருகின்றோம். இது ஏப்ரல் 21, 2019 அன்று ஈஸ்டர் ஞாயிறு அன்று கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் வெடித்த மனித வெடிகுண்டுடன் தொடங்கியது.

அன்றைய தினம், அந்த கொடூரமான குற்றம் நடக்கவிருந்த போது, கொச்சிக்கடை தேவாலய மணிக்கூண்டு கோபுரத்தின் இரண்டாவது கை மற்றும் மணி முத்திரை ஒரே இடத்தில் மோதியது போல் நின்றது. சில நொடிகளில் குண்டு வெடிப்பு நடந்தது.

9 மணிக்கெல்லாம் மணிக்கூட்டு கோபுரத்தின் இரு கைகளும் நின்ற சம்பவத்தையே கிட்டத்தட்ட அனைவரும் பேசிக்கொண்டனர். ஒன்லைன் மற்றும் அச்சு ஊடகங்களில் கூட, கடிகாரக் கோபுரத்தின் படங்கள் வரிக்கு வரியாகத் தோன்றி கடிகார முகத்தை எண் 9 இல் நிறுத்தியது.

### இரண்டு கம்பிகளும் ஏன் 9 என்ற எண்ணில் நின்றது?

வெடித்த குண்டின் சாபம் அதில் ஈடுபட்டவர்களுக்கு உரிய தண்டனையை அளிக்கும் என்று கூறப்பட்டது. 9 என்ற எண்ணுடன் ஈஸ்டர் குண்டு சாபத்தின் கதையை அவ்வப்போது கேட்கும் போது 2019 அரச தலைவருக்கான தேர்தல் வந்தது.

ஈஸ்டர் வெடிகுண்டுக்கு உடந்தையாக இருந்ததாகக் கூறப்படும்ம் நபர்கள், ஈஸ்டர் வெடிகுண்டின் சோகமான நினைவுகளை முகநூல் பக்கங்களின் வாயிலாக வெளியிட்டு, அதனைத் தங்களின் தேர்தல் பிரச்சாரத்திற்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். எவ்வாறாயினும், அந்த இழிவான முயற்சி எதிர்பார்த்ததை விட வெற்றிகரமான முடிவுகளைத் தந்தது, கோட்டாபய ராஜபக்சவை 69 லட்சம் வாக்குகளால் வெற்றி பெறச் செய்த பயணம் அது.

பார்க்க. அங்கேயும், 9 என்ற எண்ணைப் பற்றி நாம் சிந்திக்க ஏதாவது இருக்கின்றது, இல்லையா? வேறு எந்த இலக்கமும் இல்லாமல், 9 ஆவது இலக்கம் கச்சிதமாக நடந்து 69 லட்சத்துடன் இணைக்கப்பட்டது. 9 இல் சேர்ந்து 69 லட்சம் வந்தது ஏன்? இது கொஞ்சம் விசித்திரமாக இல்லையா?

எண் 9 அங்கு நிற்கவில்லை. இணிதிடிஞீ–19 எனப்படும் விசித்திரமான நோய் அனைத்தையும் அழித்தது, முழு உலக பாரம்பரியத்துடன் இலங்கை மக்களின் வாழ்க்கையை தலைகீழாக மாற்றியது.

மக்கள் முகத்தில் முகமூடியுடன் வந்த கோவிட் –19 எனப்படும் தொற்று நோய், அனைத்து 9 எண்களையும் தாக்கியது. 9 உண்மையில் அங்கே தீயது என்று சொல்வதில் தவறில்லை.

69 இலட்சம் வாக்குகளை பெற்று மாபெரும் வீரனாக தனது ஆதிக்கத்தை கட்டியெழுப்பிய கோட்டாபய ராஜபக்ச மேலும் 9 இலக்கங்களுடன் வந்து கோவிட் 19 தொற்றுக்கு மத்தியில் புயலில் சிக்கி தோல்வியடைந்த தலைவர் என்பதை மிக விரைவாக நிரூபித்தார். அது புறக்கணிக்க முடியாத எண் 9 இன் மற்றொரு விசித்திரமான நிகழ்வு.

9 தனது புரட்சிகர பணியை அங்கிருந்து முடித்ததா? இல்லை. 9 என்ற எண்ணின் தீய சகுனங்கள் மீண்டும் இந்த நாட்டில் உள்ள ஒரு பிரபலமான குடும்பத்தின் உறுப்பினர்களுடன் சேர்ந்து, மிகக் குறைந்த காலப்பகுதியில் பல குழப்பங்களை உருவாக்கியது. அந்த குறுகிய காலத்தில் நடக்கும் என்று நினைத்துப் பார்க்காத தொடர் நிகழ்வுகள் சற்று மர்மமான முறையில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டன. மர்மமான நிகழ்வுகளின் தொடர் மே 9 ஆம் திகதி தொடங்கியது.

எண்ணெய்க்கான வரிசையையும் எரிவாயுக்கான வரிசையையும் தொடங்கிய ராஜபக்ச ஆட்சியில், கடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்கள் சிங்களப் புத்தாண்டுப் பண்டிகைக்கு முன்னதாகவே காலி முகத்திடலில் போராட்டத்தை தொடங்கினர்.

காலி முகத்திடல் போராட்டம் எதிர்பார்த்ததை விட பலமாக இருப்பதாக உணர்ந்த மகிந்த ராஜபக்ச, வீட்டுக்குச் செல்லாமல், தனக்கும் தனது கடற்படைக்கும் இன்னும் பெரும் பலம் இருப்பதைக் காட்டி, தனது பரிவாரங்களையும் அயோக்கியர்களையும் கொழும்புக்கு வரவழைத்தார். சோற்று பொதிக்கும் தனது கருத்துக்கும் மதிப்பளிக்கும் கூட்டத்தை அமர்த்திய மகிந்த, கடைசி வரை விடமாட்டேன் என்று பெருமிதத்துடன் கூறி, எண்ணெய் இல்லாத நாட்டில் போராட்டம் நடத்த முதல் தீப்பொறிக்கு பெற்றோல் ஊற்றினார்.

### அது எப்போது என்று நினைவிருக்கிறதா?

அது மே 9 ஆம் திகதி. அன்றுதான் மகிந்த அணியினர் போராட்டத்தில் ஈடுபட்ட இளையோர் மற்றும் அவர்களுக்கு ஆதரவானவர்களை விரட்டிச் சென்று தாக்கிய நாள். போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்திய பின்னர், நகரமெங்கும் தாக்குதல் நடத்தியவர்களை போராட்டக்காரர்கள் ஒன்று திரண்டு அடித்து நொறுக்கினர்.

9 என்ற எண்ணில் உள்ள சாபமா அல்லது தீமையா? எப்படி சொல்வது என்று தெரியவில்லை. எனினும் அந்த பெரும் அழிவுடன் மகிந்த ராஜபக்ச கடந்த மே மாதம் 9 ஆம் திகதி நடைபெற்ற போராட்டத்தின் தாக்குதல்களுக்கு அஞ்சி எதிர்பாராத வகையில் பிரதமர் நாற்காலியை விட்டு தலைமறைவானார்.

மகிந்தவின் விலகலுடன்'கபுடாஸ்' அல்லது பசில் காக்கா என்ற புனைப்பெயர் கொண்ட பசில் ராஜபக்ச கடந்த 9 ஆம் திகதி ஊடகவியலாளர் மாநாட்டை நடத்த வெளியில் வந்தார். அது ஜூன் 9 ஆம் திகதி. 'எல்லோரையும் விட சிறப்பாகச் செய்தேன்' என்று அதிகம் பேசிக் கொண்டிருந்த பசில், தனது பதவிகளுக்கு "-B-ye We will go and good bye" என்று கூறி விடைபெற்றுச் சென்றார். அந்த நாட்காட்டியில் பதிவு செய்யப்பட்ட திகதி ஜூன் 9 என்பதுதான் ஆச்சரியம்.

### மே 9, மகிந்த வெளியேற்றப்பட்டார். ஜூன் 9 அன்று பசிலும் சென்றார். ஜூலை 9 அன்று கோட்டா செல்வாரா?

தீய 9 எண்கள் நமக்குச் சொல்லும் இந்த சிறப்புக் கதை என்ன? ஈஸ்டர் வெடிகுண்டு வெடிப்பதற்கு முன், அதன் இரண்டு கைகளும் முதலில் கடிகார கோபுரத்தின் எண் 9 இல் நின்றன. 'கோவிட்–19' என்ற பெயருடன் 9 என்ற எண்ணைப் பகிர்வதன் மூலம் கொரோனா தொற்று நோய் முழு நாட்டிற்கும் அராஜகத்தைக் கொண்டு வந்தது.

### 'போராட்டமும் மகிந்தவும் 9 ஆம் திகதி பதவி விலகினார்களா?'

'பசில் ராஜபக்ச 9 ஆம் திகதியன்று பெரிய பெரிய கதைகளைச் சொல்லப் போனார்.'

'இன்னும் சில நாட்களில், 9 ஆம் திகதியில் நாடு முழுவதும் ஒன்று சேரும்.'

'9 ஆம் திகதியில் இன்னொருவராக கோட்டா வீட்டுக்குப் போவாரா?'

பல்வேறு முகநூல் பதிவுகளில் முதன் முதலில் இதுபோன்ற குறிப்புக்களை எழுத தூண்டியவர் கோட்டாபய ராஜபக்ச. ஜூலை 9 தொடக்கம் அவர்கள் கூறியது மற்றும் யூகித்தது போல், ஜூலை 9 நாட்டுக்கு சிறப்பு வாய்ந்த ஒன்றாக மாறியது.

நாடு முழுவதிலும் இருந்து எதிர்பாராத விதமாக வந்த மாபெரும் மக்கள் அலை, அரச தலைவர் மாளிகையை முற்றுகையிட்ட போது 'கோட்டா கோகம' முழக்கத்துக்கு தலைவணங்கி, கோட்டாபய ராஜபக்ச அனைத்தையும் விட்டுவிட்டு ஓடினார். நாட்காட்டியில் எண் 9 எழுதப்பட்ட ஒரு நாளில் அதுவும் நடந்தது.

### இவை ஏன் நடக்கின்றன?

மகிந்த ஏன் போராட்டத்தை தொடங்கிய 9 ஆம் திகதியை தெரிவு செய்தார் என்று தெரியவில்லை. போகமாட்டேன் என்று தெரிவித்து வந்த மகிந்த மே 9 மாலை ஏன் பதவி விலகினார் என்று தெரியவில்லை.

ஜூன் மாதம் 9 ஆம் திகதி விடைபெற பசில் ஏன் முடிவு செய்தார் என்று தெரியவில்லை.

போராட்டக்காரர்கள் 9 ஆம் திகதியை தெரிவு செய்த காரணமும் தற்செயல்.

எல்லாம் முடிந்து கடந்த 9 ஆம் திகதி கோட்டா கிளம்பினார்.

இது என்ன மாற்றம்? அன்றைய தினம் கொச்சிக்கடை தேவாலயத்தில் 9 என்ற இலக்கத்தில் இரு கைகளும் நின்ற போது இது நடக்கின்றதா?

ஈஸ்டர் சாபத்தில் இருந்து கோட்டாபயவும் ராஜபக்சக்களும் தப்பிக்க முடியாது என்று சொன்னதில் உண்மை இருக்கிறதா?

### 9 அந்த சாபத்தால் இப்படி நடக்கிறதா?

எதையும் உறுதியாகச் சொல்ல முடியாது. 9 வேறு என்ன மாற்றங்களைச் செய்யப் போகின்றது என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது. எவ்வாறாயினும், 9 என்ற இலக்கத்தில் ராஜபக்சக்களுக்கு அதிர்ஷ்டம் இல்லை என்றே கூற வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிரிக்க... சிந்திக்க...

## கடந்து போக....

